
# மாணவர் கட்டுரைகள்



வித்துவான்


பொன் முத்துக்குமாரன் பி.ஓ.எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேஸ்வரி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கட்டுரைகள்



வித்துவான்

**பொன் முத்துக்குமாரன்** பி.ஓ.எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுழிபுரம் பொன்னாலையம்பதியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வித்துவான் பொன். முத்துக்குமாரன் BOL அவர்களின் நூற்றாண்டு நினைவு வெளியீடு.*

# பதிப்புரை

தமிழ் அறிஞர் பொன். முத்துக்குமாரன் அவர்கள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டத்தையும் (1943), அப் பல்கலைக் கழகத்தில் BOL (1952) பட்டத்தையும் பெற்றவர். இவர் தமிழகத்தில் தமிழ்ப் புலமையிற் பேரும் புகழும் பெற்றிருந்த மகாமகோபாத்தியாய, முதுபெரும்புலவர், பண்டிதமணி, மு.கதிரேசன் செட்டியார், மற்றும் சொல்லதிகாரவிளக்கப் புலமை மிக்க பூவராகம்பிள்ளை போன்ற புலவர் பெருமக்களிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களை மரபு நெறி தவறாது பயின்றவர்.

இவ்வறிஞர், தமிழில் நல்ல கட்டுரைகள் எழுதுவதற்கென்று படைத்த "**மாணவர் கட்டுரைகள்**" என்ற இப்புத்தகம் 1957ம் ஆண்டு, யாழ்ப்பாணம் ஆனந்தா அச்சகத்தின் திரு. தி. ச. வரதராசன் அவர்களால் வெளியிடப்பட்டது.

இதன் மூன்றாம் பதிப்பை, அறிஞர் பொன். முத்துக்குமாரன் பிறந்த நூற்றாண்டு நினைவுக்காக வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றோம்.

**முத்துக்குமாரன் தயாநிதி**

மகேஸ்வரி வெளியீடு
சிட்னி, அவுஸ்திரேலியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | கட்டுரை எழுதுதல் | 1 |
| 2. | சுப்பிரமணிய பாரதியார் | 5 |
| 3. | பத்திரிகைகளும் அவற்றின் பயனும் | 10 |
| 4. | வீரத்திரு (சேர்)பொன் இராமநாதன் அவர்கள் | 15 |
| 5. | வானொலி | 21 |
| 6. | உண்மைவீரன் | 26 |
| 7. | செய்வனதிருந்தச் செய் | 31 |
| 8. | போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து | 36 |
| 9. | நாடகங்களும் அவற்றின் பயனும் | 40 |
| 10. | எனது கல்லூரி நாட்கள் | 44 |
| 11. | நாட்டுப்பாடல்கள் | 49 |
| 12. | நா.கதிரைவேற்பிள்ளை | 54 |
| 13. | கற்றது கைம்மண்ணளவு | 59 |
| 14. | இலங்கையின் புராதன நகரங்கள் | 64 |
| 15. | பெருமையும் சிறுமையும் தான்தரவருமே | 68 |
| 16. | நாட்டுப்பற்று | 73 |
| 17. | வீரப்பர் | 79 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. உலகசமாதானத்துக்காக உழைத்த ஒருவர் 84

19. நான் விரும்பும் நாடு (கற்பனை) 89

20. கிராம முன்னேற்றம் 95

21. பழந்துணி 100

22. தேர்த்திருவிழாக் காட்சி 104

23. எனது அச்சம் நிறைந்த அனுபவம் ஒன்று 108

24. நூல் நிலையம் 113

25. தந்தை தாய் பேண் 117

26. ஒரு பிச்சைக்காரனின் பகற்கனவு 121



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# கட்டுரை எழுதல்

## கட்டுரை எழுதலும் ஒரு கலை:

நயம்படப் பேசுவதுபோலவே திறம்பட எழுதுதலும் ஒரு கலை. எண்ணிய விஷயங்களை எழுத்து வடிவத்தில் அமைத்தல் இலகுவானதன்று. பலநூல்களைப் படித்த அளவிலோ நுட்பமான அறிவைப் பெற்ற மாத்திரத்திலோ செம்மையாக எழுதும் திறமையும் கைவந்துவிடாது. எழுத்தில் வன்மையும் சிறப்பும் பெறவேண்டுமானால் பல்காலும் எழுதிப்பழகல் வேண்டும். சிறந்த கட்டுரைகளைப் படித்தல் வேண்டும். அவற்றிலுள்ள நயங்களைச் சுவைத்தல்வேண்டும். ஒரு பொருளைப்பற்றி நாம் விரிவாக எவ்வளவோ அறிந்திருப்பினும், அதைப் பிறர் விரும்பிப் படிக்கும்வகையில் எழுதுதல் இலகுவான காரியமன்று. நாம் எண்ணுவது எளிதாயிருக்கும். ஆனால் எண்ணியபடி எழுதுவதும் சுவையாக எழுதுவதும் மிகமிகக் கடினம். நாம் ஒன்றை எவ்வாறு எழுதவேண்டும், அழகாக எடுத்துரைக்க வேண்டும் என்பதை முதலில் அறிந்துகொள்ளல் வேண்டும். திறமை கைவரும்வரை திரும்பத் திரும்ப எழுதிப் பயில்தல் வேண்டும்.

## இலக்கண அமைதியும் வாக்கிய முடிபும்:

சுவர் ஒப்ப செப்பமாக இருந்தால்தான் அதில் நாம் விரும்பும் சித்திரத்தை அழகாகத் தீட்டமுடியும். கரடுமுரடான சுவரில் எத்துணைச் சிறந்த ஓவியமும் எழில்பெற்று மிளிராது. கருத்தை வெளியிடுவதற்கும் இலக்கண அமைதிபெற்ற வாக்கியங்களே ஏற்றவை. திணை, பால், ஒருமை, பன்மை, மரபு ஆகியவற்றின் முடிபு பிழைபோகாது வாக்கியங்கள் அமைத்தல் வேண்டும். இலக்கண வரம்பு என்பதற்காகக் கடின சந்திகளையும் கருத்து எளிதில் விளங்காத சொற்களையும் வைத்து வாக்கியம் அமைத்தால், அது சுவை பயவாது ஒழியும். ஆகவே, எளிதாய் இனிதாய் ஒழுங்குடையதாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும் வாக்கியமே கருத்தின் சிறப்பைக் காட்டவல்லதாகும். சிலர் தம் கல்வியளவைப் பிறர்க்குக் காட்டும் எண்ணத்தோடு இயன்ற அளவு அருஞ் சொற்களைச் சேர்த்து வாக்கியங் கட்டுவர். அவ்வித வாக்கியங்களாலாய கட்டுரைகள் கற்போரது பொறுமையையும் பெருந்தன்மையையும் சோதிக்கும் கருவியாகுமேயன்றி உயர்ந்த கட்டுரைகள் எனப்படமாட்டா.

**ஓசைச் சிறப்பு மாத்திரமன்றிப் பொருட்சிறப்பும் உடைய சொற்கள்:**

கருத்தின் தெளிவிற்கு வழுக்கள் இல்லாத வாக்கியம் வேண்டப்படுதல்போல வாக்கியத்தின் வளத்திற்குப் பொருட்சிறப்புடைய சொற்கள் இன்றியமையாதன. செய்யுளில் ஓசைச் சிறப்புக்கென அமையும் மோனை, எதுகைகள் கட்டுரையிலும் அதே நயத்தினைத் தருதல் கூடும். அவ்வாறு அமைந்த கட்டுரை நாம் மெச்சும் அளவுக்குச் சிறந்த கட்டுரை ஆகாது. சிவப்பு, பச்சை முதலிய வண்ணங்கள் கண்ணுக்கினியன என்பதற்காக ஓவியத்தின் எல்லாப் பகுதியிலும் நிறையப் பூசினால் எப்படியிருக்கும்? இடத்திற்கேற்பவும், கருத்தின் அமைப்பிற்கேற்பவும் அவைகள் சேரின் மிக்க சுவையும் பயனும் உண்டாகும். சொற்களும் அவ்வாறே ஓசை நயத்திற்காகவும் சிறந்த சொல் என்பதற்காகவும் இருக்காமல் சிறந்த பொருளுக்காக இருத்தல் வேண்டும். எக் கருத்தை எச் சொல்லாற் கூறினால் ஏற்றதாக இருக்கும் என்று அறிந்து அதை அவ்வாறு கூறவேண்டும். ஒரு சொல் ஓரே பந்தியில் பல இடங்களிலும் வருதல் நல்லதன்று.

**உள்ளத்தில் உண்மையொளி இருத்தல்:**

ஒரு பொருளைக் கற்றவர் கூறும் முறை வேறு கல்லாதவர் கூறும் முறை வேறு. இது நாம் அனைவரும் அனுபவத்தில் கண்ட உண்மை. கற்றவர்கள் ஒரு பொருளை எவ்வாறு கருத்தில் தெளிவாக விளக்கினார்களோ அவ்வித விளக்கம் பாமரன் உள்ளத்திலும் உண்டாகும்படி தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறுவர். சோகம், வீரம், இன்பம் முதலிய சுவைகள் அவர்கள் பேச்சிலும் எழுத்திலும் வேண்டுமிடங்களில் அவ்வவ் உணர்ச்சியும் உண்டாதற்கு உவமை முதலிய அணிகளும் பிறவும் கட்டுரையில் இடம்பெற வேண்டும். எடுத்துக் கூறும் பொருள் நம் மனத்தில் நன்கு தெளிவாக விளங்கினாலன்றி நாம் கட்டுரையில் விளக்கமாக எழுதமுடியாது. உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்ற பாரதியின் கூற்றுக்கிணங்க, மனத்தின் தெளிவே வாக்கினதும் கட்டுரையினதும் தெளிவாகும். ஆகவே நாம் ஒன்றை அழகாக எடுத்துரைக்கவேண்டுமேல் அதைப் பன்முறையும் பலவாறும் ஆராய்ந்து நம் மனத்தில் தெளிவுபடுத்திக் கொள்ளல்வேண்டும். அதன் பயன்தான் நமது கட்டுரை அணிகளோடும் பந்திகளோடும் அழகுற்று விளங்குவது. மேலும், நாம் கூறும் பொருளை விரித்து விளக்குவதற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற அறிஞர்களது கூற்றுக்களை மேற்கோளாகக் காட்டல் சாலச் சிறந்தது. முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் பொருளையும் பொன்னே போற்றி எழுதின் நம் கருத்து வலிமை பெறும்.

**நிறைவு:**

எல்லாவற்றுக்கும் ஒரு முடிபு உண்டு. முடிபு இல்லாதது குறைப்பொருள், ஒரு பொருள் எத்துணை அழகுடையதாயினும் குறையாக நின்றால் அதனை யாரும் விரும்பார். கட்டுரைக்கும் நிறைவு வேண்டும். அந்நிறைவில் கருத்தின் நிறைவு இருக்க வேண்டும். முற்கூறியவற்றைத் தொகுத்துக் கூறுதல் எக்கட்டுரையையும் அழகு செய்யும். முதலில் தொகுத்துக் கூறி, இடையில் விரித்து விளக்கி, ஈற்றில் முடித்துக் கூறுதலாற் கட்டுரைப் பொருள் அதனைக் கற்போர் மனத்தில் சிறந்த பயனை உண்டாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# சுப்பிரமணிய பாரதியார்

## புலவர்களின் தோற்றம் இலக்கியத்தின் மறுமலர்ச்சி:

தமிழ் நாட்டில் பண்டுதொட்டு இன்றுவரை தோன்றியுள்ள இலக்கியங்கள் தமிழ்ப் புலவர்களின் அக வாழ்வையும் பண்பாட்டையும் எடுத்துக் காட்டுகின்றன. புலவர்களின் தோற்றம் இலக்கிய வரலாற்றின் ஒரு புதிய அத்தியாய ஆரம்பமெனலாம். கபிலரும் பரணரும் அவர் போன்ற கவிஞரும் கடைச்சங்க நாளில் தோன்றினார்கள். அவ்வறிஞர்களின் கவிதைகள் அகப்பொருளையும் புறப்பொருளையும் பேசின. வள்ளுவரின் பிறப்புத் தமிழ்மறையென்ற புது நூலைத் தந்தது. கம்பரும் சேக்கிழாரும் கடவுட் கொள்கையையும் காவியச் சிறப்பையும் கலந்து தனிப்பெரு நூல்கள் தந்தனர். தமிழிலக்கியம் இவ்வாறு காலத்துக்குக் காலம் தன் வடிவிலும் தன்மையிலும் மலர்ச்சியும் வளர்ச்சியும் பெறலாயிற்று. பாரதியார் பிறந்தார். இலக்கிய மலர்ச்சி மாத்திரமன்று, பாட்டின் போக்கிலும் ஒரு புரட்சி பிறந்தது. எளிமைப் பண்பிற்குப் பாரதியார் பாட்டில் உருவம் கொடுத்தார். இனிமைச் சுவையை எழுத்தெழுத்தாகத் தொடுத்தார். பண்டிதர்க்கேயன்றிப் பாமரர்க்கும் இலக்கிய இன்பைப் பகிர்ந்தூட்டினார். சுப்பிரமணிய பாரதியார் பாடல்கள் இலக்கியச் சொல்லோவியங்கள் மாத்திரமல்ல, மக்கள் வாழ்வை மலரச்செய்த பருவமழை என்றே கூறலாம்.

## விளையும் பண்புகள் இளமையில் அரும்புதல்:

சங்கம் இருந்து மறைந்தாலும் தமிழ்ப்புலவர் பிறந்தோங்கும் தண் பாண்டி நாட்டிலே எட்டய புரமென்பது ஓரூர். அவ்வூரில் புலவர்களேயன்றி அனைவரும் தமிழ் நூல்களின் பயனைத் துய்த்தவர்கள். அவர்கள் மத்தியில் சின்னச்சாமி ஐயர் என்ற அந்தணர் வாழ்ந்தார். வலம்புரியிலிருந்து மதிப்புயர்ந்த முத்துப் பிறத்தல்போல, செந்தமிழின் சுவை தெரிந்த அவ்வந்தணர்க்கு ஒரு செல்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் பிறந்தார். தமிழை வளர்த்த முருகவேளின் நினைவாகத் தந்தையார் அவர்க்குச் சுப்பிரமணியன் என்ற பெயரைச் சூட்டினார். பருவமறிந்து தந்தையார் அவனைப் பள்ளிக்கனுப்பினார். வீட்டிலுள்ளபோது சிறுவனுக்குத் தாமே பல நூல்களைப் போதித்தார். வயது வளர வளர மைந்தனின் இலக்கிய அறிவும் இலக்கணப் புலமையும் உயர்ந்தேறின. விளையும் பயிரை முளையிலே தெரியும் என்றபடி இளமைப் பருவத்திலேயே பள்ளி மாணவனாம் சுப்பிரமணியன் பாட்டுக்கொரு புலவனாய்ப் பாரதியாகிவிட்டார். பாட்டுக்களை நவநவமாகப் புனையும் பாரதியார்க்குப் பள்ளிப் படிப்பில் உள்ளம் பதியவில்லை. ஆங்கிலப் படிப்பு வேம்பெனக் கசந்தது. செலவும் தந்தைக் கோராயிரம் சென்றது. அவர்க்குத் தீமை பல்லாயிரம் ஆனது. ஆகவே, ஆங்கிலப் பள்ளியை நீக்கி, ஆரியம் கற்கக் காசியை அடைந்தார். அங்கும் அவரது கல்வி தழைக்கவில்லை. தென்னாடு திரும்பி மதுரையைச் சேர்ந்து, செந்தமிழ்ப் போதகாசிரியராய்ச் சேவை செய்தார். சிலநாள்களே கழிந்தன. இந்திய மக்களின் இன்னல்கள் அவர்தம் சிந்தையை வருத்தின. நாட்டுக்காக வாழப்பிறந்தவர் கூட்டில் அடைத்த குயில்போல் வீட்டில் இருப்பாரா? மாதந்தோறும் ஊதியமிக்க வேலையைத் துறந்தார். பத்திரிகையாசிரியராய்த் தம் கருத்துக்களைப் பரப்ப முயன்றார். "சுதேசமித்திர"னின் உதவியாசிரியராயும் "இந்தியா"வின் ஆசிரியராயும் சேவைகள் புரிந்தார்.

பாரத மக்களின் அடிமைத் துயரைப் பாட்டுக்களாலும் மேடைப் பேச்சுக்களிலும் விரித்துரைத்தார். உணர்ச்சிமிக்க பாட்டின் மூலமும் உறுதிமிக்க எழுத்தின் மூலமும் உரிமை விரிக்கும் பேச்சின் மூலமும் பாரதியார் பாரதத் தமிழ்நாட்டை விடுதலைப் போராட்டத்தில் விழிப்புறச் செய்தார். பாரதியின் வீரக் குரல் பாமரனைத் துயிலெழுப்பியது: பதவியிலிருந்த ஆட்சி வெறியர்களையும் பயமுறுத்தியது. எனவே அதிகார வர்க்கம் அடக்குமுறைச் சட்டத்தாற் பாரதியை ஒடுக்கப் பார்த்தது. பயன் கிடைக்கவில்லை. புரட்சிக் குரல் எழுப்பிய புதுமைக் கவிஞர் புதுச்சேரிக்குப் போயிருந்துவிட்டார். அங்கிருந்து அவர் பாடிய பாக்கள் அனந்தம். பாரதியார் மறைந்திருந்தாலும் அன்னாரின் பாடல்கள் நாடெல்லாம் பரவின் வீடெல்லாம் ஒலித்தன. தெருவெல்லாம் தமிழ் முழக்கம் ஆனது. ஒரு புலவர் தெரிந்த ஏழைக் கவிஞர் மக்கள் எல்லார் உள்ளத்தையும் தொட்டார். மூடநம்பிக்கையை ஓட்டினார். தமிழ்ப் புலவர் வரலாற்றில் இதுவே முதலானது. இதனால் பாரதியார் தனியிடம் பெற்றார். கவிச் சக்கரவர்த்தி என்றால் அது கம்பனையே குறிப்பதுபோலவும், நாவலர் என்றால் அது ஆறுமுக நாவலரையே குறிப்பதுபோலவும், பாரதியார் என்றால் அது சுதந்திரக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரையே குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதி பாடல்கள் வாழ்ந்தோரை வியத்தலோடு தாழ்ந்தோரை உயர்த்தலும் செய்வன:

பாட்டுப் பாடுதலில் இருவகை உண்டு. ஒன்று இயற்கைச் சுரப்பினால் எழுவது; மற்றது செயற்கை ஆற்றலால் வருவது. பாரதியார் இயற்கைப் புலவர். அவர் பாடல்கள் இலக்கணப் புலவர்க்கேயன்றி எழுத்தறிவில்லாத ஏழைமக்களுக்கும் இனிப்பவை. முன்னோர் சென்ற முறையிலேயே செல்லாது காலத்துக்கேற்ற மாற்றமும் மலர்ச்சியும் பெற்றுக் களிப்பூட்டுவன. மன்னர்களையும் வள்ளல்களையும் மாத்திரம் புனைந்து நில்லாது மக்களையும் வளநாட்டையும் வாழச் செய்வன. அவற்றில் கண்ணனைப் பற்றியன சில. கண்ணம்மாவைப் பற்றியனவும் சில. தமிழ்மொழியைப் பற்றியன சில. தமிழினத்தைப் பற்றியனவும் சில. போரைப்பற்றி மாத்திரமன்றி ஏரைப்பற்றியும் சில. ஆண்மையின் ஆற்றலை மாத்திரமன்றிப் பெண்மையின் பெருமையைப் பற்றியும் சில. அவர் பாடாதன இல்லை. அவர் பாடலைப் படியாதவரும் இல்லை.

## எளிமைக்கு உருவமாய் இனிமைக்கு வடிவமாய்ப் பாடல் அமைதல்:

அவரது பாடல்கள் மிக எளிமையானவை. மிகமிக இனிமையானவை. நாம் சிலரது பாடல்களைப் பார்க்கிறோம். அவை தேங்காயைப்போல் உரித்து உடைத்துப் பிழிந்த பின்பே சுவையை ஓரளவு தருகின்றன. பாரதியார் பாக்களோ பால்போலவும் திராட்சைப்பழம் போலவும் சிரமம் சிறிதும் தராது தேனினும் சாலத் தித்திப்பன. அவற்றைச் சுவைப்பதற்கு அகராதியின் உதவியும் வேண்டுவதில்லை. அறிஞர் துணையும் வேண்டுவதில்லை. படிப்போர் அறிவினளவாகப் பலபடச் சுவை தருவன. ஒரு தொடரை நோக்குவோம். "ஆதியில் உலகம் முழுதும் நிலவிய அமிழ்தெனும் தமிழ் மொழியே" என்ற அடியில் பாரதியார் தமிழின் பெருமையையும் சுவையின் அருமையையும் தமிழ் மக்களுக்கு ஊட்டுகின்றார். "அமிழ்தெனும் தமிழ்மொழி" என்பது எத்துணை அருமையான வாக்கு. தமிழ் அமிழ்து போன்றது மாத்திரமன்று, அதனைப் பலமுறை (தமிழ் தமிழ் தமிழ் என) ஒலிக்க அமிழ்தமிழ்தமிழ்தென என இனிக்குமாம்! கவிஞரின் வாக்கிலே சொற்கள் களிநடம் புரிகின்றன அல்லவா!

## வினை பயன் நுகராது புகழுடம்பு பெறுதல்

பாரதத் தமிழ்நாட்டின் உறங்கிய உள்ளத்திற்குப் பள்ளி எழுச்சி பாடிய பாரதியார் பல்லாண்டு வாழ்வார் என்று அனைவரும் ஆசைப்பட்டார்கள். ஆனால் விதியின் விளைவு வேறாக முடிந்தது. சென்னையில் உள்ள திருவல்லிக்கேணியில் அவர் வாழ்ந்த நாளில் ஆனை ஒன்றின் தாக்குதலுக்கு ஆளானார். விடுதலை, விடுதலை என்று வீரக் குரல் எழுப்பிய பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் விடுதலைக்கு முன் அமரரானார். அவர் விதைத்த விடுதலை உணர்ச்சி விளைந்து பயன் தந்ததை அவர் கண்காணக் கொடுத்து வைக்கவில்லை. அவர் வளர்த்த மொழிப் பற்றும் இனப் பற்றும் செழிப்புற்றோங்குதலை அவர் நா வாழ்த்துதற்கின்றில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# பத்திரிகைகளும் அவற்றின் பயனும்

நாகரிக நாடுகளிலும் பெரிய நகரங்களிலும் மக்களின் அன்றாட வாழ்விலே பத்திரிகை இன்றியமையாத பொருளாகிவிட்டது. காலை எழுந்ததும் பல் துலக்குதல், நீராடுதல், உணவருந்துதல்போல் பத்திரிகை வாசித்தலும் மக்களுக்கு அவசிய கருமமாகிவிட்டது. பலர் பல்வேறு நோக்கத்தோடு பத்திரிகையைப் படிக்கின்றார்கள். செய்திகளை அறிய ஆவலுறுவோர் சிலர்; அரசியல் விஷயங்களை அறிய அவாவுவோர் சிலர்; விளம்பரங்களை நோக்க விழைவோர் சிலர்; விலை விபரங்களைப் பார்க்க விரும்புவோர் சிலர்; கட்டுரைகளைப் படிப்போர் சிலர்; கதைகளைச் சுவைப்போர் சிலர். இவர்கள் எல்லோருக்கும் பத்திரிகை ஏற்ற விருந்தாக இருக்கிறது. பத்திரிகை பார்க்காவிட்டால் அற்றைநாள் மகிழ்ச்சியற்ற நாளாக அவர்கள் கருதுவர். சிறுவர் முதல் பெரியோர்வரை, நாட்கூலியாளன் முதல் நாட்டையாளும் மந்திரிகள்வரை எல்லோரும் பத்திரிகையை முகமலர்ச்சியோடு வரவேற்கிறார்கள்.

**அரசியல் அறிவிப்புக்களுக்காகத் தோன்றி அறிவை வளர்க்கும் சாதனமாய் அமைதல்:**

பத்திரிகைகள் அரசியற் செய்திகளையும் அறிவிப்புக்களையும் தாங்கிய அரசாங்க வெளியீடாக இருந்தன. ஆட்சிமுறையில் மாற்றமும், மக்கள் வாழ்வில் மலர்ச்சியும் ஏற்பட பத்திரிகையின் தோற்றத்திலும் நோக்கத்திலும் மாறுதல்களும் வளர்ச்சியும் உண்டாயின. சுதந்திரமடைந்த நாடுகளில் மக்களின் சொந்தக் கருத்துக்களையும் செய்திகளையும் வெளியிட உரிமை பிறந்தது. அரசியல் விளக்கங்கள், அபிப்பிராயங்கள், கண்டனங்கள் எனப் பல்வேறு துறைகளில் பல அறிஞர்கள் எழுதினார்கள். பத்திரிகையின் உரிமைகளும் கடமைகளும் விரிவடைந்தன. மக்களின் போக்கை மாத்திரமன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களையாளும் மன்னரின் போக்கையும், கண்டிக்கப் பத்திரிகைகட்கு உரிமை உண்டாயது. தன்னாட்டுத் தலைவர்க்கன்றிப் பிறநாட்டுக் கொடுங்கோலர்க்கும் பத்திகைகள் கூசாது இடித்துரைக்க இயலும். மேனாடுகள் சிலவற்றில் பத்திரிகைகளின் சுதந்திரம் மிகமிக விரிவடைந்தது. நீதிமன்றங்களில் முடிவான தீர்ப்பை எதிர்த்துக் குறைகூறவும் அந்நாட்டுப் பத்திரிகைகட்குரிமை உண்டு. இதனால், பத்திரிகைகள் நாட்டு மக்களுக்கும் ஆட்சியாளர்க்கும் ஒரு வகையில் நன்மந்திரி போலவும் அமைகின்றன. அன்று அரமனையில் பிறந்த பத்திரிகை இன்று நாட்டு மக்களின் மத்தியில் நல்ல தோழனாக விளங்குகின்றது. நடுவுநிலையான பத்திரிகையை வேற்றுநாட்டாரும் விரும்பிப் படிக்கிறார்கள்; விரைந்து வரவேற்கிறார்கள்.

## ஒன்றாய் முளைத்தெழுந்து பலவாய் விரிந்துயர்தல்:

பத்திரிகைகளில் சில நாடோறும் வெளிவருவன. சில வாரமிருமுறை வெளிவருவன. சில வாரமொருமுறை வெளிவருவன. சில இரு வாரத்துக்கொருமுறையும் சில மாதமொருமுறையும் வெளிவருவன. இரண்டு அல்லது மூன்று மாதத்துக்கொருமுறை வெளிவருவனவும் சில உள. நாள் வெளியீட்டில் அரசியற் செய்திகளும் அன்றாடப் புதினங்களும் விளம்பரங்களும் காணப்படும். வார வெளியீட்டில் அரசியல் பற்றிய பிரதான கருத்துக்களும், சிறுகதைகளும் தொடர்கதைகளும், கட்டுரைகளும் இடம்பெறும். மாத வெளியீடுகள் பெரும்பான்மையும் வாரவெளியீட்டை ஒத்திருக்கும். சில பத்திரிகைகளில் வார வெளியீட்டிலும் சிலவற்றின் மாத வெளியீட்டிலும் உள்ள பாலர் பகுதி சிறுவர்களுக்குப் பெரும் மகிழ்வூட்டும்.

## சிறந்த பண்பும் விரிந்த நோக்குமே செல்வாக்கின் காரணம்:

பத்திரிகைகளில் வெளியாகும் விஷயங்களிலெல்லாம் சிகரமாயுள்ளது பத்திராசியர் கட்டுரை. கட்சிச்சார் பற்று இலட்சிய வாழ்வுக்கழைத்துச் செல்வதே கட்டுரை இலக்கணம். இக்கட்டுரை படிப்போர்க்குச் சிறந்த பயனைத் தருகிறது. சிக்கலான பிரச்சினைகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து விளக்கம் தருகிறது. அதனால் மக்களனைவர் கவனத்தையும் ஒருமுகப்படுத்துகிறது. கல்வியையும் அனுபவத்தையும் துணைக்கொண்ட ஆலோசனையைக் கூறுகிறது. ஒரு பத்திரிகையின் ஆசிரியர் கல்வியறிவும் அனுபவமும், நடுவுநிலைக் கொள்கையும், எழுத்து வன்மையும் சிறக்கப் பெற்றிருந்தாலன்றி பத்திரிகையைத் திறம்பட நடத்துதல் சாலாது. எவ்வளவுக்கு எழுத்து வன்மையும் நடுவுநிலைப் பண்பும் உடையவராயிருக்கின்றாரோ அவ்வளவுக்கு அவரது பத்திரிகையின் செல்வாக்கும், மதிப்பும் வியாபகமும் விரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்"*

என்பது தமிழ்மறை. ஆசிரியனின் எழுத்து வன்மை அரசனையும் அடிபணியச் செய்யும். மக்களிடையே மாறுபட்ட கொள்கையும் பிணக்கும் ஏற்பட்ட காலத்து நடுநின்று நன்மை கூறுதலால் நீதிபதிபோலவும், சிக்கலான வேளைகளில் எதிர்வருவதை எடுத்துரைத்தலால் நன்மந்திரிபோலவும் தவறான வழியில் செல்லும் சமுதாயத்தை இடித்துரைத்து ஏற்ற புத்தி கூறுதலால் இனிய நண்பன்போலவும் பத்திரிகை விளங்கவேண்டும்.

**கலையறிவையும் கலைநுகர்ச்சியையும் காக்கும் கருவி:**

பத்திரிகைகள் ஒரு நாட்டின் மொழி, இலக்கியம், கலை, சமயம், பண்பாடு ஆகியவற்றை வளர்ப்பதிலும் பெருந்துணை புரிகின்றன. மக்களிடையே தாய்மொழிப் பற்றையும் மொழி வளர்ச்சியையும் தூண்டுகின்றன. சங்கீதம், நடனம், சிற்பம், ஓவியம் முதலியவற்றைக் கட்டுரைகளின் மூலமாகவும், விமர்சனங்களின் மூலமாகவும் ஊக்கப்படுத்துகின்றன. கதைகளும் கவிதைகளும் எழுதும் எழுத்தாளர் உலகத்தை ஆதரித்தும், மக்கள் அவற்றைப் படித்துச் சுவை நுகர்ச்சி ஏற்பட வாய்ப்புக் கொடுத்தும் துணை செய்கின்றன. பொய்ப் பிரசாரமும் போலிக் கொள்கையும் நாட்டில் தலையெடுக்காமல் தடுக்கின்றன. பத்திரிகைகளில் வரும் பிரயாணக் கட்டுரைகள் படிப்போர்க்குப் பிறநாட்டுச் சிறப்புக்களை எடுத்துக் காட்டி, பிரயாணத்தில் ஆர்வத்தை ஊட்டுகின்றன. ஆராய்ச்சிக் கட்டுரைகள் அறிஞர் சிந்தனையைக் கிளறுகின்றன. பத்திரிகைகளை ஒருவர் தொடர்பாகப் படித்தலினால் அரசியல், பொருளாதாரம், இலக்கியம், கலை, பூகோளம், விஞ்ஞானம் ஆகிய பல துறைகளிலும் நல்லறிவைப் பெறுகிறார். வேறு வேறு நாடாகவும், வேறு வேறு கண்டமாகவும் விரிந்து கிடக்கும் இவ்வுலகம் பத்திரிகையின் மூலம் ஓரே உலகமாய் நம்மறிவிற்குட்பட்டதாகிறது. நம்வீட்டில் இருந்துகொண்டே உலகத்தின் பல்வேறு பாகங்களிலெல்லாம் உள்ள மக்களின் அன்றாட வாழ்வையும் நாகரிகத்தையும் நாம் அறிகிறோம்.

**முடிவுரை:**

பல நூல்களைப் படித்த பண்டிதரும் ஒரு நூலும் அறியாத பாமரரும், பத்திரிகையைப் படிக்க வேண்டும். பத்திரிகையைப் பாராதவர்கள் உலக அறிவு இல்லாதவரென்றும் பிற்போக்கான வாழ்வுடையவரென்றும் இகழப்படுவர். பத்திரிகையானது படித்துப் பொழுதுபோக்க விரும்புவோர்க்கு ஓர் இன்ப சாதனமாய், அறிவை நாடுவோர்க்கு அரிய நூலாய், வளரும் கலைகளுக்கு வாய்த்த ஊன்றுகோலாய்த் திகழ்கின்றது. ஆகவே, பத்திரிகையில்லாத சமுதாயமாவது நாடாவது முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பதாகக் கருதப்படமாட்டாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# வீரத் திரு.(சேர்.) பொன் இராமநாதன் அவர்கள்

ஒரு நாடு செல்வத்திற் சிறந்திருப்பினும், இயற்கையழகில் இணையிற் றிருப்பினும் அது நல்ல நாடு என்னும் பெயரைப் பெறமாட்டாது. நல்ல மக்களையுடைய நாடு என்னும் பெயரைப் பெறமாட்டாது. நல்ல மக்களையுடைய நாடுதான் நன்னாடு என்னத்தகும். எங்கே அறிவுடை நன்மக்கள் வாழுகிறார்களோ அங்கேதான் நல்வாழ்வு காணப்படும் "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்று கூறுகின்றது புறப்பாட்டு. நாம் வாழும் ஈழநாடும் வளநாடு என்று சொல்லத்தக்கதே. ஈழத்தின் தலை என்று கூறப்படும் யாழ்ப்பாண நன்னாட்டிலே உலகம் போற்றும் அறிஞர் பலர் தோன்றினார்கள். மதிநலமும் குணநலமும் வாய்ந்த சான்றோர் வரிசையில் வீரத் திரு. இராமநாதன் அவர்களது தோற்றம் மிக்க விளக்கமானது. அவருடைய அடிச் சுவடுகள் இன்னும் அழியவில்லை. அன்னாரது புகழும் அழியாது சுடர் விடுகின்றது. அதற்குக் காரணம், அவரது கல்வியறிவு, மதிவன்மை, பேச்சுச் திறன், சைவப்பற்று, உயர் குணங்கள் ஆகியவையே இராமநாதன் அவர்கள் இவ்வுயரிய பண்புகளால் தாம் உயர்ந்ததோடு தாம் பிறந்த தாய்நாட்டின் தரத்தையும் உயர்த்தினார்.

கற்றவர் மலிந்த யாழ்ப்பாணநாட்டில் மானிப்பாய் மாண்பு நிறைந்த ஒரூர். அவ்வூரில் முன்றோன்றி மூத்த குடிகளுள் இராமநாதனவர்களின் முன்னோர் சிறந்திருந்தனர். அவர்களில் பொன்னம்பலம் என்பார் தம் தொழில் நயம் கருதிக் கொழும்பு மாநகர்சென்று வதிந்தார். அவரது அரும் புதல்வர் மூவரும் அங்குத்தானே கல்வி பயின்றனர். அவர்களில் இராமநாதன் அவர்கள் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சியுற்றவராய் மிக்க மதியூகியாய்த் திகழ்ந்தார். கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அவர் சட்ட நூற்கல்வியில் பட்டம் பெற்று உயர்தர நியாயவாதியுமானார். வழக்குரைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்மையினால் அவர்க்குப் புகழும் பொருளும் பெருகின. தன்னொப்பாரில்லாத் தலைவன் என்று தமிழ் மக்களும் பிற மக்களும் பெருமிதத்தோடு நலம் பாராட்டும் பெருமையைப் பெற்றார்.

அக்காலத்தில் இலங்கை ஆட்சிமுறையில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. மக்களாற் தெரிந்தெடுக்கப்பட்டோர் சட்ட நிரூபண சபையில் இடம்பெற்றனர். இராமநாதன் அவர்கள் இலங்கையிலுள்ள படித்த மக்களின் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டுச் சட்ட நிரூபண சபையிற் சேர்ந்தார். இப்பெரியாரின் ஒப்பரிய சேவை அச்சபையில் மெச்சத்தக்க நன்மையளித்தது. தம் சொல் வன்மையாலும் மதி நன்மையாலும் எதிர்த்தோரைப் புறங்கண்டார். இவருடைய பேச்சை எதிரிகளும் மெச்சினர். இவர்க்கு எதிர்மாற்றம் கூற அரசாங்கமும் அஞ்சியது.

இராமநாதன் அவர்களின் சொல் வன்மையைப் புகழாதவர் இல்லை. கேட்டார்ப் பிணிக்கும் தகைவாய்க்கேளாரும் வேட்ப அவர் மொழிந்தார். மேடையிலே அவர் நின்று பேசுங்கால், கற்றவரேயன்றிக் கல்லாதவரும் "இதுவன்றோ பேச்சு!" என்று மிக மகிழ்ந்தனர். கடுமையான விவாதங்களில் இராமநாதன் அவர்களது சொல்லே வெல்லும்.

***"மதிநுட்பம் நூலோடுடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற்பவை"***

என்றபடி அவர்க்கு அரியது யாதும் அந்நாளில் இல்லை. ஒருமுறை அவர் இங்கிலாந்து சென்றபோது ஒரு வெள்ளையர் அவரைச் சந்தித்தார். அவ்வெள்ளையர் கீழ் நாட்டவரின் கருநிறத்தை இகழ்ந்தும் தந்நாட்டவரின் வெண்ணிறத்தைப் புகழ்ந்தும் பேசினார். அப்பொழுது நந்தமிழ்ப் பெருமகனும் நாணியடங்கியிருக்கவில்லை. சிரித்துப் பழித்த அவ் வெள்ளையர் முன் சிங்கமாகிவிட்டார். வெள்ளையரின் வெள்ளை மதியை ஒருதாரணத்தால் எள்ளி நகையாடினார். கண்மணியின் நிறம் தமிழன் நிறம் என்றும் கருவிழியைச் சுற்றியுள்ள வெற்றுச் சதையின் நிறமே வெள்ளையர் வியக்கும் நிறம் என்றும் வெளுத்த உடல் படைத்த வெள்ளையர் கூட விழி கறுத்திருக்கவே விரும்புவர் என்றும் கூறினார். இவ்வாறு கருமையின் பெருமையையும் வெண்மையின் வெறுமையையும் நிரூபித்தார். வெள்ளையர் அவ்வளவில் வெட்கினார்.

இராமநாதன் அவர்கள் பரந்த உள்ளம் படைத்தவர்; இலங்கைவாழ் பல்வேறு இனத்தவரையும் தம் சகோதரராகப் போற்றியவர். இலங்கை மக்களின் நன்மைகுறித்து இவர் இயற்றிய அருஞ்செயல்கள் பலப்பல. ஒருமுறை சிங்கள மக்களுக்கும் சோனக மக்களுக்கும் இடையே பெருங்கலகம் எழுந்தது; பேராபத்து ஏற்பட்டது. இலங்கைத் தேசாதிபதி நடுநின்று நீதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவில்லை. அவ்வமயம் இராமநாததுரையவர்கள் தேசாதிபதியின் தீர்ப்பைக் கண்டு உள்ளந் துடித்தார். இங்கிலாந்து சென்று மகாராணியைக் கண்டார். சிங்கள மக்களின் நியாயத்தை வாதித்து வெற்றி கண்டார். அதன் பயனாக, அவர் இங்கிலாந்திலிருந்து திரும்புமுன் அத்தேசாதிபதியாலேயே சிங்களத் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். கொழும்பிலுள்ள சிங்களத் தலைவர்களும் பொதுமக்களும் இராமநாதன் வரவை எதிர்பார்த்து இராச வரவேற்புக்கேற்பாடு செய்தனர். இராமநாதன் அவர்கள் கொழும்பு சேர்ந்ததும் அவரை இரதத்தில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்று நன்றி பாராட்டித் தங்கள் அன்பைப் புலப்படுத்தினர். அதனால், இராமநாதன் அவர்கள் தமிழரின் தனிப்பெருந் தலைவர் என்பது மாத்திரமன்றி, இலங்கை மக்கள் அனைவரதும் இதயபூர்வமான மதிப்புப் பெற்ற இலங்கையின் முடிசூடாமன்னர் என்பதும் உண்மையாயிற்று. இவ்விதமான இவரது சிறந்த பல சேவைகளைப் பாராட்டி அரசாங்கத்தார் வீரத் திருவாளன் என்ற "சேர்" பட்டத்தை அளித்து இவரைக் கௌரவித்தனர்.

இவரது சைவப்பற்றும் தமிழ் ஆதரவும் மலைவிளக்குப்போலப் பிரசித்தமானவை. இவர் தம் வாழ்நாள் முழுமையும் சைவசமயத்தின் ஆக்கத்தையும் தமிழினத்தின் நல்ல வாழ்வையுமே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்ச் சிறுவர்கள் தமிழையும் சைவத்தையும் தம் ஆங்கிலப் படிப்போடு கற்றுச் சிறக்க இரண்டு கலைபயில் கழகங் கண்டார். ஒன்று ஆண்பாலார்க்குரியது. மற்றது பெண்பாலார்க்குரியது. இலங்கையில் பெண்கள் கல்லூரி என்ற ஒன்றை முதலில் அமைத்தவர் இராமநாதன் அவர்களே. ஆண்களோடு பெண்களும் அறிவிலும் திருவிலும் சிறக்க வேண்டும் என்று இப்பெரியார் அன்றே அதற்கு வழிகண்டார். இதனோடமையாது தமிழ்நூல்கள் பல வெளியிட்டார்.

அக்காலத்தில் பிறமதமாகிய கிறீஸ்துவம் தமிழ் மக்களிடையே பரந்து கலந்தது. யாழ்ப்பாணத்தில் சைவாலயங்கள் இருப்பது போலக் கொழும்புத் தமிழ் மக்களுக்கு ஒரு சிவாலயமும் அந்நாளில் இல்லை. அதுகண்டு இப்பெரியார் கொழும்பு மாநரில் கருங்கல்லினால் சிறந்த சிற்ப வேலைப்பாடமைந்த பெரியதோர் சிவாலயம் எழுப்பினார். அதற்கு மானியமாக பல ஏக்கர் விஸ்தீரணமுள்ளதும் இலட்சக் கணக்கான ரூபா வருமானமுள்ளதுமான விளைநிலத்தைத் தானம் செய்தார். இலங்கையில் முன்னொரு காலத்தில் (1300 ஆண்டுகட்கு முன்) தலைசிறந்து விளங்கிய திருக்கேதீச்சரத் தேவாலயத்தப் புனருத்தாரணம் செய்தற்கு ஆவன செய்தார். இம்மட்டோ! அந்நாளில் சென்னை அரசினர்க்கும் வேதாரணிய ஆதீனத்தார்க்கும் பிணக்கு ஏற்பட்டபொழுது இவர் சென்னைத் தேசாதிபதியைக் கண்டு ஆலயத்தார்க்கு வெற்றியீட்டிக் கொடுத்தார். இவ்வாறு சைவம் வளரவும் சைவாலயங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளிரவும் இறுதிநாள் வரை இவர் இடையீடின்றி ஆற்றியவற்றைச் சாற்றவும் ஒண்ணுமோ?

உலகத்தில் பலர் தம்மையே பேணி தம் புகழையே நிலைநிறுத்த முயன்று முயன்று இறுதியில் இறந்தொழிந்து போகின்றார்கள். இராமநாதன் அவர்கள் தம்மையும் தம் நன்மையையும் மறந்து தம் நாட்டையும் தம் மொழியையும் தம் சைவ நெறியையும் காத்து இன்றும் அவர் இறவாதவராக விளங்குகின்றார்;.

***"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்***
***தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"***

என்ற அரிய உண்மையை அறியாதவர் பலர், அறிந்தவர் சிலரே. அச்சிலருள் இராமநாதப் பெரியாரும் ஒருவர். அவர் எழுப்பிய கலைக்கூடங்களும், கற்கோயில்களும் ஆற்றிய அருந்தொண்டும் இன்றும் இனிமேலும் அவர் நினைவுச் சான்றுகளாக நிலைபெற்று விளங்கா நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

## வானொலி

தேனீ தனது சிறந்த ஆற்றலாற் சித்திரமான கூட்டைச் செய்கிறது. தூக்கணாங்குருவி தனது தொழிற் திறமையால் வியக்கும் முறையில் தன் கூட்டை அமைக்கிறது. மனிதனும் தன் மதிநுட்பத்தால் விந்தை மிக்க செயல்களைச் செய்கிறான். மனிதனுடைய அறிவு விரியவிரிய அவனது வாழ்க்கைச் சாதனங்களும் நுட்பமாகவும் வனப்பு மிக்கனவாகவும் அமைகின்றன. சேய்மையிலுள்ளதை அண்மையிற் கொணர்தலும், பரந்து விரிந்து கிடப்பதை ஒருங்கு ஓரிடத்திற் காணுதலும் அவனால் முடியும். மனிதன் ஆராய்ந்த விஞ்ஞானம் அவன் காலடியில் வையத்தையே வழங்குகிறது. பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள அமெரிக்கரின் குரலை இன்று நாம் நம் வீட்டிலிருந்து கேட்கின்றோம். தில்லிநகரில் நிகழும் இன்னிசைவிருந்தை இங்கிருந்தே சுவைக்கிறோம். உலகின் பல கோணங்களில் நடக்கும் செய்திகளையெல்லாம் உடனுக்குடன் அறிகிறோம். இத்தனைக்கும் துணையாய கருவி யாது? அதுவே வானொலி.

மேனாட்டறிஞர்கள் இயற்கையின் ஆற்றலை அடக்கியாளவும் பயன்படுத்தவும் எடுத்த முயற்சிகள் எண்ணிறந்தன. அவற்றின் பயனாகக் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட நன்மைகளும் அளப்பில. இந்த வகையில், வானொலியைக் கண்டு பிடிப்பதில் அரும்பாடுபட்டவர் ஒருவர் இருவர் அல்லர். மூவர் பல்லாண்டாக முயன்றனர். முதலில், ஜேம்ஸ்கிளாக் மார்க்ஸ்வேல் என்பார் வான்வெளியிலுள்ள அலைகளின் செலவையும் இயல்பையும் கண்டறிந்தார். அதன் அடிப்படை உண்மையில், ஹென்றிச் ஹேட்ச் என்பார் முயன்று சிறிது வெற்றி கண்டார். இறுதியாக "மார்க்கோனி" என்னும் இத்தாலி தேசத்து விஞ்ஞானியே நாம் இன்று உபயோகிக்கும் வானொலியின் பிதா என்னும் பெருமையைப் பெற்றார். தொடக்கத்தில், செய்திகளை மாத்திரம் அறிய உதவிய இக்கருவி நாளடைவில், விஞ்ஞானிகளின் முயற்சியால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவகையில் பிரயோசனமிக்க பொருளாய் விட்டது. கப்பற் போக்குவரத்திலும் யுத்த காலத்திலும் இது இன்றியமையாததாய் இருந்தது. இப்போது வானொலியில்லாத வீடு நாகரிகமில்லாதவர் இடம் என்னும் அளவிற்கு இது மக்களின் அன்றாட வாழ்வில் எல்லோர்க்கும் சிறந்ததாய் விட்டது.

நாம் காலையில் எழுந்ததும் வானொலி நமக்கு வாழ்த்துக்கூறி இன்னிசையுடன் நம் நாளாந்த வாழ்வைத் தொடக்குகின்றது. நகரவீதிகளிலும் பொது மன்றங்களிலும் பூங்காக்களிலும் உணவுவிடுதிகளிலும் உல்லாச விடுதிகளிலும் வானொலி மக்களை மகிழ்விக்கின்றது. இன்னிசைகள், புதிய செய்திகள், அறிஞரின் பேச்சுக்கள், நாடகங்கள், விமரிசனங்கள், விளம்பரங்கள், ஆகிய பலதுறையில் எல்லோர்க்கும் நல்விருந்தளிக்கின்றது. சிறுவர் முதல் பெரியோர்வரை எல்லோரும் வானொலியின் வசமாய் விடுகின்றனர். வேலை செய்வோர் வானொலி வழங்கும் இசையின்பத்தில் மூழ்கி வேலைச் சிரமத்தை மறந்து செயலாற்றுகின்றனர். வேலையற்றோர் வானொலியின் மருங்கிலிருந்து அறிவும் இன்பமும் ஆரப்பெறுகின்றனர். நாட்டிலுள்ள ஏழைப் பாட்டாளி மக்களுக்கு அறிஞர்களையும், தலைவர்களையும் வானொலி அறிமுகப்படுத்துகின்றது. சுருங்கிய செலவில் நிரந்தரமான பயனை நாம் வானொலி மூலம் அடைகிறோம்.

வானொலியில் கேட்கும் ஒலி வானொலி நிலையத்திலிருந்து பரப்பப்படுகின்றது. நம் நாட்டில் வானொலி நிலையம் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படுகிறது. வானொலி நிலையத்தாரின் பிரதான நோக்கம் செய்திகளைப் பரப்புதலும் பிரச்சாரமுமாகும். நாட்டின் கலை, இலக்கியம், அரசியல், சமயம் ஆகியவற்றை முன்னேற்றுவதில் வானொலி நிலையத்தார் பெருந்தொண்டு புரிகின்றனர். சங்கீத ஒலிபரப்பு மக்களுக்கு இன்பமூட்டுவதோடு இசைக்கலையையும் வளர்க்கின்றது. இளம் இசைப்புலவர்களுக்கு வாய்ப்புக்கள் கொடுத்தும், இசையில் துறைபோய பெருங் கலைஞர்களுக்கு அடிக்கடி இடமளித்தும் இசைவல்லாரை ஊக்குவிக்கின்றது. நாட்டின் பல்வேறு பாகங்களிலும் விசேட காலங்களில் நடக்கும் சிறந்த இன்னிசை விருந்துகளையும் சொற்பொழிவுகளையும் அஞ்சல் செய்கின்றது. அதனால் விழாக்களுக்குச் செல்லமுடியாதவரும் வானொலி மூலம் விழா நிகழ்ச்சியை வீட்டில் இருந்தே அனுபவிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. வானொலி நிகழ்ச்சிகளில் நாடகங்களும் இடம்பெறுகின்றன. சுருங்கிய நேரத்தில் சுவைமிக்க முறையில் அமைந்த இந் நாடகங்களை நாம் செவிமூலம் அனுபவிக்கின்றோம். செய்தியொலிபரப்பு ஆங்கிலத்திலும் அவ்வப் பிரதேச மொழியிலும் நடத்தப்படுகின்றது. இதில் நாம் உலகச் செய்திகளையும் உள்நாட்டுச் செய்திகளையும் கேட்கிறோம். யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் இச்செய்தி ஒலிபரப்பினால் உண்டாகும் நன்மைகள் மிகப்பல. நம் இலங்கை வானொலி நிலையத்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபார ஒலிபரப்பு என்ற ஒரு புதிய நிகழ்ச்சியையும் சேர்த்துள்ளனர். சிறந்த பொருள்களைப் பற்றியும் அவை பெறும் இடங்களையும் நாம் இதன் மூலம் அறிகிறோம். மாணவர்களுக்குக் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரங்களில் அவர்க்குபயோகமான பாடங்கள் பற்றிய ஒலிபரப்பு நிகழ்கின்றது. கிராம நிகழ்ச்சியில் கிராம மக்களுக்கு இன்றியமையாத செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன. விவசாயம் கைத்தொழில் சம்பந்தமான தொழில் நுட்பங்களும் வழிவகைகளும் இந்த நிகழ்ச்சியில் தெளிவாக்கப்படுகின்றன. இந்திய வானொலி நிலையத்தில் இசைப் பயிற்சியும் நடைபெறுகின்றது. அதைத் தொடர்ந்து கேட்போர் ஓரளவு இசைஞானமும் பெறுவர்.

நம் முன்னோர்கள் அறியாததொன்றைஅடையாத ஒரு பொருளை நாம் பெற்றுப் பெரும் பலனடைகிறோம். வானொலி இக்கால அரசாங்கத்தின் ஒப்பற்ற பிரசார சாதனம். கலைஞர்களுக்கு ஊக்கம் உதவும் கருவி. சுவைஞர்களுக்கு இன்பமுதவும் ஓர் இன்ப ஊற்று. நம் நாட்டின் கலை வளர்ச்சியையும் அறிவு மேம்பாட்டையும் பிற நாட்டுக்குக் கொண்டு செல்லும் தூதுவன். அவ்விதமே பிறநாட்டு மக்களின் அபிலாஷைகளையும் வாழ்வின் வளர்ச்சியையும் நமக்கு எடுத்துக் காட்டும் கண்ணாடி. இவ்வித உயரிய வானொலி, வளர்ச்சியின் முடிவை எட்டிவிட்டதென்று கூறமுடியாது. இன்றும் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இதுவரை நாம் வானொலியில் ஒருவரின் ஒலியை மாத்திரம் கேட்டனுபவித்தோம். இப்போது ஒருவரின் உருவ நிழலைக் காணவும் விஞ்ஞானிகள் முனைந்து வெற்றிகண்டு விட்டார்கள். என்னே, விஞ்ஞானிகளின் வெற்றி!

---

* இக்கட்டுரை 1957ல் எழுதப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

## உண்மை வீரன் யார்?

மனிதனிடத்துள்ள உயர்ந்த பண்புகளே அவனுக்கு மாட்சியைத் தருவன. அகப்பண்புகள் நிறைவுறாத வழி ஒருவனுக்குப் புறக்கருவிகள் எவ்வளவு சிறந்திருந்தும் பயனில்லை. "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்றபடி அகவன்மையுடையோன் அற்ப புறக்கருவியைக் கொண்டும் வெற்றியீட்ட முடியும். இவ்வக வன்மையையே வீரம் என்று நாம் கூறுகின்றோம். இஃது ஆண்களிடத்து மாத்திரமன்றிப் பெண்களிடத்தும் காணப்படுவது. இஃது ஒருவன் கையில் தாங்கிய ஆயுதத்தின் வன்மையையும் தன்மையையும் கொண்டு கணிக்கப்படுவதன்று. ஆகவே, இஃது ஆயுதமற்றவனிடத்தும் அடங்கிக் கிடக்கும். எடுத்த கருமத்தை நிறைவேற்றுவதிலும், எதிர்த்த தடைகளை நிறைவேற்றுவதிலும், எதிர்த்த தடைகளை நீக்கி இறுமாந்து செல்வதிலும் இவ்வீரப் பண்பு ஓரளவு புலப்படும். ஒருவன் உண்மை வீரனாக மிளிரவேண்டுமானால் வீரத்தைக் காக்கும் விழுமிய குணங்கள் பலவும் அவனிடத்துப் பொருந்தியிருக்க வேண்டும்.

துப்பாக்கி தாங்கிப் போருக்குச் செல்பவனையே வீரனென்று பலர் கருதுவர். அவன் சிறுதும் அஞ்சாது பகைவரைக் கொன்று குவிப்பதையும் வீர மரணம் எய்துவதையும் வீரச்செயலென்று போற்றுவர். ஆனால், உண்மை அவ்வரில்லை. போர் வீரனும் செய்யமுடியாத போர் வீரம் ஒன்று உண்டு; அதனை மிகச் சிலரே செய்ய மாட்டுவர் என்கிறார் வள்ளுவர். "பகையகத்துச் சாவார் எளியர், அரியர் அவையகத் தஞ்சாதவர்" பகை முன் வெல்லுதலைவிட அவைமுன் சொல்லுதல் வீரர்க்கும் எளிதன்று. ஒருசாரார், படமெடுத்தாடும் நச்சுப் பாம்பினைப் பற்றிப் பிடிப்பேன் என்றும், உச்சிக்கிளையிலிருந்து ஊஞ்சலாடுவேன் என்றும், நடுக்காட்டில் நள்ளிரவில் உறங்குவேன் என்றும் கூறுபவனை வீரன் என்று எண்ணுவர். ஒருவனிடத்து அஞ்சாமை இருப்பதைக் கண்டுமாத்திரம் அவனை வீரன் என்று கூறிவிடல் தக்கதன்று. வெறியுற்றவரும், அறிவற்றவரும், வேறுவித உணர்ச்சிகளாற் தூண்டப்பெற்றவரும் அஞ்சாது நிற்கலாம். அவர்கள் அக்காரணங்கள் இல்லாதபொழுது பேடிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவர். அத்தகையோரின் வீரம் போலி வீரம் எனப்படும். உண்மை வீரம் என்பது நல்ல குணங்களின் அடிப்படையில் உருவாவது; தீய பயனைத் தராதது. ஆகவே அஞ்சாமை மாத்திரம் வீரமாகாது. அஞ்சுதல் வீரனுக்குப் புறம்பானதும் அன்று.

*"அஞ்சுவ தஞ்சாமை பேதமை அஞ்சுவது*
*அஞ்சல் அறிவார் தொழில்."*

என வள்ளுவர் பேசுகிறார். போலி வீரன் அஞ்சாது நிற்கிறான், அறியாமையினால் உண்மை வீரன் அறிவுடைமையினால் அஞ்சவேண்டுவதற்கு அஞ்சுகிறான். போலிவீரன் அஞ்சும், பொருள் வேறு; உண்மை வீரன் அஞ்சும் பொருள் வேறு.

உண்மை வீரனுக்குப் புலனடக்கம் இன்றியமையாதது. அவன் ஆசை, கோபம் முதலிய கீழ்க் குணங்களுக்கு அடிமையல்லன். கீழ்க்குணங்களை அடக்கமாட்டாதவன், எத்துணைப் பெரிய பகைவனை வென்றாலும் உண்மை வீரனாகான். இராவணன் எத்துணைப் பெரியன். ஆனால் அவன் உண்மை வீரன் அல்லன். அவன் கல்வியறிவுடையவன்; உடல் பலமுடையவன்; வர பலமுடையவன்; படை பலமுடையவன்; ஆயினும் பிறர்மனை நோக்காத பேராண்மை அவனிடத்தில் இல்லை. தன் புலன்களுக்கடிமையாகாத ஒருவன் தன்னைத் தியாகம் செய்யும் திண்மையும் உடையனாகிறான். தியாகம் என்பதே வீரத்திற்குச் சிறந்த உறுப்பாகும். தனது உடல், பொருள், இன்பம் அனைத்தையும் ஓர் உண்மை வீரன் உதறித் தள்ளுகிறான். முகத்திலும் மார்பிலும் பட்ட புண்ணை உண்மை வீரன் உவந்து வரவேற்கிறான் எனத் தமிழ் மறை கூறுகிறது. விழித்த கண்ணின் நேரே வேலை ஒச்சினால் அக்கண் விழித்தபடியே நிற்கிறான் உண்மை வீரன். இன்னல்கள் பல ஏற்பட்டாலும், இறுதியில் மரணமே வாய்த்தாலும் வீரன் மனம் சோர்வதில்லை.

*"இறப்பினும் திருவெலா மிழப்ப வெய்தினும்*
*துறப்பிலர் அறமெனல் சூரராதலே"*

என்ற இராமன் கூற்று இங்கே கவனிக்கத் தக்கது. இதை நம் காலத்தில் வாழ்ந்த ஓர் உண்மை வீரனின் வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்கின் இனிது விளங்கும். காந்தியடிகள் ஓர் ஒப்பற்ற வீரர். உண்மையையும், இன்னா செய்யாமையையும் உறுதியாக இறுதிவரை கைக்கொண்ட உத்தமர். அவர்க்கேற்பட்ட இன்னல்கள் எண்ணமுடியாதன ஏட்டில் அடங்காதன. ஈற்றில் ஒருவனால் நான்குமுறை சுடப்பட்டார். அப்போதும் அவர் அத்தனையும் பொறுத்து அறத்தைக் காத்து ஒத்து முகமலர்ந்து உதட்டில் சிரிப்பினோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இராமா, இராமா" என்ற அஞ்சலியோடும் ஆவி பிரிந்தார். செய்யும் நல்லறத்திற் சிறிதும் திறம்பாத உண்மைத் தீரர் ஆனார்.

உண்மை வீரன் எந்தப் பகைவனோடும் போராடுவதில்லை. பகைமைக் குணத்தோடுதான் போராடுவான். ஆகவே பகைவனைக் கொல்ல அவன் ஒருபோதும் விரும்பான். பகைமைக்கான கீழ்க்குணங்களை நீக்கி மேற்குணங்களை ஆக்கவே பாடுபடுவான். "பகைவனுக் கருள்வாய்நன்னெஞ் சே, பகைவனுக் கருள்வாய்" எனப் பரிந்து பாடுகிறார் பாரதியார். பகைவனைக் கொல்லவோ, அன்றி வெல்லவோ வாய்ப்பு நேர்ந்தாலும் உண்மைவீரன் அவனைத் திருத்தவும் நல்வழித் திருப்பவும் அருள் காட்டுகிறான். இராமனிடத்தில் அந்தப் பண்பு நன்கு மிளிர்கின்றது. போர்க்களத்தில் இராவணன் எல்லாமிழந்து நிராயுதனாக நிற்கிறான். இராமன் தனது ஓரம்பால் அவனைக் கொல்லவோ வெல்லவோ முடியும். ஆனால் அவன் வீரப்பண்பு இராவணன் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பளிக்கின்றது. "இன்று போய்ப் போர்க்கு நாளை வா" என இராமன் அருளோடு கூறுகிறான். இதிலிருந்து உண்மை வீரன் அறத்திற்கும் அருளுக்கும் புறமான வழியில் தன் ஆற்றலைச் செலவிடான் என்பது புலனாகிறது. அறத்திற்கு மாறுபட்டதாயின் அவ்வீரம் மாசுண்ட வீரமாய்விடும். சீதை இராவணனால் கவரப்பட்டு, அசோக வனத்தில் கடுந்துயருறுகிறாள். துன்பமுற்ற நிலையிலும் அவளது மனமொழி மெய்கள் அறத்திற்கு மாறுபட நடவாதவை. கற்பினுக்கு அணியென்று பொற்புறும் தன்மையளான சீதை தன் அறவொழுக்கத்தின் திண்மையால் அரக்கனைச் சபிக்கவும் முடியும். ஆனால் அவள் அப்படிச் செய்யவில்லை.

***"சொல்லி னாற்சுடு வேன்அது தூயவன்***
***வில்லி னாற்றற்கு மாசென்று வீசினேன்"***

என்று அச் செய்கையை வெறுத்துவிட்டாள். இஃதன்றோ வெற்றிவீரம்.

ஒருவருடைய வாழ்க்கை பலவித போராட்டங்களும் நிறைந்தது. அவற்றில் அகப் போராட்டத்தை வென்றவரே புறப்போராட்டத்தில் வாகை சூடுவர். அகப்போராட்டத்தில் புலனடக்கம் முதன்மையானது. புலனடக்கத்தால் அருள்பிறக்கும், அறமே குறிக்கோளாகும். அறத்தினடிப்படையில் நிகழும் போரில் உண்மைவீரன் முன்னேறுகிறான். கோழை புறங்காட்டுகிறான். உண்மை வீரனுக்குத் தனது வெற்றியன்று, பகைவனைத் திருத்துவதே குறிக்கோள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# செய்வன திருந்தச் செய்

இஃது ஔவை அருளிய அறிவுரை. இதுபோன்ற பல இனிய தொடர்களை அவர் தமிழ் மக்களுக்கு முதுசொம் ஆகத் தந்துள்ளார். வள்ளுவர் பெருமான் தாம் ஆராய்ந்து கண்ட அரிய உண்மைகளை மிகச் சுருக்கி ஒன்றேமுக்காலடிகளில் பாடினார். ஔவையாரோ அத்தகைய சிறந்த கருத்துக்களை ஒரே அடியில் அமைத்துவிட்டார். அவர் அருளிய பாடல்களும் அறிவுரைகளும் சிறியோர்க்கும் பெரியோர்க்கும் சிறந்த பலனைத் தருவன. சிறுவர் நாவிற் கிசைந்த முறையில் அவர் வாழ்நாள் முழுமையும் ஊன்றுகோல் போல் உதவுவன. வாழ்நாளில் நாம் சிறியனவும் பெரியனவுமான எத்தனையோ கருமங்களைச் செய்யப் போகின்றோம். அவற்றைச் செய்யுமுன் நாம் அறிய வேண்டிய அரிய கருத்தொன்றை ஐந்தாவது வயதில் அறிகிறோம். அவ்வரிய உபதேசந்தான் *"செய்வன திருந்தச் செய்"* என்பது. மூன்று சொற்களிலமைந்த இம் முதுமொழி பொன்னிலும் சாலப் பொதிந்து போற்றத்தக்கது.

நாம் எல்லோரும் பிறந்தது முதல் இறப்பதுவரை ஒவ்வொரு கருமத்தைச் செய்துகொண்டுதான் இருக்கிறோம். ஒரு தொழிலும் செய்யாதிருப்பவர் யாரும் இல்லை. நாம் இருக்கும்பொழுதும் இறந்தபின்பும் நம் பெருமை சிறுமைகளை எடுத்துக் காட்டுவன நாம் செய்த செயல்களே. சிறியவையானாலும் நல்ல செயல்களைச் செய்தே நாம் நல்லவர்கள் என்ற போற்றுதலைப் பெறுகின்றோம். தீய செயல்களாற் கொடியவர் என்று தூற்றப்படுகின்றோம். *"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்"* என்பது தமிழ்மறை. நம் வாழ்விலே நாம் ஒரு செயலைச் செய்து முடித்ததும் அது அழியாத உரைக்கல்லாகி விடுகின்றது. அது நம் பண்பையும் திறமையையும் வெளிப்படுத்தி விடுகின்றது. ஆதலால், நாம் பெருமையடைய வேண்டுமானால் நல்ல கருமங்களையே செய்வதோடு செம்மையாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும். செம்மையாகச் செய்வதென்பது திறமையோடு சிறந்த உள்ளப் பண்பும் உடையார்க்கே இயல்வது.

நாம் ஒன்றைத் திருத்தமாகச் செய்யவேண்டுமானால் அதைச் செய்யத் தொடங்குமுன் நன்கு சிந்திக்கவேண்டும். எதனை எதனால் எவ்வாறு தொடங்கி முடிக்கவேண்டும் என்பதை முதலில் துணிதல் இன்றியமையாதது. செய்யத் தொடங்கியபின் சிந்திப்போம் என்றிருத்தல் தவறு. *"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவ மென்பது இழுக்கு"* என்ற அருமைக் குறளை அறியாது சிறுமையுற்றோர் பலர். ஒன்றைச் செய்யப் புகுமுன் எவ்வெவற்றை எண்ணல் வேண்டும்? அவை, பொருள் கருவி காலம் வினை இடனோடு ஐந்து என வள்ளுவர் கூறுகின்றார். இவற்றைத் திருத்தமாக எண்ணியவர்க்கே எடுத்த கருமம் இனிது முடியும். ஆகவே ஒன்றைத் திருத்தமாகச் செய்து முடிப்பதற்கு முதலில் அதனை இருள் தீர எண்ணுதல் இன்றியமையாதது.

சொல்லுதல் யார்க்கும் எளியது, சொல்லியபடி செய்தல் பலர்க்கு மிக அரியது. நாம் ஒரு கருமத்தைப் பற்றிப் பேசும்போது அழகாகப் பேசுவோம். செய்யத் தொடங்கும்போதும் ஊக்கமாகத் தொடங்குவோம். நாளாக ஆக, நமக்கு அக்கருமத்தில் ஆர்வம் குன்றிவிடுகின்றது. அவ்வார்வக் குறைவால் இடையில் அதனைக் கைவிட்டு விடுவோம். அல்லது அரைகுறையாக முடித்து விட்டு நீங்குவோம். கறையான் புற்றைக் கட்டும்போது இடையீடின்றி அக்கருமத்தில் ஈடுபட்டு இனிதாகச் செய்து முடித்தலை யாவரும் காண்பார். சிலந்தி தனது வலையை அமைக்கும்போது சிறிதுநேரமாவது தளர்ந்திருப்பதில்லை. முதலில் இருக்கும் ஊக்கம் முடிவுவரை அச்சிறிய பிராணிகளில் காணப்படுகின்றது ஆனால் மக்களில் அறிவிற் சிறந்தவராயிருந்தும் பலர் அவ்வாறு இருப்பதில்லை. ஊக்கம் குன்றி, சோம்பி மடிந்து எடுத்த கருமத்தை இடையே விட்டொழிகின்றனர். *"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனைய துயர்வு"* என்றபடி ஊக்கமுடையார் செய்யுந் தொழிலைத் திறம்படச் செய்து உயர்ந்தோர் ஆகின்றனர்.

மக்கள் தொடங்கிய கருமத்தில் ஊக்கம் குன்றியிருக்கக் காரணங்கள் பல. ஒன்று, இடையில் ஏற்படும் இடரைக் கண்டு நெஞ்சத் திடம் குறைதல், நாம் செய்யும் தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கின் இடையே துன்பம் தராத தொழிலெதுவுமில்லை. சிறப்பாக நற்கருமங்களெல்லாம் நமக்கு இடுக்கண் தராது நன்றாய் முடிவதில்லை. தேவர்கள் பாற்கடல் கடைந்த கதையை யாவரும் அறிவர். கதையின் உட்பொருளை நாம் ஈண்டு நினைவுகூர வேண்டும். பெறற்கரிய அமிர்தத்தைப் பெறுமுயற்சியில் பேராபத்து வந்தது. தேவர்கள் இறைவனின் துணைகொண்டு இடரை நீக்கி மேலும் முயன்றனர் இறுதியில் பேரின்பம் கிட்டியது. இதுபோலவேதான் உலகப் பெரியார்களின் வாழ்வும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகின்றது. அவர்கள் வாழ்க்கை நமக்கு இலக்கியமாகின்றது. அவர்கள் வாழ்க்கையை நோக்கும்போது, அவர்கள் தமக்கு வந்த துன்பத்தை எவ்வாறு பொறுமையுடன் தாங்கி நின்றார்கள் என்பதையும், தமது கருமத்தை எவ்வாறு சலியாது செய்து முடித்தார்கள் என்பதையும் அறிந்து மெச்சுகின்றோம். ஆகவே துன்பம் இன்றி இன்பம் எவர்க்கும் எய்தாது, பொன்னானது சுடச் சுட ஒளி மிகுகின்றது; பால் காய்ச்சிய அளவில்தான் சுவை நிறைகின்றது. அதுபோல மனிதனும் துன்பத்தைத் தாங்கித் துணிவோடு கருமத்தைத் தொடர்ந்து செய்தாற்றான் உயர்ந்தவன் ஆகிறான். "துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை" என்ற பொதுமறையை நாம் நினைவில் இருத்த வேண்டும்.

திருந்திய செயலில் அழகு தோன்றுகிறது. அழகைக் கண்டு அனைவரும் மெச்சுகிறார்கள் விரும்புகிறார்கள். இறைவன் படைத்த இயற்கைப் பொருள்களில் எத்துணை அழகு! அவ்வழகைச் சுவைக்கும் அறிவை நாம் வளர்க்க வேண்டும். சிறுபருவ முதற் கொண்டே அழகுணர்ச்சி வளர வேண்டும். அவ்வுணர்ச்சி யுடையோர் இயன்றவரை எதனையும் அழகுறவே செய்வர். தாம் வைத்திருக்கும் பொருள்களை அழகாக வைத்திருப்பதிலும், தம் கருத்தைப் பிறர் விரும்பும் முறையில் செய்வதிலும் அவர்களுக்குத் தளராத ஆர்வம் உண்டு. அஃதில்லாதவர் வெறும் கடமை யுணர்ச்சியோடு கருமத்தைச் செய்து கைகழுவி விடுவர். செயல்களைத் திருத்தமாகச் செய்யத் தூண்டும். அவ்வழகுணர்ச்சி ஒருவனது அகத்தையும் புறத்தையும் தூய்மைப்படுத்தி, அவனை உயர் நிலைக்குக் கொண்டு செல்லும்.

இதுவரை, ஒருவன் செய்யும் கருமமே அவனை அளக்கும் உரைகல் என்பதும், அவன் அக்கருமத்தைத திருத்தமாகச் செய்து முடிக்கவேண்டும் என்பதும் அவ்வாறு முடித்தற்கு எண்ணித் தொடங்குதல், ஊக்கம் தளராமை, துன்பத்தைக் கண்டு சோர்வடையாமை, அழகுணர்ச்சி ஆதியன இன்றியமையாதன வென்பதும் கூறப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து

நாம் நமது வாழ்க்கையிலிருந்து பெறும் அறிவு அனுபவ அறிவெனப்படும். நூலறிவை விட அனுபவ அறிவே சிறந்தது. நம் முன்னோர்கள் பண்பட்ட வாழ்வு நடத்தியவர்கள். அவர்களது பழுத்த வாழ்விலிருந்து பிறந்து தொன்று தொட்டு வழங்கி வரும் மொழிகளே பழமொழிகள். அவைகள் அறிவுறுத்தும் அரிய கருத்துக்கள் நாம் நல்வாழ்வு வாழத் துணை செய்வன. நாம் அனைவரும் நல் வாழ்வு வாழவும் இன்பமாக இருக்கவுமே விரும்புகிறோம். விரும்பி இடையறாது முயல்கின்றோம். ஆனால் நம்மில் மிகச்சிலரே இன்பத்தை அடைகின்றனர். காரணம் என்ன? இன்பத்திற்குரிய காரணம் புறத்திலன்றி நமது அகத்திலேயே இருப்பதுதான். இன்பத்திற்குரிய காரணத்தை அகத்தே பெற்றவர்கள் இன்ப வாழ்வு நடத்துகின்றார்கள். இதுவே இப்பொன்மொழிகள் தரும் பேருண்மை.

பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை என்று கருதும் பலர் பொருள் தேடுவதிலேயே வாழ்நாள் முழுவதையும் செலவழிக்கின்றார்கள்; இரவுபகலாக எண்ணி எண்ணி திட்டமிடுகின்றார்கள்; உணவையும் உறக்கத்தையும் சுருக்கிப் பணத்தையே உயிரென மதித்துப் பாடுபடுகின்றார்கள். தாம் தேடிய செல்வத்தைக் கண்ணும் கருத்துமாகக் காக்கின்றார்கள். தக்க வழிகளில் முதலிட்டுப் பெருக்குகிறார்கள். தாங்கள் கருதிய பெருந்தொகைப் பொருள் சேருமளவும் சோரமாட்டார்கள். சுற்றத்தார் துன்பத்தைத் துடைக்க மாட்டார். தமக்குப் புகழுண்டாக நடக்க மாட்டார். முதுமை வந்ததென்றும் ஓயமாட்டார். மரணம் வந்ததென்றும் சாயமாட்டார். அந்தோ! அவர்கள் தாம் கருதிய பொருளைப் பெற்றாருமல்லர். ஒரு கணப் பொழுதாவது இன்பம் உற்றாருமல்லர். பல்லாண்டு வாழ்ந்து பலவாறு உழன்று பயனற்ற வாழ்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாரன்றித் தமக்கும் பிறர்க்கும் ஒரு பயன் கண்டாரல்லர்.

*"உண்ணான் ஒளிகிறான் ஓங்கு புகழ் செய்யான்*
*துன்னாருங் கேளிர் துயர்களையான் கொன்னே*
*வழங்கான் பொருள்காத் திருப்பனேல் அஆ!*
*இழந்தானென் றெண்ணப்படும்."*

என்ற நாலடிப்பாட்டு மனநிறைவற்றவன் செல்வனாயினும் விரைவில் இழப்பனெனக் கூறுகின்றது. மனநிறைவற்று, ஈயாது பொருள் தேடுபவனின் செல்வத்தைத் தாயத்தார் கவர முயல்வர்; கள்வர் கவர்ந்து செல்வர் இவ்வாறு தேடிய பொருளை அனுபவியாது இழப்பவன் தேனீ போலத் துயருறுவான். அந்தோ! பிறர் கவர்ந்தனுபவிப்பதற்காய்ப் பொருள் தேடுபவரின் மதி என்னே!

மக்களுக்கு மனநிறைவு உண்டாகாமைக்குரிய காரணம் யாது? எல்லா நிறைவு மிருந்தும் மன நிறைவொன்றில்லாமையா லன்றோ மனிதன் வாழ்வு பாழாகின்றது. ஒருவனது மனநிறைவைக் குலைப்பது, அவன் தன் நிலையையும் பிறர் நிலையையும் ஒப்புநோக்கு மியல்பே. செல்வத்தில் இச்சையுடையவன் பெருஞ் செல்வனையே மதித்து அவன்போல் ஆவதற்கு அல்லும் பகலும் கனவு காண்கிறான். புகழில் விருப்புடையோன் ஒரு பெரும் புகழாளனைத் தன் இலட்சிய புருடனாகக் கருதுகிறான். கல்வியில் நாட்டமுடையவன் தான் மதிக்கும் கற்றான் போல உயரக் கற்பனை செய்கிறான். இவ்வித ஒப்புநோக்கு ஒருவனை உயர்த்த வல்லதே. ஆயினும் செல்வர்க்கு உகந்ததன்று. ஏன்? செல்வத்திற்கு எல்லையில்லை. செல்வம் முற்றவத்தான் வருவது, முயற்சி மாத்திரந்தான் வருவதன்று என அறநூல்கள் கூறுகின்றன. அறிஞர்கள் அவ்வுண்மையை மனத்துட் கொண்டு உள்ள பொருளோடு உள்ள நிறைவு பெற்றிருப்பர்.

*"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை*
*அம்மா பெரிதென் றகமகிழ்க — தம்மினும்*
*கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்*
*எற்றே இவர்க்கு நாம் என்று"*

என்பது ஆன்றோர் வாக்கு. தேடிய செல்வம் போதுமென்ற மனநிறைவு வேண்டும். ஆனால் கற்ற கல்வியில் போதாது என்ற மனக்குறை வேண்டும். செல்வம் பெருகுந்தோறும் அதைப்பற்றிய கவலையும் பெருகும். கல்வி நிறையும் தோறும் அதனாலாம் இன்பமும் நிறையும். அதனாற்றான் பொருள் நிலையில் போதுமென்ற மனநிறைவு இன்றியமையாததென நம் ஆன்றோர் கண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு அறமும் இன்பமுமே வாழ்க்கையில் அடையும் பயன், பொருளன்று. பொருளானது அறத்தையும் இன்பத்தையும் அடைய ஏதுவான கருவியாகும். இதையறியாதவர் பொருளை மாத்திரம் தேடி அறத்தையும் இன்பத்தையும் கைவிடுகின்றனர். பொருளாசை பிடித்த ஒருவன் தான் தொட்ட தெல்லாம் பொன்னாக வேண்டும் வரம் பெற்றான். அதன் பயனாக அவன் தொட்ட உணவு பொன்னாகியது அதனால் உணவின்றி வருந்தினான். உடை பொன்னாகியது. மானமிழந்தான். அவன் பொன்னாசை தன்னுயிர்க்கே பொல்லாததெனக் கண்டான். மீண்டும் கடவுளை இரந்து மனநிறைவொன்றையே வேண்டி மகிழ்வுற்றான். அவனைப் போன்ற ஆசைப்பேய் பிடித்தோர் இன்றும் பலருளர்.

போதுமென்ற மனநிறைவுடையவன் பொருளாசையில்லான் என்பது மாத்திரமன்றிப் பொறாமையுமிலன். அவன் யாரிடத்தும் அழுக்காறு கொள்ளான்; ஆனால் அனுதாபம் உள்ளான். தன்னலம் பாராது மன்னுயிரனைத்தையும் ஓம்புவான். மன்னுயிர் ஓம்புவோர்க்குத் துன்பமில்லையல்லவா? மன நிறைவுடையவன் ஒருவனே அறம், பொருள், இன்பம் மூன்றையும் உடையவன். ஆகவே எல்லோரும் மக்களாக வாழ வேண்டுமானால் மனநிறை வொன்றையே தேட வேண்டும். அதனையே போற்றி வளர்க்க வேண்டும்.

***“செல்வமென்பது சிந்தையின் நிறைவே”***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

## நாடகங்களும் அவற்றின் பயனும்

தமிழர் நாடகக் கலையைத் தொண்டு தொட்டே போற்றி வந்தனர். தமிழின் முக்கூறுகளுள் நாடகத் தமிழ் மூன்றாவதாக அமைந்துள்ளது. இயற்றமிழையும் இசைத் தமிழையும் வளர்த்த பண்டைத் தமிழ் மக்கள் நாடகத் தமிழையும் நன்கு ஆராய்ந்தனர். நாடகத்தின் பிரிவுகளையும், அவற்றின் இலக்கணங்களையும் எடுத்துக்கூறும் எண்ணிறைந்த தமிழ் நூல்கள் இன்று இல்லையாயினும் அவற்றின் பெயர்களாவது ஆங்காங்கு காணப்படுகின்றன. இந் நாடகவிலக்கண நூல்கள் தோற்றுதற்குக் காரணமாக எத்தனையோ நாடகங்கள் பண்டு நின்று நிலவியிருக்கவேண்டும். அந் நாடகங்களைப் பழந்தமிழ் மக்களும் மன்னரும் ஆதரித்துப் போற்றியிருக்கவேண்டும். இன்று நம் நாட்டில் நாடகங்கள் நடைபெறுகின்றன. நாட்டு மக்கள் அனைவரும் அவற்றை விரும்பி அநுபவிக்கிறார்கள். ஆனால் நாடகங்களும் நாடகவிலக்கண நூல்களும் மிகச் சிலவே உள்ளன. நாடக நூல்கள் மறைந்தாலும் நாடக அறிஞர்கள் தொகையிற் குறைந்தாலும் நாடகம் சுவைப்போர் அன்றுபோலவே இன்றும் பலர் உளர்.

இயல் இசைகளைவிட நாடகம் மக்கள் உள்ளத்தை நன்கு கவரவல்லது. இயற்றமிழ் அதனைக் கற்றுத் தேர்ந்தவர்க்கே இனிமை தருவது. இசைத் தமிழ் அதில் ஈடுபாடுடையவர்க்கே இன்பம் பயப்பது. நாடகத் தமிழோவெனில் கட்புல வாயிலாகவும், செவிப்புல வாயிலாகவும் கற்றார் கல்லார் எல்லார் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளுவதாகும். நாடகத் தமிழ் ஏனைய இயற்றமிழ், இசைத்தமிழ்களின் பயனையும் ஒருங்கு உதவுகின்றது. நாடகத்தில் இசை, மெய்ப்பாடு, உணர்ச்சி, உயர்ந்த போதனை என்பன கலந்து மிளிர்கின்றன. இவற்றில் ஒன்றை விரும்பாதோரும் மற்றொன்றை விழைவர். எனவேதான் இஃது எல்லோருக்கும் இன்பம் தருகின்றது. நாம் அறியும் அறிவெல்லாம் செவி வாயிலாக அறிவனவே, செவியறிவை விட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணறிவு உள்ளத்தில் நன்கு உறுதிபெற்று நிற்பது. நாடகம் கட்புலனுக்கும் பெருவிருந்தாவதால் அதன் பயன் ஏனைய இயலாலும், இசையாலும் பெறும் பயனைவிடப் பன்மடங்கு சிறந்ததாகிறது.

ஒரு நாடகத்தில் நடிப்பும் மெய்ப்பாடுமே முக்கிய அம்சங்களாகும். நவரசங்களையும் அவற்றிற்குரிய மெய்யிலக்கணங்களையும் ஒரு நடிகன் அறிவதோடமையாது அதைச் செயலில் காட்டவும் வல்லனாகல் வேண்டும். அப்பொழுதுதான் அவன் நடிகனென்ற பெயரைப் பெறுகிறான். தான் எடுத்துக் கொண்ட பாகத்தைத் திறம்பட நடிப்பதன்மூலம் பார்ப்பவருள்ளத்தை அவன் கவர்ந்துவிடுகிறான். நாடகத்திலுள்ள இசையும் ஏனைய அம்சங்களும் நடிப்பிற்குத் துணைசெய்யுமளவில் அமைகின்றன. நாடகத்திற்கெடுத்துக் கொண்ட கதையில் அதன் நோக்கம் அமைந்துகிடக்கிறது. நீதியை எடுத்துக் காட்டுமுகமாகவும் ஒழுக்கத்தை நிலைநிறுத்து முகமாகவும் அன்பு, வீரம், முதலிய பண்புகளை வளர்க்கு முகமாகவும் பல்வேறு காலத்தும், பல்வேறு இடங்களிலும் நடந்த சம்பவங்கள் நாடகமாக அமைத்து நடிக்கப்படுகின்றன.

ஆதியில் எல்லாக் கலைகளும் நல்நோக்கத்துடனேயே வளர்க்கப்பட்டன. ஒரு கலை அதனைப் பயிலுவோரது திறமையினால் ஆதரவாளர்களை மேலும் மேலும் பெருக்க முடியும். அது தவறானவற்றைப் பரப்ப முயலுமேல் சிலநாளில் மடிந்தொழிந்து விடும். நாடகங்கள் பண்டுதொட்டே உயர்ந்த கொள்கைகளையே பரப்பிவந்தது. ஒரு சிறந்த உண்மையை மக்களுக்கு அறிவுறுத்த வேண்டுமேல் அதற்கு நாடகமே எளிய சாதனமென நம் முன்னோர் கண்டனர். அறத்தைப் பாதுகாத்த நம் தமிழ் நாட்டில் இயல் இசை நாடகமென்ற மூன்றும் அறவழியே சென்றன. இன்று அந்நோக்கம் பாராமுகம் செய்யப்படுகின்றது. நாடகத்தினிடத்தைச் சுவீகரித்த திரைப்படங்கள் வேறு வேறு நோக்கத்துடன் வெளி வருகின்றன. திரைப்படங்கள் பார்க்கச் செல்வோரது நாட்டமும் பலவிதமாகவுள்ளது. அதனால் இக்காலத் திரைப்படங்கள் நல்ல பயனைத் தருவதில்லை. நடிப்போர்க்குப் பொருள் வரும் வழியாயும் பார்ப்போர்க்குப் பொழுதுபோக்கும் சாதனமாயும் திரைப்படங்கள் அமைந்துள்ளன.

போதனையினால் சாதிக்க முடியாததை நாடகத்தால் நாம் அடையமுடியும். நாடகத்தைப் பார்த்ததுமே மக்கள் உணர்ச்சி விழிப்படைந்து விடுகிறது. நாடகக் காட்சிகள் அவர்களது மனத்தில் நன்கு பதிந்து விடுகின்றன. காந்தியடிகளின் சத்திய வாழ்விற்கு வித்தூன்றியது அவர் பார்த்த அரிச்சந்திர நாடகமேயாகும். அந்நாடகத்தில் அரிச்சந்திரனின் வாய்மை விரதமும், அவனுக்கேற்பட்ட அளவற்ற துன்பங்களும் அவனது மன உறுதியும் இறுதியில் அவனடைந்த வெற்றியுமாகிய பகுதிகள் காந்தியடிகளின் உள்ளத்தைக் கவர்ந்தன. அன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கருத்தில் ஒரு புத்தொளி உதயமாயிற்று. அவர் வாழ்வு புனித வாழ்வானது என்றால் அது நாடகத்தால் ஏற்பட்ட நற்பயனேயாகும்.

மக்கள் கண்ட கலைகள் எல்லாவற்றிலும் நாடகக் கலையே வாழ்வை மேம்படுத்தவல்லது. அதிலமைந்த ஒவ்வோர் அம்சமும் மக்கள் உணர்வையும் அறிவையும் சீர்திருத்தவல்ல சிறந்த கலையாகும். அது இசை, நடிப்பு, பேச்சு முதலிய பலகலைகளையும் அடக்கிய ஒரு பெரும் கலை. ஏனைய கலைகளால் பெறமுடியாத பயனை நாடகக் கலையொன்றினால் சாதிக்க முடியும். மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டுமாயின் நாடகங்கள் நல்ல நோக்கங்களோடு நடைபெற வேண்டும். அதனால் மக்களிடையே கலையிற் காணும் சுவை நுகர்ச்சி சிறத்தலோடு உயர்ந்த வாழ்வும் மலருகிறது. ஆகவே நாடகத்தின் வளர்ச்சியிலும், ஆக்கத்திலும், நாட்டு மக்களேயன்றி அரசாங்கமும் கவனம் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# எனது கல்லூரி நாட்கள்

சங்க இலக்கியத்தில் ஒரு பாடல் உள்ளது, அதில் ஒரு புலவர் தமது இளமைப் பருவத்து நிகழ்ந்த இன்பச் செய்திகளை எடுத்துக் கூறி மகிழ்கிறார். அப்புலவரே தொண்டு கிழவர். இளமையின் நினைவுகள் அவர் மனதைவிட்டு அகலவில்லை. அவற்றை நினைக்குந்தோறும் எல்லையில்லாத இன்பத்துள் ஆழ்கிறார். இளமையை நினைத்தல் எல்லார்க்கும் இன்பம் தருவது. இளமையிலே தான் பள்ளிக்கூட வாழ்வும் தொடங்கி நிலைபெற்று முடிவெய்துகிறது. அச்சிறிய காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் வாழ்நாள் முழுவதும் நினையுந்தோறும் கழிபேருவகையை ஊட்டுகின்றன. புதிய புதிய நண்பர்களும், போதனையில் தேர்ந்த ஆசிரியர்களும் கருத்துக்கினிய கல்வியும் எம் அகத்தைவிட்டு ஒரு போதும் அகல்வதில்லை. கள்ளங் கபடம் அறியாது, பொறுப்புணர்ச்சியற்று, கவலையற்ற வாழ்வு நடத்திய அக்காலத்தை நினைத்தால் எத்தனை இன்பம் உண்டாகின்றது.

ஐந்து வயது வரை நம்வாழ்வு வீட்டிலும், வீட்டின் சுற்றாடலிலும் அடங்கிக் கிடக்கிறது. அதன் பின் நாம் ஒரு புது வாழ்விற்குப் புகுகின்றோம். பள்ளிக்கூடத்தில் நம்மோடு குலாவி மகிழ்வதற்கு நண்பர் பலர் சேர்கின்றார்கள். ஐந்து, பத்துப் பேரோடு பழகி விளையாடிய நாம் பள்ளியில் முப்பது, நாற்பது சிறுவர்களோடு கூடி வாழப் பழகுகிறோம். பள்ளிப் படிப்பைவிட அன்னாரோடு பழகுவதே நமக்கு அக்காலத்தில் பேரின்பம். வயது ஏற ஏற நாம் நம் அறிவிலும், சுவையிலும், திறமையிலும் ஏற்றம் காண்கின்றோம். வீட்டில் எனக்கு மிக இனியவராக இருந்தவர் தாய், தந்தையர் என்ற இருவரே. இப்போது இன்னும் ஒருவர் என்னை நன்கு நேசிப்பவர் பள்ளிக்கூடத்தில் காணப்படுகிறார். அவர்தான் வகுப்பு ஆசிரியர். அவரது அன்பும் போதனையும் அவர் தரும் தண்டனையைவிட என் நினைவிலே நெடுநாள்கள் நிலை நிற்கின்றன. அவர் கற்பித்த பாடத்தையும் கூறிய கதைகளையும் விட அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்றிய நற் பழக்கமும், அவர் காட்டிய அன்பும் நாம் உள்ளளவும் நமக்கு நன்மை தருகின்றன.

வயது முதிரப் பொறுப்புணர்ச்சியும், பொருள் பற்றிய கவலையும் அதிகமாகின்றது. துன்பம் அதிகமாகிறது. இன்பம் அரிதாகிறது. என் பள்ளிக்கூட நாள்களிலோவென்றால் கவலையே சிறிதும் காணாத வாழ்வு நடத்தினேன். உணவு, உடை முதலிய வேண்டும் பொருள்கள் அனைத்தையும் தாய், தந்தையர்கள் உதவினார்கள். பகல் முழுவதும் விளையாட்டும், படிப்பும்; இரவு முழுவதும் அவற்றைப் பற்றிய இன்பக் கனவுகள். வெறுப்பு, பொறாமை ஆகிய தீய குணங்கள் என் பள்ளிக்கூட வாழ்வில் தலைகாட்டவில்லை. பகைவர் என் நண்பர் என்ற வேற்றுமையின்றி எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம் என்ற உயரிய நினைவே என்னையும் என்போன்றோரையும், ஆட்கொண்டிருந்தது. படிப்பிலும், விளையாட்டிலும் நாம் போட்டியிடுவோம். ஆனால் அப்போட்டியில் வெற்றி வேட்கை தலைதூக்கி நிற்குமன்றி அற்ப பெருமையென்பது எனது அகராதியிலும் இருக்காது. கல்வியிலே திறமை குறைந்தார்க்கு உதவிகள் செய்வோம்; திறமை மிக்காருடன் உறவுகொண்டு உழைப்போம். ஒரு வகுப்பிலுள்ளார் அனைவரும் உடன் பிறந்தார் ஆகி ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவர். பள்ளி வாழ்க்கையில் அறிவைப் பெருக்குவதோடு அன்பையும் வளர்த்தோம்.

நான் கல்லூரியில் பயிலும் காலத்தில் அன்பையும் அறிவையும் வளர்த்ததோடு உடலையும், உயர்ந்த பண்பாட்டையும் பேணிவளர்க்கும் பெருவாய்ப்பும் பெற்றேன். படிக்கும்வேளை தவிர்ந்த நேரத்தில் பல்வேறு விளையாட்டில் ஈடுபட்டேன். விளையாட்டுக்கள் உடலுக்கு வன்மை அளிப்பதோடு பல நன்மையையும் தந்தன. ஒரு விளையாட்டில் பங்குபற்றும் இரு கட்சியாரும் ஒருவரையொருவர் வெல்ல முயல்கின்றனர். ஆடும்போது ஒருகட்சியாரை மறுகட்சியார் பலமாக எதிர்க்கின்றனர். சாதாரணமான ஆட்டம் பெரும் போராட்டமாக நடக்கின்றது. இளைஞர்கள் உயர்வு, தாழ்வு கருதாது, பெருமை, சிறுமை பேணாது ஓர் உறுப்பினர்போல் ஒன்றுபட்டுத் தத்தம் கட்சிக்காக ஒத்துழைக்கின்றனர். வெற்றி ஒருவரைச் சார்ந்ததேயாயினும் இருதிறத்தாரும் தத்தமது வேற்றுமை மறந்து வெற்றியைப் பாராட்டுகின்றனர். இந் நற்பண்புதான் எனது கல்லூரி நாளில் யான் பெற்ற பெரும் பேறு என்று சொல்லத்தக்கது.

கல்லூரியில் நான் சுவைத்த கலையனுபவங்கள் பலப்பல. பேச்சுக்கலை, நடிப்புக்கலை, சொற்போர்க்கலை, இசைக்கலை முதலானவைகள் இடம்பெறாத நாளை அந்நாளில் நான் காண்பது அரிது. மாணவர்களின் பண்பாட்டையும், அக வளர்ச்சியையும் நோக்காகக் கொண்டு ஆக்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கங்கள் பலவிருந்தன. அச்சங்கங்களை நிர்வகிக்கும் உறுப்பினரைத் தெரியும் பொறுப்பு மாணவரையே சேர்ந்தது. சங்கத்தில் இலக்கியம் முதலிய பல பொருள்களிலும் பேச்சுக்கள் நிகழும். சில சமயங்களில் சில சிக்கலான விஷயங்கள் பற்றி மாணவர்கள் சொற்போரும் நிகழ்த்துவர். அச் சொற்போர் மாணவர்க்கேயன்றி அதைக் கவனித்துக் கொண்டிருக்கும் ஆசியருக்கும் மிக்க உவகையைக் கொடுக்கும். சங்கங்களை நிர்வகிக்கும் திறமையையும் சொற்போர்களில் நடந்துகொள்ளும் முறையையும் நாம் அநுபவ வாயிலாக அறிகிறோம். அவ்வப்போது நமது சங்க ஆதரவில் நாடகங்களும், இசை விருந்துகளும் நிகழும். இவற்றில் மாணவர் பங்கெடுத்துத் தத்தம் கலைத்திறனைக் காட்டுவர். மாணவராய் இருக்குங் காலத்து இவ்வித கலை நிகழ்ச்சியில் ஈடுபட்டவர் பிற்காலத்தில் சிறந்த பேச்சாளர்களாகவும் நடிகர்களாகவும் இசைச் செல்வர்களாகவும் விளங்குகின்றார்கள்.

குடும்ப வாழ்வில் ஈடுபட்டவர்களுக்கும் பொறுப்புமிக்கவர்களுக்கும் இயற்கை அழகைச் சுவைக்க வாய்ப்பு ஏற்படுவதில்லை. மாணவ வாழ்க்கையில் சுவையுணர்வுக்கு விருந்தளிக்கும் வாய்ப்புக்கள் பல நேருகின்றன. அக்காலத்து நாம் செய்த பல்வேறு சுற்றுப் பிரயாணங்களினால் அடைந்த இன்பம் அளவிடத்தக்கதன்று. சரித்திரம், கலை, பழைமையான நாகரிகம் ஆகியவற்றிற்குப் பெயர்போன நகரங்கள் பலவற்றை நாம் நேரே கண்டோம். நூல்களில் கற்றதையும் ஆசிரியர்களிடம் கேட்டதையும்விட நாம் நேராகக் கண்ட நகரங்களும் நகரத்தில் உள்ள புராதன சின்னங்களும் நமக்குப் போதித்தவை பலப்பல. அவை இன்பகரமானவையாக இருந்ததோடு சிறந்த அறிவைப் புகட்டும் சாதனமாகவும் விளங்கின. இந்த வாய்ப்பும் அநுபவமும் நமக்கு என்றும் மகிழ்வூட்டும் நல்ல ஊற்றுக்களாக நிலைக்கின்றன.

ஆகவே கல்லூரி வாழ்வு என்பது நம் வாழ்விலே தலைசிறந்த அத்தியாயம் ஆகும். கல்லூரியில் நாம் பழகிய நண்பர்கள் நமக்கு என்றும் இனிய உறவினர் ஆகிவிடுகின்றனர். அந்நாளில் நாம் கற்ற கல்வி, கல்வியோடு நாம் பயின்ற பழக்கங்கள் நம்மை உயர்நிலைக்கு அழைத்துச் சென்று வெற்றியையும், புகழையும் ஈட்டித் தருகின்றன. கல்லூரி வாழ்வில் நாம் பெற்ற இன்பம் நம் பிற்கால வாழ்வில் என்றும் காண்பரிய இன்பமாகின்றது. இவ்வித உயர்வுமிக்க கல்லூரி வாழ்க்கை கிடைக்கப் பெறாதவர்கள் மக்கள் அடையும் நன்மைமிக்க பேறுகளைப் பெறாதவரே ஆவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# நாட்டுப் பாடல்கள்

பாடல்கள் புலவர்கட்கே ஏகபோகமானவையல்ல. அவை பொதுமக்களுக்கும் உரியன. பொதுமக்களின் அன்றாட வாழ்விலும் பொருந்தி மிளிர்வன. மக்களின் வாழ்வைப் பிரதிபலித்து அவர்களின் எண்ணத்தையும் இலட்சியங்களையும் எடுத்துக்காட்டி, இசையும் இனிய தத்துவமும் அமைந்த பாடல்களின் ஆற்றலை நாம் அளவிட முடியாது. அவ்விதம் அமைந்த பாடல்கள் நம் நாட்டில் எண்ணிறைந்துள்ளன. அவை நாட்டுப் பாடல்கள் என்று கூறப்படும். அப்பாடல்கள் கிராமத்துப் பாமர மக்களின் உள்ளத்தில் தோன்றி அவர்களின் நாவில் நின்று நடம் இடுகின்றன. ஒரு நாட்டின் பொக்கிஷங்கள் எனக் கருதப்படும் இலக்கியங்கள் அந்நாட்டு மக்களின் நாகரிகத்தை எவ்வாறு எடுத்துக் காட்டுகின்றனவோ, அவ்வாறே நாட்டுப் பாடல்களும் அவரது உள்ளத்தில் அமைந்த கருத்துக்களையும், அபிலாஷைகளையும் பிரதிபலிக்கின்றன.

நம் முன்னோர்கள் நம் வாழ்விலும், தாழ்விலும் வேலை நேரத்திலும், வேலையற்றபோதிலும் பாட்டுக்கள் பாடி மகிழ்ந்தார்கள். நெல் குற்றும்போது பெண்கள் வள்ளைப்பாட்டு பாடினர். நெல் வயலில் வேலைசெய்யும்போது பாடுவது பள்ளுப்பாட்டு எனப்படும். பாரவண்டியைச் செலுத்துவோர் தெம்மாங்கு பாடுவார்கள். நீரிறைப்போர் ஏற்றப்பாட்டுப் பாடுவர். அழுத பிள்ளையை அயர வைத்தற்குத் தாலாட்டுப் பாடுவர். இழவுக்காலத்தில் ஒப்பாரி பாடிக் கவலையை ஒழிப்பர். இவ்வித இசைப்பாட்டுக்கள் பாடுபவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் உடற் களைப்பை நீக்குகின்றன தளர்ச்சியைப் போக்குகின்றன. அயர்ச்சி தரும் வேளையில் மாத்திரமன்றி உவகைமிக்க விளையாட்டிலும் பாடல்கள் எழுகின்றன. மாணிக்கவாசகர் தாம் செல்லும் வழியில் ஊஞ்சலாடுதல், பந்தாடுதல் போன்ற பல்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பெண்கள் இனிய பாடல்கள் பாடுவதைக் கண்டார். அதன்பயனாக அவர்கள் பாடுவனவாக அப்பெரியார் வாக்கிலிருந்து தோன்றியனவே அம்மானை, ஊஞ்சல், தெள்ளேணம் திருவுந்தியார் ஆகிய பதிகங்களாம்.

நாட்டுப்பாடல்கள் கிராம மக்களது ஆக்கம், கிராமக்களது பேச்சுவழக்கிலுள்ள சொற்களை நாம் அவற்றில் கேட்கிறோம். அவை அம்மக்களது இயல்பான இசையோடு பாடும்போது மிக்க சுவை பயக்குகின்றன. சில பாடல்களின் சொல் அமைப்பையும் பொருட் சிறப்பையும் நோக்குமிடத்து அவை சிறந்த செஞ்சொற் புலவனுக்கும் எட்டாத பெருமையோடு விளங்குகின்றமை புலனாகும். ஒரு பாடற் பகுதியை ஈண்டு நோக்குவோம்.

*"மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே*
*தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே"*

என்பது ஓர் ஏற்றப்பாட்டின் பகுதி. இதில் மூங்கில் என்ற சொல்லில் எதுகைத் தொடையாகத் தூங்கும் என்றது அமைந்து சொல் நயம் பொருந்தி விளங்கினாலும் இதன்கண் அமைந்த பொருள்நயம் மிக்க இன்பம் தருகின்றது. இரவு முழுவதும் கதிரவனின் தாக்குதல் இல்லாமல் பனிநீர் மூங்கில் இலையில் சுகமாகத் தங்கியுள்ளதல்ல – தூங்குகின்றதாம். அமைதியாகத் தூங்கிய பனிநீரைக் கதிரவன் தட்டியெழுப்பித் தன்னிடத்தழைக்கின்றான் என்பதுபோல அடுத்தவரியில் "தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே" என்று பாட்டுச் செல்லுகிறது. இதைப் பாடியவரது சிந்தனையின் உயர்வுதான் என்னே! என்னே!

கிராமத்து மக்களுடைய வாழ்வில் உயர்ந்த இலட்சியங்கள் ஊறிக்கிடக்கின்றன. பாடல்கள் பல்வேறு தொழில் நிகழ்ச்சிகளுக்கும், உணர்ச்சிகளுக்கும், துணையாகவும் தூண்டுதலாகவும் நின்றாலும் அவை காதல், வீரம் என்பவற்றையே கருத்தாகவும் உடையன. அந்தப் பாடல்கள் மக்களின் இன்பக் கனவுகளையும் உயர்ந்த இலட்சியங்களையும் பொந்து வைத்திருக்கும் பொற்பேழைகள் எனலாம். ஒரு பாடலை நோக்குவோம்.

*ஏன் அழுகின்றாய் பெண்ணே*
*ஏன் அழுகின்றாய் பெண்ணே*
*ஏன் அழுகிறாய் பெண்ணே*
*மான் அழுதாற்போல?*

*புருஷன் அடித்தானோ - ஒரு*
*பொற்றடியினாலே*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொழுநன் அடிச்சானோ - ஒரு*
*கோற்றடியினாலே*
*புருஷன் அடிக்கவில்லை - ஒரு*
*பூதம் தீண்டவில்லை*

*கொழுநன் அடிக்கவில்லை - ஒரு*
*குமரன் தீண்டவில்லை*
*வட்டிலிலே வடித்த சாதம்*
*வாரித்தின்ன மைந்தனில்லை*

*கிண்ணியிலே போட்ட சாதம்*
*கீறித்தின்னப் பிள்ளையில்லை*
*அங்காடிக் கடைதனை*
*அழைத்துவரப் பிள்ளையில்லை*

*வெங்காயக்கூடைதனை விலைமதிக்கப் பிள்ளையில்லை*
*மழைபெய்த வாசலிலே மைந்தனடி காணேனே*
*மைந்தனடி காணாது மறுகி அழுகிறேனே*

இது ஒருத்தி மற்ற ஒருத்தி அழுவதைப் பார்த்துக் காரணம் என்ன என்று கேட்க, அழுபவள் உண்மைக் காரணத்தை யுணர்த்துவதாக அமைந்துள்ளது. அழுகின்ற பெண்ணின் உள்ளத்திலுள்ள பிள்ளைக் காதல் கடைசி ஆறு வரிகளிலும் மிளிருகின்றது. இது நாட்டுப் பாடலாக அமைந்தாலும் புலவர்கள் கற்பனையையும் வென்றுவிடுகின்றது. நூற்கல்வியின் சேர்க்கையில்லாமல் மக்களின் இயல்பான உள்ளத்திலிருந்து வெளிவந்ததாதலின் இத்தகைய பாடல்கள் படிப்போர் உள்ளத்தைத் தொடுகின்றன.

நாட்டுப் பாடல்கள் அரசன் முன்றிலை அறியாது, கற்றவர் கூட்டத்தைக் காணாது, மக்கள் மத்தியில் பல்லாண்டு வாழ்கின்றன. இவற்றின் அருமையை அறிந்த இக்கால அறிஞர்கள் இவற்றை யொன்றாகச் சேர்த்து நூல்வடிவில் உருவாக்க முற்பட்டுள்ளார்கள். கற்றோரும் மற்றோரும் இவற்றின் இன் சுவையை நுகரும் வண்ணம் பத்திரிகைகளிலும் சுவைபற்றிய கட்டுரைகள் வெளிவருகின்றன. வானொலியில் சிறந்த அறிஞர்களைக் கொண்டு நாட்டுப்பாடல் பற்றிய விஷயங்களை ஒலிபரப்புகிறார்கள். முன்னொருகாலத்து வீட்டின் அகத்தும் வேலைத்தலத்திலும் நடமாடிய இப் பாடல்கள் இன்று உலக அரங்கில் வெளிவந்து எல்லோர்க்கும் உவகையூட்டுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# நா. கதிரைவேற்பிள்ளை

வலம்புரிச் சங்கில் முத்துப்பிறந்தாலனைய தோற்றம், மணற்கேணி நீர்போலும் அறிவுச் சுரப்பு, கடல்மடை திறந்தது போலும் சொற்பெருக்கு, மாறுபட்டவர்களை வீறுகொண்டு தாக்கும் ஏறுபோலும் திறன், செல்லுமிடமெல்லாம் செங்கோன் மன்னர்க்குரிய சிறப்பு, சைவமும் தமிழும் தழைக்க வாழையடி வாழையென நாவலர்க்குப் பின்வந்த நாவலராம் பெருமை சொற்ப வாழ்நாளில் அற்புதமான செயல்கள் இவ்வனைத்தும் நிரம்பியவர் ஒருவரையல்ல, பலரைக் கதைகளில் நாம் படைக்கலாம்; கண்ணாரக் காண்பது மிகமிக அரிது. அவ்வித அருமை வாய்ந்தவர் நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள்.

*"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவு அறிந்த*
*மக்கட் பேறல்ல பிற"*

என்பது பொய்யாமொழி.

அறிவுடை மக்கட்பேறு அருந்தவத்தின் பயன், யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி அவ்வித அருந்தவம் செய்தது. அவ்வூர் வேளாண் செல்வர் நாகப்பிள்ளை பெருந்தவம் செய்திருந்தார். அவரது வழிபடு கடவுள் ஆறுமுகப் பெருமான். வேலையும் வேற்பெருமானையும் அவர் காலையும் மாலையும் நீள நினைவார். அந்தத் தவத்தாலும் முந்தைத் தவத்தாலும் 1874ஆம் ஆண்டு அவர்க்கு ஓர் ஆண் மகன் பிறந்தான். நாகப்பிள்ளை அம் மகற்க்கு நற்பெயர் சூட்டி மகிழ்ந்தார். அந்தப் பெயர் கந்தர்க்கினிய பெயர் கதிர்வேலைக் கருதும் பெயர் கதிரைவேற்பிள்ளை.

கதிரைவேற்பிள்ளைக்குக் கல்விப்பருவம் வந்தது. கற்பூரத்தில் தீப்பற்றுவதுபோலக் கற்பவையனைத்தையும் அவர் விரைவில் உணர்ந்தார். பள்ளிப் படிப்புச் சொற்பமாகயினும் தமது நுண்மதி கொண்டு நூல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவற்றைக் கற்றார். தொல்காப்பியமும் சங்க நூற்தொகைகளும் அவர்க்குப் பாட்டன் சொத்துக்கள். அவற்றுக்கு அவர் சொல்லும் உரையும் விளக்கமும் அறிஞர் பலரும் வியந்து விரைந்தேற்றுக்கொள்ளத் தக்கனவாயிருந்தன. பிள்ளையவர்கள் இலக்கியப் புலவர் மாத்திரமல்லர். சமய நூல்களும் கற்றுத்துறை போயவர். வடமொழி தென்மொழிகளிலுள்ள சமய சாத்திரங்களைத் துருவித் துருவி ஆராய்ந்தவர். அதன் பயனாகத் தம்காலத்தில் சமய நூலறிவிலும் சமயச் சொற்போரிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்கினார்.

*"இனரூழ்த்தும் நாறாமலரனையர் கற்ற*
*துணர விரித்துரையாதார்"*

ஆதலின் கல்விக்கழகு கசடற மொழிதல். கற்றவர் எல்லாரும் சொற்றிறம் பெற்றவரல்லர். சொல் வன்மை என்பது ஒரு பெரும் செல்வம். அச்செல்வம் பெற்றவர் பதினாயிரவருக்கொருவர் என்பவர் ஔவை மூதாட்டியார். கதிரைவேற்பிள்ளை அவர்கள் ஒரு சொல்லின் செல்வர். அவர் சொற்பெருக்கைக் கேட்டுச் சுவைத்த பலர் அவரை வழிபட்டு அவர் வழிப்படலாயினர். அவர் சொல்லில் இனிமையும் உண்டு. கடுமையும் உண்டு. அவரோடு மாறுபட்டோர் அவர் பேச்சைக் கேட்டுத் திருந்துவர்; அன்றேல் அவர்க்கு மாறு கூறமாட்டாது வருந்துவர். எந்த இடத்தில் எப்பொருள் பற்றிப் பேசுவதாயினும் அவர் அதற்கு ஆயத்தம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. சபைமுன் பேச எழுந்ததும் அவரது சிந்தனை தீவிரமாகத் தொழிற்படத் தொடங்கிவிடும். பேசும் பொருளைப்பற்றி ஆராய்தல், தொடர்புபடுத்தல் எல்லாம் அப்பொழுதுதான். இவரது இவ்வித ஆற்றலைக் குறித்து ஒரு கதை சொல்வதுண்டு. ஒரு முறை ஒருவர் பிள்ளையவர்களின் மதிப்பைக் குறைக்கும் நோக்கத்தை மனத்துட்கொண்டு அவர்களை விருந்திற்கழைத்தார். உட்கருத்தைச் சிறிதும் அறியாது பிள்ளையவர்களும் விருந்திற்கிசைந்தார்கள். உணவு முதலியன மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டன. பிள்ளையவர்கள் விருந்துண்டு மகிழ்ந்து, சற்றுக் கண்ணயர்ந்தார்கள். அதுவரை அம்மனிதர் தம் எண்ணத்தை வெளியிடவில்லை. அவ்வூரிலுள்ள ஒரு பொது இடத்தில் கூட்டத்திற்குரிய ஏற்பாடுகள் மிகத் துரிதமாக நடந்தன. தமிழ்ச் செல்வர் ஒருவரின் சொற்பொழிவைக் கேட்க மக்கள் நூற்றுக் கணக்கில் வந்து நிறைந்துவிட்டார்கள். பிள்ளையவர்கள் விழித்தெழுந்ததும்தான் தம்மை எதிர்பார்த்து மக்கள் கூடியுள்ளார்கள் என்பதையும் தாம் அச்சபையில் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமென்பதையும் அறிந்தார்கள். சபை கூடிய இடத்திற்குச் சென்றதும், சபைத் தலைவர் மிக மரியாதையுடன் பிள்ளையவர்களை வரவேற்றார். தலைவர் பிள்ளையவர்களை "எறும்பு" என்னும் பொருள்பற்றிப் பேசும்படி வேண்டினார். பிள்ளையவர்களோ சிறிதும் தயங்கினார் அல்லர். உடனே ஆரம்பித்துவிட்டார்கள். "எறும்பிற்கு ஏழு குணங்களுண்டு. தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமணி நேரம் பேச வேண்டுமென்று கட்டளையிட்டார். ஆகவே அதன் ஆறு குணங்களை மட்டும் பேசி முடிப்பேன்'' என்று தொடங்கி மிக அழகியதோர் விரிவுரையாற்றிவிட்டார்கள். பேச்சைக் கேட்ட சபையோர் வியப்பில் மூழ்கினர். பேசச் செய்தவர் நாணித் தலை தாழ்ந்தனர். பிள்ளையவர்களிடத்தில் நிறைந்த விவேகமும் நினைவாற்றலும் உண்டு. அவதானமும் செய்ய வல்லவர்.

*"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
*சாந்துணையும் கல்லாதவாறு"*

நாவலர் வழிவந்த சைவக்காவலர் என்று போற்றத்தக்க முறையில் இந்தியாவிலும் இலங்கையிலும் கதிரைவேற்பிள்ளையவர்கள் சைவப் பிரசாரஞ் செய்தார்கள். அவர் வாழ்வின் பெரும்பாகம் இந்தியாவில் சமயப்போர் செய்வதிலும் சைவம் தழைக்கப் பாடுபடுவதிலுமே கழிந்தது. நாவலர் பெருமானுக்குப் பின் அருட்பா மறுப்பில் ஈடுபட்டுத் தமிழ்நாடெங்கணும் பிள்ளயைவர்கள் அமிழ்தமாரி பொழிந்தார்கள். மாயாவாதம் தலைசாய ஓயாது சொற்போர் புரிந்தார்கள். இவரது பேராற்றலை வியந்து காசிவாசி சிவத்திரு. செந்திநாதையர் அவர்கள் இவர்க்கு "மாயாவாத தும்சகோளரி'' என்ற பட்டத்தைச் சூட்டினார்கள். பிள்ளயவர்களது கல்வியறிவையும் கட்டுரை வன்மையையும் கடவுட் கொள்கையையும் கண்டு வியந்த பலர் இவர்க்கு உத்தம மாணாக்கராயினர். அம்மாணாக்கருள் தலைசிறந்தவர் செந்தமிழ்ச் செல்வர். திரு.வி.கல்யாணசுந்தர முதலியார் அவர்கள். ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகள் ஒளிபெறுதல் போலக் கதிரைவேற்பிள்ளையவர்களின் அறிவொளி அவர் ஞானப் புதல்வராகிய திரு. முதலியார் அவர்களிடமாக நின்று நெடுங்காலம் தமிழுலகை விளக்கியது.

*"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
*அனைத்தே புலவர் தொழில்"*

புலவர்கள் பிரிவு பொல்லாதது; பிள்ளையவர்கள் பிரிவு அதனிலும் பொறுக்கலாகாத் தன்மையது. பிள்ளையவர்கள் வாழ்வு சிறிது; வளர்த்த தொண்டு பெரிது. எண்ணத்திலும், பேச்சிலும், எழுத்திலும் இவர் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றியவை என்றும் போற்றற்குரியன. நாம் இன்று பிள்ளையவர்களின் பேச்சைக் கேட்க முடியாவிட்டாலும் அவர்கள் எழுதிய நூல்களில் அவர்களது உள்ளத்துயர்வைக் காணமுடியும். யாழ்ப்பாணப் பேரகராதி, ஏகாதசிப் புராணம், சைவபூடணசந்திரிகை, சைவசித்தாந்தச் சுருக்கம், சிவாலய மகோற்சவ விளக்கம், சுப்பிரமணிய பராக்கிரமம், கூர்ம புராண உரை, நைடதவுரை, பழநித்தல புராணம் முதலிய நூல்கள் அவர்களது நினைவுக்குறியாக உள்ளன. இவ்வற்புதச் செம்மல் தமிழ்கூறு நல்லுலகம் கண்ணீர் சொரிய தமது முப்பத்துமூன்றாவது வயதில் அமரர் ஆனார். அறிஞர் உலகம் உள்ளப் பிரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# "கற்றது கைம்மண்ணளவு"

நாம் சில பொருள்களை அனந்தம் என்ற சொல்லாற் குறிக்கின்றோம். எல்லாப் பொருள்களுக்கும் அந்தச் சொல் பொருந்துவதில்லை. முடிவில்லாது வளரும் பொருள்களுக்கே அது பொருந்தும். அறிவு வளரும் தன்மையது. அதனை எல்லைப்படுத்த முடியாது. அறிவு கற்கக் கற்க விரியும். கேட்கக் கேட்கப் பெருகும். சிந்திக்க சிந்திக்க வளரும் அறிவுக்கு நிரம்பிய நிலையில்லை. அறிவு நிரம்பியவரும் இல்லை. அறிவுடையோர் என்றும் அறிவு நிரம்பியோர் என்றும் நாம் கூறுவதன் பொருள் நாம் காணும் மற்றவரிலும் அவர் அறிவுடையர், அறிவு மிக்கவர் என்பதே.

சிலர் தாம் பெற்ற சிற்றறிவைப் பேரறிவெனக் கருதிப் பெருமை கொள்கின்றனர். அதனாற் பிறரை மதியாதும் அறிவுடையோரைத் துதியாதும் நடக்கின்றனர். கற்றாரை நோக்கிக் கருத்தழியாது, தாம் முற்றறிவைப் பெற்றுவிட்டதாகத் தருக்குகின்றனர். அதனால் அவர் புதிதாக ஒன்றையும் கற்க நினைவதில்லை. கற்றவர் கூறுவதையும் கருத்திற் கொள்வதில்லை. மற்றும் சிலர் பள்ளிப் படிப்பும், பல்கலைக் கழகப் பட்டமுமே கல்வியின் எல்லை எனச் சொல்வர். அவ்வளவோடு அவர்கள் அறிவை வளர்ப்பதில் அமைதி பெறுகின்றனர். அத்தகையோர்க்குத் தொழில்தான் இன்றியமையாதது. தொழிலைத் தரும் கல்விதான் முடிவானது.

கல்வியைத் தொழிலுக்காகவன்றி அறிவுக்காகக் கற்றல்வேண்டும். 'வினையே ஆடவர்க்குயிரே' என்றபடி தொழில் மனிதனுக்கு இன்றியமையாதது; உயிர் போன்றது. எனினும் அத்தொழிலைவிட அறிவு சிறந்தது. தொழில் பொருள் ஒன்றையே தரும். அறிவு தொழிலைத் தரும். துன்பத்தை நீக்க உதவும். இன்பத்தை ஆக்க உதவும். மிருகங்களும் ஏனைய தாழ்ந்த உயிரினங்களும் கல்வியில்லாமலே உணவைத் தேடி உயிர் வாழ்கின்றன. அவைகளெல்லாவற்றையும் விடச் சிறந்த மனிதன்அறிவை வளர்க்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புப் பெற்ற மனிதன் தொழிலைப் பெறுவதோடு அமையாமல் அறிவை வளர்த்தலும் வேண்டும். கல்வியைப் போற்றாமலும் அறிவைப் பெருக்காமலும் பொருளைத் தொகுப்பதிலேயே கண்ணாயுள்ளவன் ஒருவகை மனித விலங்கென்றே மதிக்கப்படுவன்.

*"விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்*
*கற்றாரோ டேனையவர்"*

என்ற பொய்யாமொழி ஈண்டுச் சிந்தித்தற்குரியது

பல்கலைக் கழகத்தில் நாம் பெறும் கல்வி அற்பக் கல்வியே. அதை அத்திபாரக் கல்வியெனவும் கூறலாம். பல்கலைக்கழகத்துப் பயின்றவன் தன் அறிவைத் தான் கற்ற துறையில் வளர்ப்பதற்குத் தகுதி பெற்றுள்ளான். அன்றி, அவன் எத்துணை உயர்ந்த பட்டம் பெறினும் முற்றக் கற்றவனாகான், கல்விப்பொருள் எல்லையில்லாது விரிந்து கிடக்கின்றது. அதன் துறைகள் பலபடப் பரந்து கிடக்கின்றன. அவற்றைப்பற்றி நாடெங்கணும், காலந்தோறும், அறிஞர்கள் ஆய்ந்து ஆய்ந்து புதுமைகள் பல அறிகின்றார்கள். "புத்தம் புதிய கலைகள் பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும், மெத்த வளருது மேற்கே" என்று பாரதியார் வியக்கின்ற முறையில் நாளுக்குநாள் அறிவுலகம் அகன்று பரக்கின்றது. "அறிதோ றறியாமை கண்டற்றால்" என்றது பொய்யாமொழியாகின்றது. நாம் நேற்றுச் சரியானதெனக் கொள்ளப்பட்டது ஒன்று இன்று ஆய்வின் பயனாகப் பிழையானதெனத் தள்ளப்படுகின்றது. இத்தகைய அறிவுப் பெருங்கடலில் நாம் பெற்ற சிற்றறிவு சில நூலறிவு நுண்ணிய திவலையளவிற்றன்றோ! இந்நிலையில் நாம் நமது அறிவை வளர்க்காதிருத்தல் எத்துணைப் பேதமை!

*"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறும் அறிவு"*

அறிவைப் பெருக்கவேண்டும் என்ற உள்ளம் எல்லோர்க்கும் உண்டாவதில்லை. சிலர் பொருளைக் குவிக்கின்றார்கள். சிலர் புகழை விரிக்கின்றார்கள். சிலர் இன்பத்தையும இன்ப சாதனங்களையும் பெருக்குகின்றார்கள். அறிவை வளர்ப்போர் மிகச் சிலரே. அவர்கள் கல்லூரிப் படிப்போடு அமைவதில்லை. மேலும் மேலும் கற்பர். அவர்களுக்குக் கற்றலே தொழில். கல்வியே களிப்பூட்டும் பொழுதுபோக்கு. பிறரிடம் அறிவைப் பெறுவதற்கு அவர்கள் சிறிதும் பின்வாங்குவதில்லை. பிறர்க்கு அறிவையூட்டுவதிலும் சோம்புவதில்லை. எந்நேரமும் அவர்களைச் சூழ நண்பர்களும் அறிஞர்களுமாகப் பலர் இருப்பார்கள்; அந் நண்பர்கள் நம் நண்பர் போன்றவரல்லர்; வள்ளுவர், கம்பர், ஷேக்ஸ்பியர் போன்ற பெருமக்களே அவர்கள். அறிவு நாட்டமுடையோர் ஒரு துறையில் மாத்திரம் செல்லார். கணிதம் கற்றவராயின் இலக்கியத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவர்; இலக்கியத்தில் தேர்ந்தவராயின் விஞ்ஞானத்தை விரும்பிக் கற்பர்; இதுதான் அவர்கள் உலகம்; இவ் வாழ்வுதான் அவர்கள் இன்ப வாழ்வு. பிறந்து மொழி பயின்ற நாள்முதல் இறந்து மறையும்வரை அவர்கள் அறிவை வளர்த்தவண்ணமாயிருப்பர்.

*"யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்*
*சாந்துணையும் கல்லாதவாறு"*

என்ற வள்ளுவர் பொன்மொழியைப் போற்றி நடப்பார்கள்.

அறிவு வேட்கையுடையோர் பண்டும் வாழ்ந்தனர். இன்றும் வாழ்கின்றனர். மக்களினம் அறிவுப் பாதையில் முன்னேறுகின்ற தென்பதற்கு அவர்களே அடையாளமாவார். அண்மையில் வாழ்ந்த ஒரு பெரியார் வாழ்வு எனது நினைவுக்கு வருகின்றது. ஸ்ரீலஸ்ரீ சிவபாதசுந்தரம் அவர்கள் இக்கால அறிஞர் உலகின் மதிப்புப் பெற்ற பெரியவராவர். அவர் தமது இளமைப் பருவத்தில் தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்பவற்றை முறையாகக் கற்றவர். பல்கலைக் கழகப் பட்டத் தேர்வில் கணிதம், தருக்கம், ஆங்கிலம் என்னும் பாடங்களில் சித்தி பெற்றார். பின்னர் தத்துவ சாத்திரம், உளநூல், வேதிநூல், பூதநூல் முதலிய பன்னூறு கலைகளையும் பயிற்ற வல்ல வித்தகராய் விளங்கினார். தாம்பெற்ற நல்லறிவைத் தமிழுலகும் அறிந்து பயனடையுமாறு அவர் பல நூல்கள் எழுதினார் அவரைப்போலவே ஊர்தோறும் தேயந்தோறும் அறிவுப் பசியுடையோர் பலருளர். அவர்கள் தாம் உயருவதோடு மக்களினத்தையும் உயர்த்துகின்றனர். இங்ஙனமன்றித் தாம் பெற்ற அறிவு போதுமென்றிருப்போர் வளர்ச்சியடையும் மன்பதையில் பிற்போக்காளர் எனக் கருதப்படுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

# இலங்கையின் புராதன நகரங்கள்

இலங்கையின் பழமை இதிகாசத் தொடர்புடையது. இலங்கை வாழ்ந்த வாழ்வைப் புராணங்கள் புகழ்கின்றன. சரித்திரங்கள் இதன் வரலாற்றை விரித்துரைக்கின்றன. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே இலங்கை செல்வத்திற்கும் சீரிய வாழ்விற்கும் பேர்போன நாடாக விளங்கியது. இலங்கையின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு நகரமும் ஒவ்வொரு காலத்தில் உன்னத நிலையில் இருந்தமையை அவ்விடங்களின் பெயர்களும் கட்டடங்களும் இன்றும் பொன்றாது இயம்புகின்றன. இலங்கைக்கு அன்று வந்த அனுமன் பளிங்கு மாளிகைத் தலங்களையும் பனிமலர்ச் சோலைகள் பலவற்றையும் பார்த்தான். பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டான். "களிக்கின்றார் அல்லால் கவல்கின்றார் ஒருவரை" அவன் காணவில்லை. இன்றும் இலங்கையைக் காணவருவோர் அதன் பழமையையும் எழில் நிறைந்த பண்டை வாழ்வையும் பார்த்து வியக்கின்றனர். காலப்போக்கிலே பல்வேறு மன்னர்கள் இலங்கையைக் காத்தோம்பினர். பல்வேறு மக்கட் சாதியார் இங்கே நாகரிகம் மிக்க நல்வாழ்வு கண்டனர். அந்தப் பழம் பெருமையைப்பற்றி நூல்கள் ஓரளவு குறைத்துக் கூறவும் கூடும். ஆனால் காட்டிலும், மேட்டிலும், கடற்கரையிலும் காற்றிற்கும் மழைக்கும் கலங்காது நிற்கும் கட்டடங்கள் கூறுவன பலப்பல.

இன்று நாகரிக வாழ்வு கொலுவிருக்கும் இடம் இன்னும் சிலகாலத்தில் கரடியும் புலியும் வாழும் காடாவதுமுண்டு. இவ்வியற்கையின் விளையாட்டுக்குப் புறநடையாக விளங்கும் நகரம் எதுவும் இல்லை. அன்று "வங்கம் மலிகின்ற மாதோட்ட நன்னகர்" என்று போற்றப்பட்டது. கேதுவினால் பூசிக்கப்பட்ட கோயிலுடைமையால் கேதீச்சரமென்ற திருப்பெயர் பெற்றது. சிறந்த பெரிய ஆலயமும், திருவீதிகளும், மாடமாளிகைகளும் உடையதாய் விளங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நகரத்தைப் புதுக்க முற்பட்ட புதைபொருளாராய்ச்சியாளர் பல அரிய பொருள்களைக் கண்டு கண்டு வியக்கின்றனர். சைவ நல்வாழ்விற்கும் நாகரிகத்திற்கும் நிலைக்களமாக அது ஒருகாலத்து விளங்கியது என்பதை நாமறிந்து பெருமைப்படுகிறோம்.

சைவம் சிறந்த தலைநகரின் இன்றைய நிலையை நாம் எண்ணி நிற்கையில், இலங்கையில் இருந்த அரசுச் சிறப்பை எடுத்துக்கூற இதோ அநுராதபுரம் நம்மை அழைக்கிறது. தொண்ணூற்றுக்கு மேற்பட்ட மன்னர்கள் இங்கே இருந்து சிறந்தனர் என்பதை இதன் பெயரே எடுத்துரைக்கின்றது. சிங்கள மன்னர்களும் தமிழரசர்களும் மாறி மாறி ஆட்சிசெய்தமையை அருவ வடிவிலுள்ள அரமனைகள் ஒளிக்காமல் உரைக்கின்றன. சைவமும் பௌத்தமும் தலைதூக்கி நின்றமைக்குச் சிதைந்த நிலையிலும் திருந்திய நிலையிலும் உள்ள ஆலயங்கள் சான்று பகர்கின்றன. மன்னர்கள் மடிந்தாலும், மக்கள் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டாலும் நகரத்தின் பண்டைப் பெருமிதம் குறையவில்லை. ஆயிரங்கால் மண்டபமும், ஆதியில் கொணர்ந்த அரச மரமும், அழிந்து சிதைந்துகிடக்கும் அரசர் கட்டடங்களும் நகரத்தின் பழைய வாழ்வின் ஞாபகச் சின்னங்களாக நிலைநிற்கின்றன.

இலங்கையில் சித்திரக்கலை சிறந்திருந்த இடம் சிகிரிக் குன்றம். அம்மலையின் தோற்றம் அன்று ஒரு மன்னனை வரவேற்றது. காசிபன் என்ற மன்னன் அக் குன்றிலே கலைக் கோயில் கண்டான். கல்நெஞ்சன் ஆயினும் அவன் வளர்த்த கலைச்செல்வம் சிங்ககிரியின் சீரிய வாழ்வைச் சொல்லுகின்றது. காட்டின் நடுவில் மலைக்குகையில் ஒதுங்கியிருக்கும் ஓவியங்களின் பொலிவைக் காண்பவர் அறியும் உண்மைகள் பலப்பல. மனிதன் மறைந்து பல்லாண்டுகள் கழியினும் அவன் இன்பக் கனவுகளும் எழிற் கற்பனைகளும் கால வெள்ளத்தில் அடியுண்ணா என்பதை அம்மலை பறைசாற்றுகின்றது.

இலங்கையின் பண்டைய அரசர் வாழ்வில் அமைதி பூத்தது அருமை என்றே கூறலாம். பலபல கலகங்களும், படையெடுப்புக்களும் இடையிடையே இன்ப வாழ்வைக் கெடுத்தன. தென்னிந்திய சோழ பாண்டிய மன்னர்கள் வேண்டுதலின் பேரிலும் தம் பெருமை பரவுதல் குறித்தும் இலங்கையில் படையெடுத்தனர். அதனால் நன்மைகளும் ஏற்பட்டன தீமைகளும் விளைந்தன. பொலநறுவா என்ற நகரம் இவ்வித படையெடுப்புகளுக்கெல்லாம் ஈடுகொடுத்து இறுமாந்து நின்றது. தமிழ் மன்னர்கள் பலர் இந்நகரைத் தலைநகரமாகக் கொண்டு பொன்னகரினும் மேலாகப் புரந்தனர். சிற்பிகள் பலரைத் தென்னிந்திய நாட்டினின்றும் வருவித்து சிவாலயங்களையும் விகாரைகளையும் எழுப்பினர். சைவமும் பௌத்தமும் சமஉரிமை பெற்றுத் தழைத்தோங்கின. இன்று அவற்றின் நினைவுக்குறியாகக் கிலனமான கட்டடங்களும் கற்றூண்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்காங்குக் கிடக்கின்றன. ஒருகாலத்தில் செல்வமும் களிப்பும் அந்நகரில் உள்ளார நடம்புரிந்தன. கல்லாலும் செங்கல்லாலும் அன்றிப் பளிங்கினாலும் உலோகங்களினாலும் மாளிகைகள் உருப்பெற்று விளங்கின. ஆனால் இன்றோ அந் நகரம் ஒடுங்கி உறங்கிக் கிடக்கின்றது.

இவ்வாறே ஒரு நாட்டின் வாழ்வில் பல மேடு பள்ளங்கள் ஏற்படலாம். மக்களும் மன்னர்களும் பிறந்து சிறந்து இறந்துகொண்டிருப்பார்கள். ஆயினும், மக்களின் செயல்கள் என்றும் மறைவதில்லை. அவைகளே அவர்களின் பெருமை சிறுமைகளையும் வாழ்வு தாழ்வுகளையும் வகுத்துக் கூறும் சரித்திர நூல்கள். இலங்கையில் எத்தனையோ மன்னர்கள் தோன்றினார்கள். அவர்களில் நல்லவர்கள் சிலர்; தீயவரும் சிலர். அவர்களெல்லோரும் இறந்தொழிந்துவிட்டார்கள். அவர்களின் விழுமிய செயல்கள் நாட்டுக்கு வரும் விருந்தினர்கள் விரும்பிக் கேட்கும் வகையில் அன்னார் பண்பினை விரித்துக் கூறுகின்றன. இலங்கையில் அன்றிருந்த மாபெரும் நகரங்கள் இன்று இல்லை. ஆனால் அங்கு எஞ்சியிருக்கும் ஒவ்வொரு கற்றூணும் நகரத்தின் அரசியல் பெருமையையும், சமயச் சிறப்பையும், கலை வளர்ச்சியையும் மக்கள் வாழ்வின் மாண்பையும் ஒளிக்காமல் எடுத்துரைக்கும். இலங்கையைச் சுற்றிப் பார்ப்பவர் மலைகளையும் மண்மேடுகளையும், கற்குவியல்களையும் காணமாட்டார். ஆங்கே மறைந்து கிடக்கும் இலங்கையின் புராதனச் சிறப்பையும் பொன்றி மறைந்த பெருவாழ்வையுமே நினைவு கூர்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

## "பெருமையும் சிறுமையும் தான்தர வருமே"

நம்மிற் சிலர் தம் நிலையினின்றும் உயருகின்றார்கள். சிலர் அவ்வித உயர்வினின்றும் தாழ்கின்றார்கள். கேடும் ஆக்கமும், உயர்வுந் தாழ்வும் ஒருவருக்கு மாறி மாறி வருவதைக் காண்கின்றோம். இதற்குக் காரணம் என்ன? உயர்ந்தவர் நம்மவரானால் அவர் தம்முயற்சியால் உயர்ந்தார் என்கின்றோம். பிறரானால் அவர் தமது நற்காலத்தினால் பெரியர் ஆனார் என்கிறோம். அவ்வாறே ஒருவர் கேடுற்றால் அவர் நம்மவராயின் தீயூழால் சிறுமையடைந்தார் என்றும், பிறரானால் தம் மந்த புத்தியால் கெட்டார் என்றும் கூறுவோம். அன்பும் அன்பின்மையும் காரணமாக நாம் இவ்வாறு கூறினாலும் இதன் கண்ணும் ஓர் உண்மை மறைந்து கிடக்கிறது. ஒருவன் உயர்வதற்கும் தாழ்வதற்கும் அவனே காரணம் என்பதை நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமயத்திலாவது ஒப்புக் கொள்கிறோம். அன்பு காரணமாகவும் அறியாமை காரணமாகவும் நாம் சில சமயங்களில் உண்மையைக் கைவிட்டுத் தவறான முடிபைப் பிடித்துக் கொள்கின்றோம்.

மனிதன் ஒருவனிடத்திலே தான் காலத்தையும் வேறு தவறான காரணத்தையும் நம்பிக் கெட்டுப் போகும் இயல்பு இருக்கிறது. விலங்குகளும் பறவைகளும் விதியை நம்பாமல் முயற்சியையே கைக்கொண்டு வாழ்கின்றன. உணவு தேடுவதிலும், உறைவிடம் சமைப்பதிலும் விதியை நம்பாத இயல்புடைய சிறு பிராணிகள் எத்துணை வெற்றி பெறுகின்றன! ஆனால் மனிதனோ காலம் காலம் என்று சோம்பியிருந்து மாய்ந்து போகின்றான். அவனிடத்தில் உடல் பலம் இருக்கிறது; ஊக்கமில்லை. அச்சம் இருக்கின்றது; துணிவில்லை. செய்யும் திறமிருக்கிறது; தீவிர முயற்சியில்லை. இதனால் அவன் வாழ்வு வெறுவாழ்வாய்ப் பாழாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நல்லவர்களாதற்கும் தீயவர்களாதற்கும் நம்மிடத்துள்ள பண்புகளே காரணமானவை. நம் பண்புகள் கல்வியறிவினாலும் கூட்டுறவினாலும் விருத்தியடைகின்றன. "நல்லிணக்கமல்லது அல்லற்படுத்தும்" என்றபடி நல்லிணக்கம் நன்மையைத் தரும். தீயிணக்கம் கேட்டைத் தரும். ஒருவனை நல்லவனோ தீயவனோ என்றறிதற்கு அவனது செயல்களையும், அவனது நண்பர்களையும் நாம் ஆராய்ந்தறிதல் வேண்டும். நண்பு செய்வதனை வேறொன்றும் செய்யமாட்டாது. உயிரின் இயல்பு சார்ந்ததன் வண்ணமாதல் என்பர் தத்துவ நூலோர். நாம் தீயவர் குழுவிலிருந்துகொண்டே நல்லவர்களாக வாழ்தல் அரிது. தீயவர் சேர்க்கையால் நன்மையறியாமலே நாம் தீயவர்களாகிவிடுவோம் என்பதில் ஐயமில்லை. உயர்ந்த நூல்களையும் சிறந்தோர் நட்பையும் கைவிடாது போற்றி நடப்பவன் முன்னேற்றப் பாதையில் முதலடி எடுத்து வைத்தவனாவன்.

உயர்ச்சி ஊக்கத்தின் பயன் என்றும் தாழ்ச்சி சோம்பலின் பேறு என்றும் கூறலாம். பிள்ளைப் பருவத்தில் உள்ளத்தின் ஊக்கம் பெறாதார் ஒருவருமில்லை. புரண்டு புரண்டு அழும்பிள்ளை ஊக்கமுடையமையால் தவழ்ந்து மகிழ்கிறது. மேலும் ஊக்கங் குன்றாமையால் தவழ்ந்து பழகும் நிலை மாறி அதுவே நடந்து விளையாடுதலும் செய்கிறது.

*"வெள்ளத்னைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத்தனைய துயர்வு"*

பிள்ளைப் பருவத்திருந்த உள்ளமிகுதியே பெரியோர் ஆனபின்பும் சிலரிடத்துக் காணப்படுகின்றது. அவர்கள் ஒருபோதும் தூங்கியிருப்பதில்லை. தோல்வியைக் கண்டு ஏங்கியிருப்பதுமில்லை. நடக்கப்பயிலும் குழவிக்கு இடையிடை தடைகள் நேருகின்றன. தள்ளாடி விழுகிறது. அதனால் அது முயற்சியைவிட்டு மடிந்து கிடக்கின்றதா? அதுபோலவேதான் பெரியோர்கள் எடுத்த கருமத்தை எது தடுத்தாலும் ஊக்கம் குன்றாது உழைக்கின்றனர்.

*"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழா துஞற்றுபவர்"*

என்றபடி ஊக்கமுடையோர் ஊழையும் வெல்கின்றனர்.

உயருவதற்கு வழி நீதி நூல்கள் அறநூல்கள் கூறுகின்றன. உயர்ந்தோர் வாழ்வை வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. உயர்ந்தவர் உயர்ந்த காரணத்தையும் தாழ்ந்தவர் தாமாகக் கெட்ட செய்தியையும் ஈண்டு வரலாற்றில் பார்ப்போம். காந்தியடிகள் உயர்ந்தது எதனால்? அவரை மாந்தர் குலமே மதிக்கக் காரணம் என்ன? அவரிடத் தியல்பாயமைந்த அன்பு, சத்தியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் நலம் பேணுதல் முதலிய பெரும் பண்புகளும் அப்பண்புகளை வளர்க்கும் முறையில் வரும் இடர்களுக்கு மடியாது இறுதிவரை உறுதியாக உழைத்தமையுமேயாம். இவ்வித உள்ளத்துயர்வு அவரை இமயத்திலும் மேலாக உயரச் செய்தது. இனி, கெட்டார் ஒருவரை நோக்குவோம். சிறந்த வாழ்வில் இருந்த ஹிட்லர் முதலியோர் சிறுமையுற்றது எதனால்? யாரால்? பிரித்தானியரின் பிரித்தாளும் தந்திரத்தாலா? அமெரிக்கரின் ஆயத பலத்தாலா? உருசியரின் ஒன்றுபட்ட தாக்குதலாலா? இல்லை. இவையாவும் இல்லை. ஹிட்லரின் உள்ளம்தான் அவரைக் கேட்டில் வீழ்த்தியது.

*"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்தூக்கின்*
*உயிர்க்கிறுதி யாகிவிடும்"*

இந்தப் பொய்யாமொழியின் பொருளை அவர் அறியார். ஹிட்லர் நுனிக்கொம்பர் ஏறினார். அண்டை நாடுகளை யெல்லாம் அடக்கி, அச்சுறுத்தி, அவற்றின் தலையில் இருந்தார். அவ்வளவிலும் அவருள்ளம் அமைதி பெறவில்லை. அவரது தீயுள்ளம் மேலும் தழைத்தது. மேலும் பல நாடுகளைப் பணிய வைக்க முயன்றார். அவ்வூக்க மிகுதியே தவறான வழியிற் பாய்ந்த அவரது உள்ளத் துடிப்பே அவரை அதல பாதாளத்தில் தள்ளிவிட்டது.

*"நன்நிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை*
*நிலைகலக்கிக் கீழிடுவானும் நிலையினும்*
*மேன்மேலுயர்ந்து நிறுப்பானும் தன்னைத்*
*தலையாகச் செய்வானும் தான்"*

என்ற பாடலின் பொருள் மேற்கூறிய இருவர் வாழ்விலிருந்து தெளிவாக விளங்குகின்றது.

உய்வதற்குரிய வழியில் நாம் உழைக்குங்கால் உலக மக்களிடமிருந்து மூன்று பரிசுகளைப் பெறவேண்டியவர்களாயிருப்போம். முதலில் நமக்குக் கிடைக்கும் பரிசு பழிப்பு. உலகோர்போக்கிற்கு வேறுபட்ட போக்கில் நாம் போகும்போது நம் உழைப்பைக்கண்டு உலகோர் பழிப்பர். அப்பழிப்பைக் கண்டதுமே நாம் செல்லும் போக்கில் சிறிது பின்வாங்குவோம். பழிப்பைப் பொருட்படுத்தாது பாடுபடுவோர் முன்னேறுவர். அவரது இடையறாத முன்னேற்றத்தைக்கண்ட சிலர் பொறாமைப்படுவர். பொறாமையாற் றீமையும் புரிவர். அத்தீமையைக்கண்டு ஊக்கமுடையோர் சிலர் அஞ்சுவர். அஞ்சாது செல்பவரே ஈற்றில் பெரும் பேற்றை எய்துவர். உயர்வு என்னும் சிகரத்தைப் பிடித்தற்குப் பலபல துன்பப் படிகளைக் கடத்தல் வேண்டும். துன்பத்தைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு துணிவிழந்தோரும், தீநெறி தொடர்ந்தோரும் சிறுமையுறுவர். விரிந்துயர்ந்த ஆலமரத்தின் வளர்ச்சி அதன் வித்தில் அடங்கியிருப்பது போல உயர்ந்து பெருமையடையும் பண்பும் ஒருவன் உள்ளத்திலேயே அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16

# நாட்டுப் பற்று

நாம் அனைவரும் விரும்புவது நாம் பிறந்த நாடே. நாட்டுப்பற்று மக்களெல்லோரிடத்திலும் காணப்படுகிறது. நாட்டைவிட்டு நாம் அகலும்பொழுது இப்பற்று நன்கு பிறர்க்குப் புலனாகிறது. நாம் கல்வியைக் கருதியோ பொருளைக் குறித்தோ பிறநாட்டுக்குப் போகின்றோம். ஒரு கொலைஞன், கொடியன் என்று பெயர் பெற்றவன், தான் செய்த குற்றத்திற்காகச் சிறை செல்கிறான். நமக்கும் அவனுக்கும் சில நாளில் நாட்டைக் காணவேண்டும் என்ற வேட்கை எழுகின்றது. நமது கருமம் முடிந்ததும் முதலில் நாம் பிறந்த நாட்டை நோக்கியே விரைகிறோம். சிறியர் முதல் பெரியோர்வரை, கொலைஞன் முதல் கலைஞன்வரை எல்லோரும் நாட்டை நேசிக்கின்றனர்.

எல்லோரும் இன்பத்தை விரும்புபவரே. நாம் சிலவேளைகளில் பிறநாட்டில் வாழ்கின்றோம். அங்கே வாழ்க்கை வசதிகள் பல இருக்கின்றன. இன்ப சாதனங்கள் நிறைய இருக்கின்றன. நாம் பிறந்த நாடோ வறுமை குடிகொண்டது. வரண்ட தன்மையது. இன்ப ஊற்றுக்கள் இல்லை. எனினும், நாம் சென்று சேர்ந்த நாட்டையே சிறப்பாக விரும்புவோமா? இல்லை. நாம் பிறந்த நாட்டைத்தான் சிறந்ததென்று எண்ணுவோம். யாரும் குறை கூறின் பொறை பேணி வாளோம். சிறிய நாடாயினும் இன்பமற்றதாயினும் பிறந்த நாட்டையே பெருமையோடு பேசுவோம். நம்மைப்பற்றிச் சிறுமை கூறினும் பொறுமைகொள்ளும் நாம், நாட்டைப்பற்றிக் குறை கூறின் நாவடங்கியிருக்க முடிவதில்லை. நாட்டைப்பற்றி நினைத்தாலே ஊக்கம் உண்டாகிறது. "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே – தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே என்று பாரதி பாடுவது போல ஒரு சக்தி பிறக்கிறது! நாட்டுப்பற்று அத்தகையது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மிடத்திலிருக்கும் அந்த நல்ல பற்றினை நாம் வளர்ப்பதில்லை. நாட்டுக்காக நினைப்பதில்லை. நாட்டுக்காக நாம் வாழ்வதில்லை. நம்மிடத்துள்ள வேறு பற்றுகள் நாட்டுப்பற்றை மறைத்து வளர்ச்சி பெற்றுவிட்டன. பொருட்பற்று, புகழ்ப்பற்று, இன்பப்பற்று, இனப்பற்று, சாதிப்பற்று, சமயப்பற்று, பட்டப்பற்று, பதவிப்பற்று, குலப்பற்று, குடும்பப்பற்று, உடற்பற்று, உயிர்ப்பற்று இப்படி எத்தனையோ பற்றுக்களுக்கிடையில் இன்றைய மனிதன் ஊசலாடுகின்றான். இவற்றை நினைவதிலும் அடைய முனைவதிலும், இடையில் வரும் இன்னல்களைக் களைவதிலுமே அவன் வாழ்வு கழிகிறது. வளரும் பயிரைக் களைகள் மூடி உழவனையும் பயிரையும் நலியச் செய்வதுபோல, தீயபற்றுக்கள் நல்ல பற்றினைக் கெடுத்து மனிதன் உண்மை வாழ்வு வாழவிடாது தடுத்திருக்கின்றன.

பற்றுக்களில் எப்பற்றுச் சிறந்தது? தன்னலம் பேணாத பற்றே தலைசிறந்தது. நாட்டுப்பற்றுத் தன்னை மறக்கச் செய்கின்றது. தன்னன்மையையன்றி நாட்டு நன்மையைக் காக்கத் தூண்டுகின்றது. நாட்டுப்பற்றுள்ளவன் நாட்டின் குறையைப் போக்கவும், நாட்டின் நல் வாழ்வைக் காக்கவும் பாடுபடுபவன். ஒருவன் தன் தாயின் பற்றுடையவனாயின் குற்றமற்ற பற்றுடையவனாயின் தாய் வாடத் தான் மகிழான். தாயின் மகிழ்ச்சியையே தன் திருப்தியாகக் கொள்வன். நாட்டுப் பற்றுள்ளவனுக்குத் தான் பிறந்த நாடு தாய் போன்றது. "தமிழ்த் திருநாடு தன்னை பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா" என்று பாரதியார் நாம் பிறந்த தமிழ் நாட்டைத் தாயென்று தலை வணங்குகின்றார்.

*"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்*
*நற்றவ வானினும் நனிசிறந்தனவே"*

என்ற ஆன்றோர் வாக்குப் பிறந்த நாட்டைப் பெற்ற தாய்க்கு நிகராக வைத்துப் போற்றுகின்றது. தாய் நாட்டை மறந்து தம் நலம் பேணுவோர் தாழ்ந்தவராகவே மதிக்கப்படுவர். "தாய் கிண்ணிப் பிச்சை எடுக்க தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்" என்ற பழமொழியை மெய்ப்பிப்பவர்களும் இருக்கின்றார்களல்லவா?

நாட்டுப் பற்றினால் ஒருவன் தன் நாட்டைத் தன்னருமைக் குடும்பமாகக் கருதுகிறான். ஊரிலுள்ளார் அனைவரும் அவன் உடன்பிறப்பாளர்கள். நாட்டிலுள்ள தூயவர்களைப் போலவே தீயவர்களையும் நேசிக்கிறான். ஏழைகளைத் தன்னைப்போலக் கருதி ஏழை பங்காளனாகின்றான். ஏழை துயர் தீர்ப்பதில் இன்பம் எய்துகின்றான். இங்ஙனம் தன்னலம் துறந்த தன் துன்பம் மறந்து நாட்டுக்காக வாழ்பவனுக்கு எத்தனை கேடுகள்! எத்தனை இன்னல்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***"இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றமறைப்பான் உடம்பு"***

என்று வள்ளுவர் பெருமானே வியக்கின்றார். அத்துன்பங்களை அவன் பொருட்படுத்துவதில்லை. தன் துன்பத்தைத் துடைக்க நினையாத அவனுக்குத் தெய்வமே முன்னின்று ஏவல் செய்கிறது.

***"குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்"***

எனத் திருக்குறள் ஆணை தருகிறது. நாட்டுப்பற்றுடையவன் தன்னலமற்ற வாழ்வு நடத்துதலினால் தான் நன்னிலையடைகிறான். நாடும் நன்னிலையடைகிறது.

உலக சரித்திரம் ஒவ்வொரு நாட்டினதும் கடந்த கால வாழ்வு தாழ்வுகளை எடுத்துரைக்கின்றது. ஒவ்வொரு நாடும் அந்நாட்டிலுள்ள தன் மக்கள் சிலரது தன்னலமற்ற சேவையினாற்றான் முன்னேறியது என்பதை சரித்திர நூல்களில் நாம் அறிவோம். மேனாடுகளிலும் சரி கீழ்நாடுகளிலும் சரி அவ்வப்போது தோன்றிய பெருமக்கள் தம் தாய்நாட்டுக் காற்றிய பணிகள் எடுத்துரைக்கப்புகின் அவை ஏட்டில் அடங்கா. அப்பெருமக்களின் கனவிலும் நனவிலும் அகலாது நின்றது நாட்டுப்பற்றே. ஒருவர் ஒரு துறையில் நாட்டுக்குப் பணி புரிந்தால் மற்றவர் வேறொரு துறையில் பாடுபடுவார். ஒருமுறை ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க நாட்டைக் காப்பதற்குப் படை திரட்டினார். ஊரிலுள்ள குதிரைகளெல்லாவற்றையும் பிடித்து வருமாறு கட்டளையிட்டார். குதிரைக்குச் சொந்தக்காரர்களெல்லாரும் தலைவர் கட்டளைக்கு அஞ்சித் தம்மிடமுள்ள குதிரைகளைக் கொடுத்துவிட்டனர். ஒரு கிழவி தன்னிடமுள்ள குதிரைகளைக் கொடுக்க மறுத்துவிட்டாள். லிங்கன் கடுமையான உத்தரவிட்டார். அவள் சிறிதும் அஞ்சவில்லை. அவள் பதில் கடமையும் கருத்தும் நிறைந்ததாய் இருந்தது. நாட்டைப் பகைவரிடமிருந்து காக்கக் குதிரை வேண்டுவதுபோலவே பஞ்சத்தினின்றும் காக்க உணவு பயிரிடவும் குதிரைகள் வேண்டும் என்று கூறியது அமெரிக்க நாட்டுத் தலைவனான ஆபிரகாம் லிங்கனையே சிந்திக்கத் தூண்டியது. அவள் - அம் முதிய கிழவி யாரெனில் ஆபிரகாம் லிங்கனின் தாய்தான். இவ்வாறு மகன் ஒரு துறையிலும் தாய் ஒரு முறையிலும் நாட்டுக்குப் பணி செய்தார்கள்.

பல்வேறு நாடுகளின் சுதந்திரப் போராட்டத்தில் இந்தியாவின் போராட்டம் சிறப்பானது. சுதந்திர இந்தியாவின் தந்தை மகாத்மா காந்தியவர்கள், அவர்கள் அந்நாட்டுக்குச் செய்த அறப்பணி உலகத்தில் வருங்கால மக்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. அவர்கள் சுதந்திர இந்தியாவை உருவாக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர மக்களை உருவாக்க முயன்றார். இப்பொழுது மாத்திரமன்றி எப்பொழுதும் எந்நாட்டவரும் பொன்னாட்டவர்போல் வாழ வழிகாட்டியவர். அவர் தொண்டின் மேன்மை அவர் வழிவழித் தொண்டாற்றப் பலரைத் தோற்றுவித்தது. இன்று உலகம் வியக்கும் வகையில் வினோபா அடிகள் மிகப்பெரும்பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இந்திய மக்கள் எல்லோரையும் நம்மவர்போலக் கருதி அவர்கள் வறுமையை நீக்கப் பாடுபடுகின்றார்கள். அவர் தனது பூதான இயக்கம் பொருளாதார நிபுணர்களையே சிந்தித்து வியக்கச் செய்கிறது. அன்னார் இந்தியாவை வாழ வைப்பதோடு மக்களினத்துக்கே மணி விளக்கேற்றுகின்றார்கள். நாட்டுப்பற்று ஒரு நாட்டை உயர்த்துவதோடு உலகத்தையும் வானோங்கு பெருவாழ்வு வாழ அழைத்துச் செல்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## வீரப்பர்

(ஒரு கற்பனைக் கதை)

1. சடையனூர் வீரப்பரின் பற்றற்ற வாழ்க்கை – சிறுவரிடத்துப் பிரியம் – புத்திமதி – மாம்பழச் சாமியாதல்.

2. அவ்வூர்த் தனவந்தரின் விருப்பம் – சாமியார் அவர் கடையில் மேற்பார்வையாளராக அமர்தல்.

3. பணியாளரைத் திருத்தல் – மறைவாக அவர்கள் சுருட்டுப் புகைத்தல் – வேலி தீப்பிடித்தல்.

4. வழக்கு விசாரணை – வீரப்பரின் இரண்டு மாதச் சிறை – சிறையில் அற உபதேசம் – அரசாங்க நன்மதிப்பு.

வீரப்பர் சடையனூரில் நல்ல குடும்பத்தில் பிறந்தவர். தமிழோடு ஆங்கிலமும் கற்றவர். அவர்க்கு இளமையிலேயே வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. தம் உறவினர்களைத் துறந்து, மடங்களிலும், கோயில்களிலும் தங்கினார். இவர்க்குச் சிறுவர்களில் மிகப் பிரியம் உண்டு. அவர்களை அழைத்து மாம்பழம் கொடுப்பார். அதோடு நல்ல நீதிக்கதைகள், நற்புத்திகள் சொல்வார். ஒருவேளை மாத்திரம் உணவு கொள்வார். இவர்மேல் அன்பும் மதிப்பும் உள்ள அவ்வூர்த் தனவந்தர் ஒருவர் இவரைத் தம் வீட்டில் ஓர் அறையில் தங்கும்படி வேண்டினார். அவ்வாறே சாமியாரும் அங்கே தங்கி வந்தார். வீடு மிகப் பெரியது. அதில் ஓர் அறையில் சாமியார் இரவில் மாத்திரம் தங்குவார். பகல் முழுவதும் மரநிழலிலும் மடத்திலும் சிறுவர்களோடு கழிப்பார். சந்தைக் கடைத் தெருக்களுக்குச் சென்றால் மாம்பழம் மாத்திரம் வாங்குவார். இதனால் இவரைச் சிறுவர் பெரியர் எல்லாரும் மாம்பழச் சாமியார் என அழைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனவந்தருக்குப் பல நகரங்களிலும் கடைகள் இருந்தன. நல்ல வியாபாரம். நல்லூரிலுள்ள கடை மாத்திரம் தொல்லை கொடுத்தது. தக்க மேற்பார்வையாளர் கிடைக்கவில்லை. அவருக்கு ஒரு நினைவு வந்தது. சாமியார் பற்றற்றவர்; அன்பு மிக்கவர்; பணியாளர்களை மேற்பார்ப்பதிலும், பொருளைக் காப்பதிலும் பொருத்தமானவர்; அவர் தம் கடையில் அமர்ந்தால் ஒரு தொல்லையும் ஏற்படாது. இவ்வாறு எண்ணியவராய்த் தனவந்தர் தம் விருப்பத்தைச் சாமியாரிடம் தெரிவித்தார். உலகத் தொடர்பினின்றும் விலகி வாழ விரும்பும் சாமியார்க்குத் தனவந்தரின் வேண்டுதல் சற்றும் பிடிக்கவில்லை. பொருள், புகழ் முதலிய பற்றுக்கள் தம் மனத்தில் புகுந்துவிடுமோ என அஞ்சினார். அவரது பற்றற்ற வாழ்விலும் இனிய சுபாவத்திலும் அவ்வூரவர் அனைவரும் பூரண நம்பிக்கையுடையர். அவ்வெல்லாரையும் விடத் தனவந்தர்க்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. ஆதலினால் அவர் மீண்டும் மீண்டும் வேண்டினார். தம் நன்மையையும் தம்மைச் சேர்ந்தவர் நன்மையையும் கருதி அவ்வேலையை ஏற்கவேண்டும் என்று இரந்தார். சாமியார் கருணையுள்ளம் படைத்தவர். மீண்டும் மீண்டும் வேண்டியது சாமியார் உள்ளத்தைத் திருப்பிவிட்டது. மேற்பார்வையாளர் என்ற முறையில் யாதொரு பொறுப்புமின்றிக் கடமை செய்ய இசைந்தார்.

ஒரு நல்ல நாளிலே சாமியார் நல்லூர்க் கடையில் சேர்ந்தார். கடையிலுள்ள பணியாளர்கள் அவரிடத்து மிக்க மதிப்பு வைத்தனர். சாமியார் வியாபார விஷயங்களில் மாத்திரமன்றிப் பணியாளர் பழக்க வழக்கங்களிலும் கவனஞ் செலுத்தினார். அவர்களுக்கு அவர் இனிய முறையில் பல நற்புத்திகள் கூறினார். அவர் கோபித்துக் கூறுமளவிற்குப் பணியாளர் நடக்கவில்லை. இரண்டு மூன்று வருடங்கள் வியாபாரம் நடந்தது. நிர்வாகமும் நன்றாக இருந்தது.

எவ்வளவு குணமுள்ளவிடத்திலும் குற்றங்கள் இருந்தே தீரும். குற்றத்தின் தொகையைக் குறைத்தாலும் குற்றத்தை முற்றாக நீக்கமுடியாது. வேலை செய்யும் பணியாளர்களில் சிலர் இளமையிலேயே சுருட்டுப் புகைக்கும் பழக்கம் உடையவராய் இருந்தபடியால் அதை அவர்களால் நீக்க முடியவில்லை. சாமியாருடைய கட்டளையிலும் அவர்க்கு மிகுந்த மதிப்பு உண்டு. எனவே அவர்கள் சுருட்டுப் புகைக்க நேர்ந்தபோதெல்லாம் கொல்லைப்புறம் செல்வர். தம்செயல் சாமியார்க்கு மாத்திரமன்றி மற்றவர்களுக்கும் புலனாகக் கூடாதென்ற பயம் உண்டு. ஒருநாள் அப்பணியாளரில் ஒருவன் கொல்லையிலுள்ள கிணற்றண்டை நின்று புகைக்கும் சமயம் சாமியார் அங்கே வந்துவிட்டார். உடனே அவன் பிடித்த சுருட்டை அப்படியே வீசிவிட்டு வந்துவிட்டான். சாமியார் கொல்லையிலிருந்து திரும்பும் நேரத்தில் வேலியில் நெருப்புத் தீவிரமாக வேலைசெய்யத் தொடங்கிவிட்டது. அயல்வீட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திரப்பட்டார்கள். அலறினார்கள். சாமியாரே இதனைச் செய்தார் என்று எண்ணி அவரை நையப் புடைத்தார்கள். அம்மட்டோடு நில்லாது வழக்குத் தொடுத்தார்கள்.

நீதிமன்றத்திற்குச் சாமியார் சென்றிருந்தார். குறுக்கு விசாரணைகளை அவர் ஒரு போதும் கேட்டறியார். எனவே நீதிபதிமுன்பு நிறுத்தப்பட்ட வீரப்பருக்கு ஒன்றும் புலனாகவில்லை. நியாயவாதிகள் பல கேள்விகள் கேட்டனர். அப்பொழுதெல்லாம் வீரப்பர் வாயினின்றும் ஒரு பதிலும் வரவில்லை. கண்களிலிருந்து நீர்தான் பெருகி வழிந்தது. நீதிபதிக்கோ மற்றவர்களுக்கோ ஒன்றும் விளங்கவில்லை. வீரப்பரோ கலங்கி அறிவிழந்து விழுந்தார். மன்றத்திலுள்ள அனைவரும் மனமுருகிவிட்டனர். அவரைப்பற்றிய விசாரனை ஒத்திவைக்கப்பட்டது. வீரப்பரின் உடல் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மறுநாள் விசாரனை தொடங்கிற்று. வீரப்பர் உள்ளத்திலும் ஒரு மாற்றம். முந்திய வீரப்பர் அல்லர். முதலிலேயே தாம் குற்றவாளி என்று உரத்துக் கூறினார். குற்றவாளியே என்று துணிவாகக் கூறினார். அத்துணிவின் கருத்தை நீதிபதிதாமும் அறிந்தவரல்லர். சிறைதான் தமக்கு ஏற்ற இடமென்றும் சிறைக் கைதிகளைத் திருத்தும் பொறுப்பை ஏற்பதே இறைவன் தமக்கிட்ட பணி என்றும் எண்ணிய வீரப்பரை யாரால் அறிய முடியும்? அவருக்கு இரண்டு மாத சிறைத்தண்டனை கிடைத்தது.

சிறை சென்ற வீரப்பர் கைதிக் கோலத்திலும் கருணை வடிவமாகக் காட்சியளித்தார். அவர் நடத்தையைக் கண்டு அதிகாரிகளும் அஞ்சி மரியாதை செய்தனர். அவர் பேச்சைக் கேட்டு மற்றக் கைதிகளும் மாசு தீர்ந்தனர். சிறையில் அவர்க்கிட்ட உணவு அவர் தேவைக்கு மிகுந்ததாயிருந்தது. அடுத்தார் பசியைத் தணித்தார். சிறைக்கூடத்தை அறக்கூடமாக்கினார். இரண்டு மாத காலமும் திரண்டு ஓடிவிட்டது. வீரப்பர் சிறையைவிட்டு நீங்கவில்லை. மேலும் சென்று, தினமும் தமது அரிய பொழுதை அங்கேயே கழித்தார். அச்சிறையில் தங்கிய கைதிகள் மறுமுறை அங்கு வந்திலர். நல்லவர்களாகி நாட்டார் மதிக்க வாழ்ந்தார்கள். சிறைவாசல் நாளடைவில் கைதிகளை அறியாத வெறுவாசலானது. அரசாங்கம் வீரப்பர் செயலைக்கண்டு மெச்சியது. ஒரு மரியாதை செய்ய எண்ணியது. வீரப்பருக்கு அல்ல. சிறைக்கு ஒரு பெருமை வந்தது. அந்தச் சிறைக்கூடம் அன்று முதல் வீரப்பர் நினைவுக்கூடம் என அழைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

# உலக சமாதானத்துக்காக உழைத்த ஒருவர்

போரைத் தொடங்குவதில் சிலர்க்கு ஆர்வம் பிறக்கிறது; சிலர்க்குப் போரை அடக்குவதில் ஆவல் எழுகிறது. போர்ப்பறைகேட்டுப் பூரிப்போர் சிலர்; போரின் கேட்டையறிந்து புலம்புவோரும் சிலர். மக்கள் தோன்றிய நாட்டொட்டுப் போரும் பிணக்கும் வேரூன்றி வளர்ந்து வந்திருந்தன. "ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்றிவ் வுலகத்தியற்கை" என்றிவ்வுண்மையை ஒரு புலவர் பெருந்தகை புலப்படுத்துவர். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தண நன்மக்கள் போரைத் தடுத்து அமைதியை நிலை நாட்ட அன்றும் தோன்றினர்; இன்றும் தோன்றியுள்ளனர். சங்க காலத்தில் பல புலவர்கள் தங்கள் சாதுரிய மொழிகளால் அவ்வப்போது தமிழ்மன்னரிடையே ஏற்பட்ட பூசலைத் தடுத்தனர். வீரத்தையும் வெற்றியையும் மிகுத்துப் பாடிய சங்கப் புலவர்கள் அமைதியை நிலை நாட்டத் தூதுபோயும் அறிவுரை கூறியும் அரும்பாடுபட்டனர்.

தமிழ் நாட்டில் பாண்டிய சோழசேர மன்னர்கள் போர் வெற்றியில் நேரின்றி விளங்கியமைபோல வடநாட்டில் மௌரிய மன்னர்களும் சிறந்திருந்தார்கள். அவர்களில் அசோகன் புகழ் அன்றும் இன்றும் புலவர் பாடும் பெற்றி மிக்கது. அவனது தர்மசக்கரம் பாரத நாடெங்கணும் பரந்த நானிலமெங்கணும் அமர்நெறிமாற்றி அருள்நெறி போற்றியது. அன்று வாழ்ந்த அசோகனின் அன்பும் அமைதியும் பொருந்திய அருளாட்சியை இன்றைய உலகிற் களிப்பவர் பாரதப் பிரதமர் ஜவகர்லால்நேரு அவர்களாவர். அன்பு நெறியினால் துன்பம் அகலும் என்றும், மறக்கொள்கை மன்பதையையே அழித்துவிடும் என்றும் முரசறைந்து முழக்கி வருகிறார் எங்கள் நேரு. புதிய புதிய போர்க் கருவிகளை ஒவ்வொரு வல்லரசும் போட்டியிட்டுப் பெருக்கிவரும் இக்காலத்தில் பாரதப் பிரதமர் அரும்பாடுபட்டு அமைதியைக் காத்து வருகின்றார். அவரது அரு முயற்சியால் பல நாடுகள் சுடுகாடுகளாகாமல் பாதுகாக்கப்பட்டன.

இக் கட்டுரை 1957ல் எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜவகர்லால்நேரு அவர்கள் செல்வத்திற் சிறந்த குடும்பத்திற் பிறந்து செல்வ மகனாக வளர்ந்தவர். இவருடைய பெற்றோர் கலைநல முதலிய பல நலமும் வாய்க்கப்பெற்றோர். இவர்தம் இளமைப் பருவத்தில் இல்லத்திலிருந்தே நல்லாசிரியரொருவரிடம் எல்லாக் கலைகளையும் கற்றார். பதினான்காம் அகவையில் இங்கிலாந்து சென்றார். அறிவியற் கலைகள் பலவும் திறமையுறக் கற்றார். சட்டநூற் படிப்பிற்றேர்ந்து உயர்தர நியாயவாதியாகி ஊர்க்குத் திரும்பினார். வாழ்க்கை யின்பந்துய்க்கும் வாலிப வயதிலேயே அவர் பாரத நாட்டிற்குப் பணி செய்ய விழைந்தார். பெரியார் அடிச்சுவட்டைப் பேணி நடந்தார். "தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை" யல்லவா? நேரு அவர்கள் நற்கொள்கையிலும் நாட்டுப் பணியிலும் உறுதியாக நின்றமைக்கு ஒரு காரணம் காந்தியடிகளின் சாந்த உபதேசமேயாகும். உருசியா முதலிய முற்போக்கான நாடுகட்குச் சென்றும், மேலை நாடுகளின் தீவிர முன்னேற்றத்தை நேரிற் பார்த்தும் அவரது உள்ளம் அன்புவழியில் ஆழ்ந்த பற்றுக் கொண்டமை காந்தியண்ணலார்தம் கூட்டுறவின் பயனே. மனைவியை இழந்தமையாலோ, மனைவாழ்விற்குப் பதில் சிறைவாழ்வே உறவாகச் சேர்ந்தமையாலோ அவரது உள்ளப்போக்கு அடி பிறக்கிடவில்லை. பிறந்தநாட்டு மக்களின் அடிமைத்தளை அகலவில்லையேயென்று அல்லலுற்றார். அவரது நனவிலும் கனவிலும் நாட்டின் விடுதலையும் நல்வாழ்வுமே இலட்சியமாக நிலைபெற்றன.

பாரதநாடு விடுதலையடைந்ததும் அவர் கவனம் அகில உலகத்தையும் நோக்கியது. சகோதர நாடுகளின் துன்பத்தைத் துடைக்கத் தயங்காது முயன்றார். பர்மாவின் விடுதலைக்காகப் பரிந்து பேசினார். வெற்றி கண்டார். இந்தோனேஷியாவின் போராட்டத்திலும் ஈடுபட்டார். அதற்காக ஆசிய நாடுகளின் மாநாடொன்றனைக் கூட்டினார். அதன்பயனாக ஐக்கிநாடுகளின் சபையில் ஆசியாவின் குரல் கேட்டது. ஒல்லாந்தரது விலங்குப் பிடியிலிருந்து விலகி விடுதலைபெற இந்தோனேஷியா பெரும்போர் நடத்தியது. இந்தோனேஷியாவின் போராட்டத்தில் மேற்கு வல்லரசுகள் பராமுகஞ்செய்ய இந்தியா பொறுத்திருக்கவில்லை. ஆசிய மகாநாட்டின் மூலம் நேரு அவர்கள் அற்புதமான வெற்றியை ஈட்டினார். உலகம் வியந்தது. நேரு அவர்களின் உழைப்பு உயர்ந்தது. சாவக நாடும் தன்னரசு பெற்றது.

"மழைவிட்டும் தூவானம் விடவில்லை" என்பதுபோல இரண்டாவது மகாயுத்தத்தின் பின்னும் ஆங்காங்கு போர்ப்பறைகள் ஒலித்தன. கொரிய நாட்டின் தென்புறத்தார்க்கும் வடபுறத்தார்க்கும் ஓயாக்கலகம் உண்டாயது. உலக வல்லரசுகள் ஒவ்வொரு பக்கம் சார்ந்து உதவிகள் புரிந்தன. அந்நாட்டின் அழிவுகளை எண்ணுவாரும் இல்லை; எண்ணி அனுதாபம் காட்டுவாரும் இல்லை. வல்லரசுகள் தத்தம் படைபலம் சோதிக்குமிடத்தில் மற்றவர் யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறவஞ்சி மௌனமாகவிருந்தனர். அருளாளராம் நேரு அவர்கள் அந்நாட்டின் கேட்டைக் கேட்டும் அமைதியடைவாரா, வல்லரசுகளுக்கு நல்லறிவு புகட்டினார். கொடுமை நினைத்தோரை நடுநின்று திருத்தினார்; நல்வழிக்குத் திருப்பினார். கொரியா பிழைத்தது; அசுரக் கருவிகள் அழிவுசெய்த நாட்டில் அமைதியும் இன்பமும் மீண்டும் நிலவத் தொடங்கின.

மீண்டும் குண்டுகள் வெடித்தன. சீனவளநாட்டில் போரரக்கனின் பார்வை விழுந்தது. சீனச் சகோதரரிடையே தீய பிரிவினை உண்டாயது. ஒன்று செஞ் சினா. மற்றது தேசிய சீனா. இரண்டும் பெருமுரண் கொண்டன. ஆண்டும் வல்லரசுகளே தூண்டி நின்றன. ஆயின் நேரு அவர்களின் தீவிர முயற்சியால் போரொழிந்தது. சீனம் புத்துயிர் பெற்றது. போரொழிந்தாலும் போருணர்ச்சி நீங்கவில்லை. ஓரிடத்திலிருந்து ஓட்டினால் மற்றோரிடத்தில் தலைகாட்டுகிறது. எகிப்து நாட்டிலே அந்நாட்டு மக்களுக்குரித்தான சூயஸ் கால்வாயில் பிரித்தானியாவும் பிரான்சும் பேராசை வைத்துவிட்டன. ஆசை காரணமாக அடக்குமுறையை நோக்கின. எகிப்து நாட்டில் அவற்றின் தண்டெடுப்பு எள்ளளவும் பலிக்கவில்லை. இதன் பயனாக பெரும்போர் வரும்போல் இருந்தது. பாரதப் பிரதமர் நேரு அவர்கள் பகைமையுணர்ச்சியைப் போக்கப் பல்லாற்றானும் முயன்றார். பன்முறை தூதனுப்பினார். கல் மனத்தையும் கனிவிக்கும் நன்மொழி கூறினார். மூன்றாவது பெரும்போர் மூளின் மன்பதையே அழிந்துவிடும் என்பதை மாநாடுகளிலும் மன்னர் முன்னிலையிலும் மன்றாடிச் சொன்னார். இத்தகைய உத்தமர் ஒருவர் வாழ்வதனால் உலகம் வாழ்கின்றது. வலியவர்களின் ஆதிக்கத்தால் மெலியவர்கள் நலியாமல் நேரு அவர்களைப் போன்ற பெருமக்கள் தம் கருணையாற் காக்கின்றார்கள். நேரு அவர்கள் உலகம் முழுவதையும் ஒரு குடும்பமாகக் கருதுபவர் தம் நாடு, தம் மக்கள், தம்முயர்வு என்று எண்ணாது மாநிலம் முழுவதும் வாழவேண்டுமென்று ஆசைப்படுபவர். இத்தகைய பெருமக்கள் வையத்தார் தவப்பயன்; வாழும் உலகிற்கு ஒரு வழிகாட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

## நான் விரும்பும் நாடு

(கற்பனை)

மலைபோல அலைமோதும் குமரிக்கடலில் நானும் என் நண்பனும் படகோட்டிச் சென்றோம். ஒரு பெரும் புயல் எழுந்தது. புயலில் அகப்பட்ட படகு புகலிடங் காணாது அலையின் வழிச் சென்றது. எங்கள் உயிர் பிழைக்கும் என்ற நம்பிக்கை சிறிதும் இல்லை. படகோ மிகச் சிறியது. படகோட்டும் நாமோ கடல் வாழ்வில் பழக்கமற்றவர்கள். படகு எத்திசையில் செல்வதென்றோ எவ்விடத்தையடையுமென்றோ நாமறியோம். இரவு பகலாக உணவின்றி உறக்கமின்றி உயிரைப் பிடித்துக்கொண்டு படகில் கிடந்தோம். ஐந்து நாள்கள் இவ்வாறு கழிந்தன. புயலின் வேகம் மெல்ல மெல்ல ஓய்ந்தது. ஆறாம்நாள் அதிகாலை ஒரு தீவின் கரையை எங்கள் படகு சேர்ந்தது.

கரையைக் கண்டதும் கவலை தீர்ந்தோம். உள்ளக் களிப்பில் உடற்களைப்பை மறந்தோம். கரையில் இறங்கிச் சிறிது தூரம்தான் சென்றிருப்போம். அப்போது நம் கைகளை இருவர் பற்றிக் கொண்டனர். அவர்கள் நம்மை ஒரு காவற்கூடத்திற் கழைத்துச் சென்றனர்.

நாம் அங்கு சிலநாள் அடைத்து வைக்கப்பட்டோம். புதிதாக அவ்வூர்க்கு வருபவர் யாரும் ஊரினுள் உடனே அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்களது கொள்கை, நோக்கம், பழக்கவழக்கங்கள் முதலியன ஆராய்ந்தறியப்படும். அவர்கள் நல்லவர்களாயின், அவர்களது வருகை நாட்டுக்குத் தீமை விளைவிக்காதாயின் அவர்கள் உவந்தேற்றுக் கொள்ளப்படுவர். அவ்வித பரிசோதனையின் பொருட்டு நாங்களும் விருப்பம்போல் செல்லாதவாறு நிறுத்திவைக்கப்பட்டோம். சில நாள்களின் பின் விடுதலையடைந்தோம்.

வானுறவோங்கி வளம்பெற வளர்ந்த மரங்கள் தூரத்தே வருபவர்க்கு அந்நாட்டின் இயற்கை வளத்தை எடுத்துக் காட்டும். மக்கள் அதிகம் பாடுபடாமலே வளம்கொழிக்கும் நாடு அந்நாடு. அந்நாட்டு மக்கள் முகத்தில் எந்நேரமும் மகிழ்ச்சி கொலுவிருக்கிறது. அவர்கள் பேச்சில் அன்பு சுரக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் முதல் பெரியோர்வரை எல்லோரும் ஊக்கம் குன்றாதவர்களாய் விளங்குகின்றார்கள். அவர்கள் வாழ்வின் இலட்சியம் அறமொன்றே. தந்தை செய்த அறத்தை மகன் தொடர்ந்து ஆற்றுகிறான். வாழ்க்கை ஓர் அஞ்சல் ஓட்டம் என்பது அவர்கள் உள்ளக்கருத்து. மனித வாழ்வில் அறம் என்னும் விளக்கு இடையீடின்றித் தொடர்ந்து சுடர்விட வேண்டும் என ஒவ்வொருவரும் ஆசைப்படுகின்றனர். அதனால், அறம் வளர்க்கும் நாடு என அதை அழைக்கலாம். பிறர் துன்பத்தைத் துடைத்தல் ஒவ்வொருவருக்கும் பிறவிக் குணமாக அமைந்துள்ளது. தனக்கென உழைப்பவன் ஆண்டில்லை. குறிப்பறிதலும் பொறுப்புணர்தலும் எல்லோர்க்கும் பொதுப் பண்புகள். நாம் அனைவரும் ஓரே குலத்தினரென்றும், உடன் பிறப்பாளர் என்றும் அவர் எண்ணி நடப்பர். அந்த அன்புணர்ச்சி சிறுவயதிலிருந்து சிறந்து வளர்கிறது. அதனாற் பிறரது நிறைவைக் கண்டு பெருமகிழ்ச்சியடைதலே ஒவ்வொருவரதும் பண்பாயமைந்துள்ளது.

அந்நாட்டு மன்னன் மக்களால் தெரிந்தெடுக்கப்படுவன். நாட்டில் அறிவிலும் அனுபவத்திலும் மிக்கவன் ஒருவனை, அவனில்லந் தேடி மக்கள் சென்று அரசனாயிருக்கும்படி வேண்டுவர். அவ்வேண்டுதலின் பேரில் அவன் அரசனாவன். பதவி மோகமும், போட்டியும் அந்நாட்டில் இல்லை. தனக்கு வேண்டிய உதவியாளர்களைத்தானே நியமித்து அரசன் தன் நாட்டைப் பிறநாட்டுத் தாக்குதலினின்றும் பாதுகாப்பன். பிறநாட்டுப் படையெடுப்பைவிடப் பிறநாட்டுக் கொள்கை, நாகரிகம் முதலியவற்றையே பெருங்கவனமெடுத்துத் தடுப்பன். படையினால் ஏற்படும் அழிவைத் தடுத்தலும் கூடும். கொள்கை பரவுதலினால் ஏற்படும் கேட்டை நீக்குதல் அரிது. தீய கொள்கைகளும் பழக்கங்களும் நெடுங்காலம் நின்று ஒரு நாட்டின் உண்மைப் பண்பையும் உயர்ந்த கலாசாரத்தையும் அறவே இல்லாமற் செய்யவும் கூடும் அல்லவா?

அந்நாட்டில் நியாயவாதிகள், சிறைச்சாலைகள், கொலைத் தண்டனைகள் இல்லை. அதனாற் குற்றம் புரிவோரும் இல்லையென்று நாம் எண்ணக்கூடாது. குற்றம் புரிவோர் தண்டிக்கப்படுவதில்லை. அவர்கள் திருந்துவதற்கு நல்ல சூழ்நிலையையும், நல்லோர் நட்பையும் மக்களே உண்டாக்கிக் கொடுக்கிறார்கள். குற்றம் செய்தவனிடத்து எல்லோரும் பரிவு காட்டுவர். அவன் குற்றம் செய்தமைக்குக் காரணம் அவனதறியாமை என்று கருதி அவ்வறியாமை நீக்குவதே அவனைத் திருத்துவோரின் முயற்சியாகும்.

அங்குள்ள கல்விமுறையே புதுமையானது. மக்கள் அனைவரும் அறிவு வளரவேண்டும் என்றே கல்வி கற்கிறார்கள். அதனால் அவர்களது கல்விபயிலும் காலம் எல்லையின்றிச் செல்கிறது. மனிதப்பிறவி கல்விகற்க வாய்ப்புள்ள பிறவியென்று, மாந்தரெல்லாம் சாந்துணையும் தேர்ந்து கற்பர். அங்குக் கல்வித் தேர்வில்லை. வாழ்க்கையில் ஏற்படும் சிக்கலான செய்திகள்தாம் அவர்களின் கல்வித் தேர்வுகள். உலகமே அவர்கட்கு கலைபயில் கூடம். ஒவ்வொரு பிராணியும் ஒவ்வோர் உண்மையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்தும் ஆசிரியன். ஆகவே அவர்கள் தாம் காணும் அனுபவங்களை ஒருபோதும் அலட்சியம் செய்வதில்லை; ஆராய்கிறார்கள். ஆய்ந்து ஆய்ந்து உண்மையை அறிகிறார்கள்; அறியாமையை அகற்றுகிறார்கள்.

உழவு, கைத்தொழில், வாணிகம் முதலிய தொழில்கள் அந்நாட்டில் மிகச்சிறந்த முறையில் நடைபெறுகின்றன. அவையனைத்தும் சமூக நன்மை குறித்தே செய்யப்படுகின்றன. அவ்வாறே இசை, சிற்பம், ஓவியம் முதலிய கலைகளும் வளர்க்கப்படுகின்றன. தொழிலாயினும் கலையாயினும் தன்னலங் கருதிச் செய்தல் பாவம் என அந்நாட்டவர் கருதுவர். தொழிலாளரும் கலைஞரும் உலகைக் காக்கும் மன்னர்போலக் கணிக்கவும் கௌரவிக்கவும் படுவர். ஒரு நாட்டின் நல்வாழ்விற்கு அரசன் இன்றியமையாதவாறு போல, தொழிலாளரும் இன்றியமையாதவர் என்பது அவர்கள் சித்தாந்தம். எனவே, ஒவ்வொரு தொழிலாளனும் ஓய்வுபெறும் காலத்துப் போதுமான ஊதியம் பெறுகிறான். உழைத்த காலத்திற்போல இளைத்த காலத்திலும் உண்மை மதிப்பைப் பெறுகிறான்.

ஒரு குடும்பம் பலபேரைக் கொண்டது. தனிக்குடும்பங்களும், பிரிந்து வாழும் முறையும் அங்குக் காண்டல் அரிது. குடும்பத் தலைவனிடத்தில் அக்குடும்ப உறுப்பினர் அனைவரும் அதிக மதிப்புக் காட்டுவர். அவ்வாறே தலைவரும் உறுப்பினர்களின் விருப்பத்திற்கும் உள்ளப்போக்கிற்கும் தக்க உரிமை கொடுக்கிறான். ஊர் நன்மைக்காக கருமங்கள் பஞ்சாயத்துப் போன்ற சபைகளால் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஊரைச் சேர்ந்தவரும் தம்மூரின் நன்மையை தம் முயற்சிகொண்டே பேணுகின்றனர். பிறருதவியை எதிர்பார்த்தல் அவர்க்குப் பேதமையானது. தம் ஊரிலில்லாத பொருள்களை பண்டமாற்றுமூலம் பிற ஊர்களிலிருந்து பெறுவர். நாணய வழக்கை நாம் காண இயலாது. தம் தேவைக்கு அதிகமான பொருளை யாரும் சம்பாதிக்கமாட்டார்.

நாம் சென்ற சென்ற இடங்களிலெல்லாம் திருந்திய முறையில் விருந்தளித்தனர். மக்களின் மனப்பண்பும், வாழ்க்கை மறையும் நம் மனத்தைக் கவர்ந்தன. அந்நாடு பொன்னாடோ என ஐயுறத்தக்க அழகும், அமைதியும், இன்பமும் அங்குக் காணப்பட்டன. அந்நாட்டிலிருந்து நம் நாட்டை நினையும்போது பொறாமையும், வறுமையும், துன்பமும், சூழ்ச்சியும், தன்னலமும், இன்னல்களுமே நம் மனக்கண்முன் தோன்றின. பிற்போக்கு நாடாயினும் பிறந்த பொன்னாடு என்ற பேரபிமானமே எம்மை ஊர்க்குத் திருப்பியது. நம் நாட்டை அந்நாடுபோல நன்னாடாக்க விழைந்தோம். ஆனாலும், பன்னெடுங்காலமாகப் படிந்துகிடக்கும் மாசைக் கழுவ ஆசை மட்டுமன்றி அயரா உழைப்பும் வேண்டுவதன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

# கிராம முன்னேற்றம்

காந்தியடிகள் நல்வாழ்வு வாழ விரும்பும் மக்களை நோக்கிக் "கிராமத்திற்குப் போங்கள், கிராமத்திற்குப் போங்கள்" என்றார். அவர் வகுத்த நிர்மாணத் திட்டத்திலே கிராமப் புனருத்தாரணமும் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. வினோபா அடிகள் போன்ற மேன்மக்கள் கிராம வாழ்வையே விரும்பி நாடுகின்றார்கள். புலவர்கள் புனையும் இதிகாச புராணங்கள் நாட்டு வளத்தையே முதலிற் காட்டுகின்றன! விடுதலை பெற்ற நாடுகள் கிராமாபிவிருத்தியையே முதன்மையாகப் பேணுகின்றன. இவ்வாறு கிராமம் எல்லோர் கருத்தையும் ஈர்க்கக் காரணமென்ன? கிராமம் ஏன் திருந்தல் வேண்டும்.

கிராமம் இயற்கையழகு பொலியும் இறைவன் படைப்பு. நகரம் அப்படியன்று, மக்கள் படைப்பு. மக்களின் தொன்று தொட்ட பண்பாட்டை என்றும் பாதுகாத்து வைத்திருப்பது கிராமமொன்றே. கிராம வாழ்வு மக்களுக்கு ஏற்றதும் ஏற்றமானதுமாயுள்ளது. சுகத்துக்கின்றியமையாத தூய காற்று, தூயநீர், தூயசூழல் ஆகியவற்றைக் கிராமத்திலேதான் நாம் பெறமுடியும். எளிமையும், இயற்கையோடிசைந்த இன்பமும் அங்கு கொலுவிருக்கின்றன. கிராமமக்கள் தாமும் உண்டு உலகிற்கும் உணவளிக்கிறார்கள். கிராமம் சுருங்கின் உலகின் உயர் வாழ்வு சுருங்கும்.

இன்று கிராமம் எந்நிலையில் உள்ளது? கற்றவர்கள் நகர வாழ்வையே மேலாகக் கருதுகிறார்கள். செல்வர்கள் மெல்ல மெல்ல நகரத்தை நோக்கிச் செல்கிறார்கள். வறியவர்களும் பட்டணம் போனாற்றான் பணம் சம்பாதிக்கலாம் என்று திட்டம் செய்கிறார்கள். நகர வாழ்வுதான் நாகரிக வாழ்வு என்பது பெரும்பாலாவரின் முடிந்த முடிபு. கிராமத்திலிருந்து வந்தவர்கள் உலகந் தெரியாதவர்களெனச் சிலர் சிறுமை பேசுவர். அதனாற் கிராம மக்களிற் சிலர் தமக்குப் பொருந்தாத பழக்கங்களை வருந்திமேற்கொண்டும், தமக்குக் கைவந்த உழவு முதலிய தொழில்களை உவர்த்துக் கைவிட்டும் கேடுறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க சேவைசெய்தலும், ஆடம்பர வாழ்வுமே ஒருவர் அடையும் பேறுகள் எனச் சில்லோர் மயங்கிக் கூறுவர். இவ்வித போலிக் கொள்கையாலும் புல்லிய அறிவினாலும் கிராம வாழ்வு அவமதித்தும் அருவருத்தும் தள்ளப்படுகிறது.

ஒரு கிராமம் சிறக்க வேண்டுமானால் அக்கிராம மக்களிடையேயுள்ள அறியாமையும், தவறான கொள்கைகளும் அடியோடு அகற்றப்படல்வேண்டும். ஏர் பிடித்தல் இழிவானதென்று ஓர் ஊரார் எண்ணுவராயின் அவ்வூராரின் நல்வாழ்வை நாம் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. மக்கள் உழவின் மேன்மையை அனுபவத்திற் கண்டு, அதனை விரும்பிச் செய்யும் வண்ணம் முயற்சிகள் பலவும் இயற்றல் வேண்டும். உழவுக்குரிய சாதனங்களைப் பெருக்கலும், விளைவை யதிகப்படுத்தக் கூடிய வழிவகைகளைக் காணலும் அம்முயற்சிகளில் இன்றியமையாதன. பிள்ளைகளின் பள்ளிப் படிப்பில் உழவுக் கல்வியும் ஒன்றாயமைதல் வேண்டும். இக்காலத்தில் வாழ்க்கைத் தேவைகள் மிகுந்துள்ளன. உழவுத் தொழிலில் வருவாய் குறைவாயிருந்தலினால் வேளாண்மை செய்வோர் ஊதியமிக்க வேறு தொழில்களை விரும்புகின்றனர். இந்நிலை மாறவேண்டும். வருவாய் பெருகத்தக்க முறையில் புதியனவும் சிறந்தனவுமாய வழிகளில் ஊக்குவிக்கவேண்டும்.

கிராமத்தில் எத்தனையோ கைத்தொழில்கள் ஊக்குவாரற்றுக் கிடக்கின்றன. அவற்றுக் கின்றியமையாத மூலப்பொருள்கள் பயன்படுத்துவாரற்றுப் பாழாகின்றன. வெண்ணெய் கையிலிருக்க நெய்யை விலைபேசி வாங்குதல்போல உள்நாட்டில் பொருளை உற்பத்தி செய்யாது அந்நிய பொருள்களை அதிக பொருள் கொடுத்தும் வாங்க ஆசை உண்டாகிறது. நமது கிராமங்களில் காய்ச்சப்படும் பனை வெல்லமும் பனங்கட்டியும் பிறநாட்டுச் சர்க்கரைக்கும் கற்கண்டுக்கும் எவ்வகையிலும் குறைவானவையல்ல. நம் நாட்டு மூலப்பொருள்களைக் கொண்டே நமக்கு வேண்டிய பொருள்களை உண்டாக்குவதனால் நாம் தேடிய செல்வத்தின் பெரும்பாகம் வெளிநாடுகளுக்குச் செல்லாது நமக்கே பயன்படுகிறது. பாயிழைத்தல், கூடைமுடைதல், நெசவுசெய்தல் ஆகிய தொழில்களைச் செய்வார் இன்று அருகி வருகின்றனர். ஒவ்வொரு கிராமமும் தன்னிடமுள்ள மூலப்பொருள்களைப் பயன்படுத்தித் தேவையான எஞ்சிய பொருள்களைப் பண்டமாற்றுமூலம் பெறுமானால் அக்கிராமத்தில் தொழில் வளமும், பொருள் வளமும் என்றும் குன்றாது நின்று சிறக்கும்.

நமது கிராமங்களில் சுகாதார வைத்திய வசதிகள் பெருகவில்லை. நோயைத் தடுக்கும் முறையையும், சுகத்தைப் பேணும் வழியையும் மக்கள் நன்கு அறியார். கிராமச் சங்கங்களினாதரவிலாயினும், கூட்டுறவு முறையிலாயினும் ஆங்காங்கு வைத்தியசாலைகளும் மருந்துச் சாலைகளும், சுகாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்களும் நிறுவப்படல் வேண்டும். ஏழைமக்களை உத்தேசித்து இலவச மருந்துச் சாலைகள் ஒவ்வொரு ஊரிலும் அமைதல் வேண்டும். நாட்டு வைத்தியமாகிய சித்த ஆயுர்வேதக் கலைகளை மக்களும் அரசாங்கமும் ஆதரவுகாட்டி வளர்த்தல் வேண்டும்.

ஒற்றுமையே கிராமத்தின் பலம். ஒற்றுமையற்ற ஊர் எத்துணைச் செல்வம் பெறினும் உயர்ந்தோங்க மாட்டாது. பூசலும் பிணக்கும் ஊரை நாசம் செய்துவிடும். ஊருக்குரிய கருமங்கள் எல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடைபெறல் வேண்டும். "கிராமத்து மக்களிடையேற்படும் சண்டை சச்சரவுகளை அக்கிராம மக்களாலேயே தீர்த்து வைக்கப்படல் வேண்டும். பண்டுபோல் இன்றும் பஞ்சாயத்துக்கள் உருவாதல் வேண்டும். ஊர்மக்களின் மதிப்புக்குப் பாத்திரமானவர்கள் பஞ்சாயத்தில் உறுப்பினராவர். இச்சபை நின்று நிலைபெற்றால் இக்கால நீதித்தலங்களின் வேலை குறையும். வழக்கின் நிமித்தம் கிராம மக்கள் தாம் அரிதிற்தேடிய பெரும் பொருளை அவமே இழத்தலும் ஒழியும். பஞ்சாயத்துச் சபையில் வழக்குக்கள் மிக இலகுவாகத் தீர்க்கப்படுவதினால் மக்களிடையே நட்பும், ஒழுக்கமும் வளர வழி உண்டாகிறது.

இவ்வாறு கிராமம் திருந்திய நெறியில் முன்னேறுமானால் அக்கிராமத்தில் பலவகைத் தொழில்களும் பல்கி நிலைக்கும். நிலைக்கவே பொருள் நிலை செழிக்கும். பொருள் கொண்டு சுகவாழ்வு பெருகும். சங்கங்களின்மூலம் அமைதியும், நட்பும், இன்பமுந் தழைக்கும். கிராமம் சுதந்திர வாழ்வு நிறைந்து ஒளிதரும். அமைப்பிற் சிறியதாயினும் கிராம ராச்சியம் காந்தியடிகள் கற்பித்த இராமராச்சியமாகத் திகழும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

# பழந்துணி

நான் முதலில் புண்ணிய பாரத பூமியில், ஒரு பருத்திச் செடியில் பஞ்சாய் இருந்தேன். காற்றின் மோதுதலால் நான் திசை கெட்டுப் போய்விடாமல் ஒருவர் என்னை எடுத்துப் பாதுகாப்பான இடத்தில் வைத்தார். காற்றிலும் மழையிலும் வெளியிலும் நான் பட்ட கஷ்டத்தைப் பார்த்து என்மீது அவர் இரக்கங்கொண்டாரெனவே நினைத்தேன். ஆறுதல் கிடைத்ததென ஒரு பெருமூச்சு விட்டேன். அடுத்தநாள், நான் கட்டிய மனக்கோட்டைக்கு அழிவுகாலம் வந்தது. பலர் என்னை அடித்தனர். எனது மெல்லிய உடல் மேலும் நைந்து துன்பமுறப் புடைத்தனர். என்னுடனிருந்த வித்தினை வெளியே எடுத்தனர். என்னை அழகான திரிகள்போல ஆக்கிவிட்டார்கள்.

வெட்ட வெளியிலே உல்லாசமாக இருந்த என்னைப் பெட்டியிற் பூட்டினார்கள். பின்பும் விட்டார்களா என்னை யந்திரத்திற் கொடுத்து நூலாக்கினார்கள். யான் நூல் வடிவமானதும் சுற்றியெடுத்தார்கள். வேறோர் இடத்திற்கனுப்பினார்கள். யானும் துன்பம் தொலைந்தது என்று பூரிப்படைந்தேன். எனது புதிய எசமானும் கருணையுடையவர்போற் காணப்பட்டார். என் உடலை நல்ல நிறமூட்டிப் பன்மடங்கு கவர்ச்சியானதாக்கினார். என்னைப்போன்ற பலர் என்னுடன் இருந்தார்கள். அவர்களும் யானும் இன்பமாகக் காலத்தைக் கழித்தோம்.

பல நாட்கள் சென்றன. ஒருவர் என்னை விலைக்கு வாங்கிச் சென்றார். அவர் என்னைக் கொண்டு சென்ற இடம் ஒரு வீடுபோற் காணப்படவில்லை. பரந்த மண்டபம் அது. இரும்பினாற் செய்யப்பட்ட பல பொருள்கள் அங்கே காணப்பட்டன. அந்த இடம் மிக விசாலமாக இருந்தது. என்போன்ற பலர் இரும்பினாற் செய்த அப்பொருள்களில் அகப்பட்டிருந்தார்கள். அவர்கள் என்ன பிழை செய்து இவ்வாறு தண்டனையடைந்தார்களோ என எண்ணினேன். "யான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக அழகுள்ளவள். என்னை இப்படியெல்லாம் துன்பப்படுத்தமாட்டார்கள் எனப் பெருமை கொண்டேன். ஆனால் என்ன நிகழ்ந்தது? என்னையும் ஒரு யந்திரத்திலிட்டார்கள். என் பக்கத்தில் உள்ளவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். ஆறுதலும் அடைந்தார்கள். யான் தலையாரி வீட்டில் ஒளிந்த திருடன்போல விழித்தேன். “என்ன ஆகுமோ”? என்று ஏங்கினேன். உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா? எந்திரத்தில் அகப்பட்ட யான் பல இன்னல்களுக்கு ஆளானேன். வேலை முடிந்ததும், யான் எந்திரத்திலிருந்து விடுதலையடைந்தேன். என்னுடைய பெயரும் மாறிவிட்டது. என்னை நூல் என்று அழைத்தார்கள், யான் எந்திரத்திற் புகுமுன், எந்திரத்திலிருந்து திரும்பியதும் சீலை என்று அழைத்தார்கள். பல துண்டுகளாகத் துணிக்கப்பட்டேன். ஆதலின் துணி என்றும் கிழிக்கப்பட்டேன். ஆதலின் கிழி என்றும், யான் உடுப்பதற்கு ஏற்ற பொருள் ஆதலின் உடை என்றும் பல பெயர்களைப் பெற்றேன். பாடுபட்டால் அன்றே பட்டங்கள் கிடைக்கும்! என்னை அழகாக மடித்து வைத்தார்கள். அதனால் மடி என்றும் அழைக்கப்பட்டேன்.

யான் அதுவரை அடைந்த இன்னல்களையெல்லாம் எண்ணிக்கொண்டும் இனிமேல் என்ன வருமோ என்று பெருமூச்சு விட்டுக்கொண்டும் ஓர் அறையில் படுத்திருந்தேன். பல மாதங்கள் கடந்தன. ஒருநாள் ஒரு பிரபு வந்தார். என் முதலாளியுடன் ஏதோ பேசினார். மறுகணம் என்னைச் சேர்ந்த பலரும் யானும் அப்பிரபுவினுடைய வண்டியில் ஏற்றப்பட்டோம். நாங்கள் போய்ச்சேர்ந்த இடத்திலும் எங்களைப் போன்ற பல்லாயிரவர் கூடியிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் பல்வேறு நிறத்தினர். பல்வேறு இடத்தினர். மகாநாடு நடக்கப் போகிறதோ என எண்ணினேன். ஆனால் அப்படி ஒன்றும் இல்லை. நாம் எல்லோரும் வேற்று நாட்டுக்கு அனுப்பப்படப் போகின்றோமென்பதைப் பின்புதான் அறிந்தேன். சில நாள் கழிந்தபின், நாங்கள் கப்பலில் ஏறினோம். கடற் பிரயாணம் மிக உல்லாசமாய் இருந்தது. இறுதியாகக் கப்பல் கரையை அடைந்தது. எங்களுக்காகப் புகைவண்டி காத்திருந்தது. சிலமணி நேரத்துள் புகைவண்டி எங்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டுவிட்டது. புகைவண்டிப் பிரயாணம் ஒரு நாளுக்குமேல் நீடிக்கவில்லை. எங்களை ஒரு பிரபல வியாபாரியார் வரவேற்றார். நாங்கள் அவருடைய பெரிய மலைபோன்ற மாளிகையில் இடம்பெற்றோம். பருமரத்தைப் பற்றிய பல்லியும் பாழ்போகாதல்லவா? எங்களுடைய இருக்கையும், சிநேகிதர்களும், எல்லாமும் மிக வாய்ப்பாக அமைந்திருந்தன. ஆனாலும் எங்கள் காலம் விடுமா?

ஒருவர் எங்கள் மாளிகைக்கு வந்தார். அவர் கண்கள் பல பொருள்களிலும் சென்றன. கடைசியாக என்னையே எடுத்துக்கொண்டார். எனக்குரிய விலையைக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு என்னை எடுத்துச் சென்றார். அவருடைய மனைவியும் பெண் மகளிரும் ஆவலோடென்னை எடுத்தார்கள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைத்தார்கள்; "எனக்கு எனக்கு" என்று என்னைப் பிடித்து இழுத்து உயிரையே மாய்த்து விடுவார்கள் போற் காணப்பட்டார்கள். தொடக்கத்தில் எனக்கு மிக மதிப்புக் கிடைத்தது. விசேட காலங்களுக்கே என்னை உபயோகித்தார்கள். நாளாக ஆக "ஆறிய கஞ்சி பழங்கஞ்சி" என்பதுபோல் என் புதுமை, அழகு, பெருமையெல்லாம் போய்விட்டன. நாள்தோறும் அவர்கள் கையில் அடிபட்டேன். வண்ணான் என்னைப் படுத்தியது சொல்லுந் தரமன்று. வாரம் ஒருமுறை அவன் வீட்டுக்கு விஜயம் செய்வேன். எல்லோரும் என்னை அடித்து என் உடம்பு நைந்துவிட்டது. அப்பொழுதும் விட்டார்களா? என்னில் ஒரு பக்கத்தால் கிழித்து விளக்குத் துடைக்கவும், திரி திரிக்கவும், பாத்திரம் பிடிக்கவும், இன்னும் பல கருமங்களுக்குக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். யான் இப்பொழுது அழகுக்குரிய பொருளன்று. அழுக்கை நீக்கும் பொருளாகி அழுக்கு மயமாக இருக்கிறேன். என் நாடு எங்கே? யான் இதுவரை அடைந்த இன்னல்கள் எத்துணை? பெற்ற இன்பம் எத்தனை? ஆ! யான் பட்ட துன்பம் யார் இவ்வுலகில் அடைந்தார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22

# தேர்த் திருவிழாக் காட்சி

ஊரை அழகு செய்வது கோயில். "திருக்கோயில் இல்லாத திருவிலூரும்" என்ற பெரியார் வாக்கும் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழியும் இதனை வலியுறுத்தும். கோயிலுக்குச் சிறப்பைத் தருவது திருவிழா. எல்லாக் கோயில்களிலும் ஆண்டுக்கொருமுறை திருவிழா நடைபெறுகின்றது. அத்திருவிழாவில் பெருவிழாவாக விளங்குவது தேர்த் திருவிழாவாகும். தேர்த் திருவிழா எல்லாக் கோயில்களிலும் இறுதி விழாவிற்கு முதன் விழாவாக அல்லது அதற்கு இரண்டொரு விழா முந்தியதாக நடைபெறும்.

நம் நாட்டிலே மணமக்கள் ஊர்வலம் வருவதைப் பார்க்க ஆண்களும் பெண்களும் எத்துணை ஆவலோடு முந்துகிறார்கள்! நாட்டின் தலைவர் அல்லது அரசர் பவனி வருவதைக் கண்டுகளிக்க விரும்பாதவர் இல்லையல்லவா? அரசர்க்கும் அரசரானவரும், எல்லா உயிர்களையும் படைத்துக் காப்பவரும் ஆன இறைவன் தான் எல்லோரும் வாழ வீதிவலம் வருகின்றானென்றால் அக்காட்சியை அனுபவிக்க யார்தான் விழையார்? ஏனைய திருவிழாக்களுக்குச் செல்லாதவரும் தேர்த் திருவிழாவிலன்று அதிகாலையில் எழுந்து விடுவர். அன்று காலையில் சிறுவர்களது உள்ளக் கிளர்ச்சி உச்சநிலையிருக்கும். பெரியவரும் சிறியவரும் ஏழைகளும் நீராடி, தூய ஆடைஉடுத்து, உள்ளும் புறம்பும் தெய்வமணங் கமழக் கோயிலுக்குப் புறப்படுவர். பால், பழம், இளநீர் முதலியவற்றுள் ஒன்றேனுமின்றி ஒருவரும் செல்லார். இவை எல்லாம் இல்லாதவரும் உள்ளன்பொன்றாவது உடையவராய் இருப்பர். இவ்வாறு பலரும் தெருவிலே திரண்டு திரண்டு செல்லுங் காட்சி பார்ப்போர் நெஞ்சிலும் பக்தியை உண்டாக்கும். பல சிற்றருவிகள் ஒரு பெரிய ஆற்றில் கலப்பது போலப் பல வழியிலும் சென்ற பக்தர்கள் ஒரு பெருந்தெருவிலே கூடுவர். வழியிலே காணும் ஆட்டக் காவடியும் பாட்டுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடியும் திரண்ட சனங்களின் செலவைத் தடுத்து இன்பமூட்டும். செல்லும் வழியில் சிலர் பக்தி மேலிட்டவராய் "அரகர வென்றும், அரோஹரா" என்று முழக்கும் அன்பொலி மக்கட் கூட்டத்தை ஆலயம் நோக்கி விரையச் செய்யும். கோயிலின் முழவொலியும், அங்குக் கூடியுள்ள சனசமுத்திரத்தின் பெரு முழக்கமும் அன்பர்களுக்குக் கோயில் அண்மையிலுள்ளது என்பதைக் குறிப்பாலுணர்த்தும். பல தெருக்களிலிருந்து வரும் சனக் கூட்டம் கோயிலில் நிறைந்துள்ள பெருந் திரளுடன் கூடுதல், பல ஆறுகள் சேர்ந்து சமுத்திரத்தில் ஒன்றிக் கலப்பதை நினைவூட்டும்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் வருகின்றவர்களை யெல்லாம் கைகாட்டி, வருக வருக என அழைப்பதுபோல தேரின்மீது கட்டிய கொடிகள் அன்பரைக் காணுந் தோறும் நல்வரவு கூறாநிற்கும். வீதியின் இருமருங்கும் அமைந்த வியாபாரக் கொட்டில்கள் இளஞ் சிறுவர்களின் கவனத்தை ஈர்க்கும். கோயிலுள் புகுவோர் கூட்டமும், மீள்வோர் ஈட்டமும் பொருள் வாங்குவோர் ஒலியும், விற்போர் ஓசையும், பாடுவோர் இசையும் தமரைத் தேடுவோர் விசையும் எத்துணை! எத்துணை!

இறைவன் எழுந்தருளும் தேர்கள் அடிமுதல் முடிவரை அலங்கரிக்கப்பட்டுக் கம்பீரமாக நிற்கும் காட்சி என்னே! சற்றுத் திரும்பிக் கோயிலைப் பார்த்தால், வாயில்களில் குலையும் இலையும் மலிந்த வாழையும், கமுகின் ஓலையும், வனப்புடன் விளங்கும் தோரண வரிசையும், மாலைத் தொகுதியும் எங்கும் நிறைந்து கிடக்கும். கோயிலினுள்ளே சென்றவர்களில் இறைவனை வணங்குவோர் சிலர்; வலம்வருவோர் சிலர்; பாடுவோர் சிலர்; அன்பினால், ஆடுவோர் சிலர். இவரன்றி ஊர்ச் செய்திகளைப் பேசுவோரும் சிலராவர்.

தேர்விழாவன்று சுவாமியைச் சிறந்த முறையில் அலங்கரித்து ஆராதனை செய்வார்கள். உரிய காலத்தில் சுவாமி தேருக்கு வரும். சுவாமி உள்வீதி வலம்வரும்போதும், தேரில் எழுந்தருளி வெளிவீதி வரும்போதும் சுவாமிக்குப் பின்னாகப் பாடிச்செல்வோரும் அங்கப் பிரதட்சணம் செய்து வருவோரும் பலராவர். சுவாமி தேருக்கு எழுந்தருளியதும் ஆராதனை முடித்துத் தேரை இழுக்கத் தொடங்குவர். ஆண்களும் பெண்களும், பெரியர் சிறியர் என்ற வேறுபாடின்றி அன்பாகிய கயிற்றைப் பிடித்திழுக்க இறைவனும் அன்பர்வழிச் செல்வன். தேர் ஊர்ந்தூர்ந்து வரும்போது வீதியில் ஆங்காங்கு வழிபாடுகள் நடைபெறும். மலைபோல அசைந்து வரும் தேரை, இழுத்து மகிழ்வோர் சிலர்: பார்த்து மகிழ்வோர் சிலர். சுவாமியைத் தேரில் வைத்துச் செய்யும் வழிபாடுகளைப்போலவே அவரைத் தேரிலிருந்து இறக்கிச் செல்லும்போதும் ஆங்காங்கு விசேடபூசைகள் செய்யப்படும். அடியார்களின் அன்பு மலர்களை ஏற்றுக்கொண்டு இறைவன் கோயிலுட் புகுவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர் இருப்பிடத்துக்கு வந்ததும் அன்பர் கூட்டம் வீட்டுக்கு மீளத் தலைப்படும். யாண்டும் ஒரு பரபரப்பு ஏற்படும். வீட்டுக்குப் போக விரைவர். வீபூதி முதலியன பெறுதற்கு விழைவார்; பல்வகைப் பொருள்களையும் வாங்க ஓடுவார். கூடுவார். இவ்வித நிலை மெல்லமெல்லக் குறைந்து போம். வீடு திரும்பும்பொழுது ஒவ்வொருவரும் ஏதாகிலும் கொண்டு செல்வர். அனால், கோயிலுக்குப் போகும்போதுள்ள உவகையும் உள்ளக்கிளர்ச்சியும் வீட்டுக்குப் மீளும்போது காணப்படுவதில்லை. எல்லோரும் தேர்த்திருவிழாவில் தாம் தாம் கண்ட காட்சிகளை வியந்தும், நயந்தும் பேசி உடற்களைப்பையும் உள்ளச் சோர்வையும் நீக்குவர். உண்மையன்பர்களுக்கு இறைவனது தரிசனமும், தேர்க்காட்சியும் ஒவ்வொரு நாளும் நினைவில் நின்று இன்பமூட்டும். பொருள்கள் வாங்கினோர் அப்பொருள்கள் மூலம் தேர்த் திருவிழாவை நினைவு கூர்வர். சிறுவர்கள் தாம் பெற்ற விளையாட்டுப் பொருள்கள் சிதைந்ததும், அடுத்த தேர்த் திருவிழாவை எதிர்நோக்கியிருப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

## எனது அச்சம் நிறைந்த அனுபவம் ஒன்று

இது நிகழ்ந்து பல வருடங்கள் ஆகின்றன. அனாலும் நேற்று நடந்ததுபோல நினைவில் புதிதாய் இருக்கின்றது. அனுபவத்தின் அடிச்சுவடு இன்னும் அழியவில்லை. நமக்கு ஏற்படும் ஒவ்வோர் அனுபவமும் துன்பத்தையோ இன்பத்தையோ தருவதோடு நம் மனத்தின் வன்மை மென்மைகளைச் சோதிக்கும் உரைகல்லாகவும் அமைந்துவிடுகின்றது.

முன்னொரு நாள் நானும் என் நண்பனும் துவிச்சக்கரவண்டியில் அனுராதபுரத்தினின்று திருக்கோணமலைக்குச் செல்லும் பிரதான வழியில் சென்றுகொண்டிருந்தோம். நேரம் முன்னிரவு; வழிச்செலவை மகிழ்ச்சியூட்டும் மலர்ந்த நிலவு, மெல்லென வீசிய காற்று எங்கள் போக்கிற்கு இதஞ் செய்தது. பயங்கரமான காட்டின் மத்தியில் செல்கின்றோம் என்ற நினைவே நமக்கில்லை. உல்லாச யாத்திரை செய்தோம். பின் வரும் துன்பம் முன்னதாக அறியும் வண்ணம் நமக்கிருப்பின் நாம் இன்பம் அனுபவித்தற்கே இடமிருக்காதன்றோ! நாம் செல்லும் திசையில் சற்றுத் தூரத்தில் ஒரு கறுத்த உருவம் புலனாகியது. காட்டுவழியில் எருமைகள் காணப்படும் என்ற கருத்தோடு கவலையின்றிச் சென்றோம். உண்மை அவ்வரில்லை! அண்மையில் வந்ததும், கண்ணுக்குத் தெரிந்தது எருமையன்று, யானைக் கன்று என்று கண்டோம். இனிச்செய்வதின்னதென்று தெரியவில்லை. அச்சமும் சிந்தனையும் வேகமாக வேலை செய்தன. கன்றின் தாய் அண்மையில் நின்றதும் தெரிந்தது. மறுவினாடியில் அந்த யானை மரங்களை முறித்து நிலமதிர வருவதும் கேட்டது. "நாம் அகப்பட்டு விட்டோம்; இனி ஓடிப் பயனில்லை" என்றேன். வண்டியிலிருந்து குதித்தோம். கைவிளக்கை எடுத்துக்கொண்டு காட்டுக்குள் ஓடினோம். ஒருவருக்கு ஒருவர் உதவநேரமில்லை. யானை எங்கள் வண்டிகளை உடைத்து முறிக்கும் ஒலி கேட்டது. எனது அச்சம் மேலும் மிகுந்தது. மேலும் ஓடினேன். மிக்க தூரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிவிட்டேன். கால்கள் களைத்துவிட்டன தளர்ந்து தடுமாறின. மரத்தைச் சார்ந்து சற்று இளைப்பாறினேன். மரங்களில் அடிபடாமலும், வழியில் பாம்பொன்றையும் மிதியாமலும் வந்தது மிக ஆச்சரியமாயிருந்தது.

இரவு அதிகநேரம் ஆய்விட்டது. அப்பாற் செல்ல மனம் மறுகியது. ஓர் அச்சம். முள்ளும் புதரும் பாராமல் என்னை ஓட வைத்தது. மற்றோர் அச்சம், கொடிய விலங்குகளை நினைவுறுத்தி இடம் பெயராமற் றடுத்தது. இடையிடையே நான் நின்ற இடத்தின் வடபுறமாக ஒரு பயங்கரச் சத்தம் கேட்டது. நரியூருக்குப் பயந்து புலியூருக்கு அல்ல – புலியின் பக்கமாகவே வந்துவிட்டேன்! என்ன செய்யலாம், ஒரு மரத்தைப்பற்றி மேலே ஏறினேன். சுவர்களுக்கிடையே அமைதியாக இருந்து கொண்டேன். நாற்புறமும் எத்தனை ஒலிகள்! காட்டு மிருகங்களின் பயங்கர உறுமல்கள்! நீண்ட நேரமாகியும் இரவு விடிவதாய் இல்லை.

*"அரவங் கரத்ததோ அச்சுமர மிற்றுப்*
*புரவி கயிறுருவிப் போச்சோ இரவிதான்*
*செத்தானோ வேறெங்கு சென்றானோ ஐயகோ*
*எத்தால் விடியும் இரா"*

என்று எண்ணியவரிருந்தேன். இரவின் கொடுமையை அன்றுதான் அறிந்தேன். ஒரு நிமிஷம் ஒரு யுகம்போலானது. திசை தெரியாமல் சுற்று முற்றும் பார்த்தேன். ஒரு பக்கத்தே வானம் வெளிப்பதுபோல் காணப்பட்டது. விடிவு நெருங்குவதை ஆவலோடு கண்டேன். இருளும் மெல்லத் தன்கோபந் தணிந்தது. என் மனவிருளும் மெல்ல நீங்கத் தலைப்பட்டது.

ஆருமற்ற இடத்தில் எனக்கோர் தோழன்போல ஆதவன் கீழ்த்திசைத் தோன்றினான். யானும் வழியறிந்து செல்ல முயன்றேன். செல்லும் வழியெல்லாம் நல்ல வழியென்று நம்பினேன். களைப்பும், பசியும் என்னை வாட்டின. சற்றுத்தூரம் சென்றதும், சலசலவென்றிழியும் சிற்றருவியின் ஒலி காதிற்பட்டது. காட்டு வழியில் தனித்துச் செல்லும் அந்தத் தெண்ணீர் அருவி எனக்கு உண்ணீர் தந்து ஊக்கமளித்தது. அருகிருந்த கற்பாறையிலமர்ந்து களைப்பாற்றினேன். பூங்குயிலின் தீங்குரலும், புதர்களின் சிரிப்புப் பூமணமும் பரவசப்படுத்தின.

தண்ணீர் தந்த தைரியத்தால் நடக்கத் தொடங்கினேன். வழியிலே அங்குமிங்கும் பன்றிகள் காணப்பட்டன. கீழ்நோக்கியவண்ணம் அவை சென்ற காட்சி என்னைப்போல் அவையும் வழிதவறி அலைவது போலவும், உண்மை வழியை நாடி இன்னும் உழல்வதுபோலவும், காணப்பட்டது. மரங்களில் தாவும் மந்திகள் நான் உண்ணத்தகும் பழங்களும் காய்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையென்று தாம் உண்டு காட்டின. கதிரவன் மெல்ல மெல்ல மேற்கே சாய்ந்தான். ஆனாலும் என் அலைவிற்கு ஓய்வு ஏற்படவில்லை.

இவ்வாறு எத்தனை நாள்கள் கடந்தன என்று கூறல் முடியாது. நாட்டில் வாழ்பவருக்குத்தான் நாளும் கிழமையும் உண்டு. காட்டில் வாழ்பவர் கதிரவனைக்கொண்டு பகலையும், சந்திரனைக் கொண்டு மாதத்தையும் கணிப்பர். எனது வனவாசம் ஒரு மாதத்திற்கு மேலும் நீண்டது. என் உடலும் மெலிந்துவிட்டது. அணிந்த ஆடைகள் முள்ளிலும் புதரிலும் பட்டுக் கிழிந்துவிட்டன. முகத்துமயிர் அடர்ந்து வளர்ந்துவிட்டது. இக்கோலத்துடன் ஒருநாள் ஒரு தெருவில் வந்து ஏறினேன். அதிர்ஷ்டவசமாக அப்பொழுது ஒரு பிரயாண வண்டியும் வந்தது. அதை மறித்து ஏறினேன். என்னை ஒரு பிச்சைக்காரனென்றே எல்லோரும் நினைத்தனர். எனது கிழிந்த உடையும் பொலிவிழந்த கோலமும் அவர் எண்ணத்திற்கிசையப் பொய்ச்சாட்சி கூறின. பணத்தைக் கொடுத்து இடத்தில் அமர்ந்தேன். பக்கத்தில் இருந்தவர் பழக்கமானவராயினும் என்னை அறிந்து கொள்ளவில்லை. தூய்மையற்ற கோலத்தைக் கண்டு அவர் தூர அமர்ந்தார். வண்டியிலிருந்து இறங்கும்வரை நான் என்னை வெளிப்படுத்தவில்லை. குறித்த இடம் வந்ததும், கூடவே இறங்கினேன். அவர் தோளைத் தட்டிச் சுகம் விசாரித்தேன். காசு கேட்பதற்குப் (பிச்சைக்காரன்) பாசாங்கு செய்கிறான் என்றெண்ணி நண்பர் விரைந்தார். நானும் விடவில்லை. உண்மையை அறிந்ததும் திகைத்தார் உரிமை பாராட்டி உற்றது கேட்டார். ஆறுதலாகச் சொல்ல வேண்டும் என்று அழைத்துச் சென்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24

# நூல் நிலையம்

மக்களுக்கு உணவு இன்றியமையாதது போலக் கல்வியும் இன்றியமையாததே. உணவு உடலை வளர்ப்பது; கல்வி அறிவை வளர்ப்பது. உணவுக்குரிய பொருள்கள் குறைவில்லாதிருக்க நமது அரசாங்கம் பல முயற்சிகள் செய்கின்றது. நாகரிகம் மிக்க நாடுகளில் உணவு விருத்தி செய்வது போல, கல்வி வளர்ச்சி பேணுதலிலும் பல முயற்சிகள் நடத்தப்படுகின்றன. ஊருக்கொரு பள்ளிக்கூடம் நிறுவுகிறார்கள். ஆங்காங்கு நூல்நிலையங்களையும் அமைக்கிறார்கள். பள்ளிப்படிப்புக்கு அங்கமாகப் பல நூற்படிப்புப் பயன்படுகிறது. பள்ளிப் படிப்பிற் குறிப்பிட்ட சில நூல்களே இடம்பெறுகின்றன. அவற்றை மாத்திரம் கற்று ஒரு மாணவன் வல்லவன் ஆகமாட்டான். பாட நூல்களோடு அவற்றுக்குத் துணையான நூல்களையும் கற்கவேண்டும். ஒவ்வொரு துறையிலும் பரந்த அறிவைத் தருவது நூல்நிலையப் படிப்பே.

நம் நாட்டில், கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலுமே நூல்நிலையங்களைக் காண்கின்றோம். அந் நிலையங்கள் கல்வித்துறை அதிகாரிகளின் திட்டத்திற்கியைய அமைந்தனவாகும். மாணவர்கள் பல பிறநூல்களையும் கற்க வாய்ப்பளிப்பதற்காக அவை ஏற்படுத்தப்பட்டன. அந்த நோக்கத்தை மாணவர் பலர் அறிவதில்லை. தக்க முறையில் நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதுமில்லை. பாடப்பகுதிகளை மாத்திரம் படித்தால்; அதுவே போதுமானது என அமைகின்றனர். அதனால் அவர்கள் கல்லூரியைவிட்டு வெளியேறும் காலத்தில் தேர்வுக்குப் படித்தவை தவிர ஏனையவற்றில் சிறிதும் தெரியாதவராய் வாழ்க்கையைத் தொடங்குகின்றனர். ‘நூலளவேயாகுமாம் நுண்ணறிவு’ என்பதையறியாது, தேர்வில் வெற்றி பெறுதலையே கல்வியின் முழுநோக்கமாகக் கொண்ட மாணவர், பட்டங்கள் பல பெற்றாராயினும் கல்வியின் பயனை அடையாதவரேயாவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் பள்ளிப் படிப்போடு கல்வி முடிகிறதென எண்ணுகின்றனர். 'கல்வி கரையில கற்பவர் நாள் சில' என்பது பெரியார் வாக்கு. அறிவினால் மற்றைய உயிர்களைவிட மேலானவனாகக் கருதப்படும் மனிதன், என்றும் தன்னறிவை வளர்க்கும் வாய்ப்புடையவனாய் இருக்கின்றான். 'கல்லாக் கழிப்பர் தலையாயர்' என்ற நாலடியார் கூற்றிற்கியைய நம் முன்னோர்கள் சாத்துணையும் கல்வியை வளர்த்தார்கள். இன்றும் மேனாட்டவர் பலர் கல்வியிலேயே காலத்தைக் கழிக்கிறார்களே. மேனாடுகளில் ஊருக்கு ஊர், நகருக்கு நகர் நூல் நிலையங்களை நிறுவி அவற்றால் எத்தனையோ பேர் பயனடைகின்றார்கள். வாழ்க்கையில் ஈடுபட்டோர் பலர் வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் நூல்நிலையம் செல்கின்றனர். பகல் முழுவதும் தொழில் செய்து களைத்தோரும், இரவில் பல நூல்களையும் படித்து, தங்கள் வாழ்வை உயர்த்துகின்றனர். நம் நாட்டிற் காண்பதென்ன? சில ஊர்களில் மாத்திரம் நூல் நிலையங்கள் உள்ளன. அவைகள் தாமும் பெயரளவிலேயே. சில பத்திரிகைகளும் சில நூல்களும் அங்கே காணப்படும். அந்நிலையங்களை வாசிகசாலைகள் என அழைத்தலே பொருந்தும். அங்கே படித்துப் பயன் பெறுவோர் சிலர்; பேசிப் பொழுது போக்குவோர் பலர். நூல்களைத் திரட்டவோ பாதுகாக்கவோ, அவற்றைப் பயன்படுத்தவோ யாரும் அறியார். பிறநாட்டார் சிறப்பாக மேனாட்டார் நூல்நிலையங்களின் பயனை நன்கு அறிந்தவர். நூல்நிலையங்களைப் பயன்படுத்துவோர் பலராதலாலும், அவரும் பலதிறத்தாராதலாலும், அவ்வெல்லோருக்கும் ஏற்ற பல புதிய வழிகளால் நூல்நிலையத்தைப் பயன்படுத்துகின்றனர். சில ஊர்களில், வீடுவீடாகச் சென்று நூல்களைக் கொடுத்து வாங்குகின்றனர். மக்களுக்குத் தேவையான நூல்களை வண்டிகளில் ஏற்றி இருநாளுக்கொருமுறையாக அல்லது வாரத்துக்கொருமுறையாக ஊர் சுற்றுவர். இவ்வித ''ஊரும் நூல்நிலையங்களால்'' முதியோரும் உடல் தளர்ந்தோரும் பெரிதும் பயன் அடைவர்.

நடுத்தர வகுப்பினர்க்கும் கீழ்த்தரத்தினர்க்கும் பொது நிலையங்கள் இன்றியமையாதனவே. பெருஞ் செல்வர்கள் தம் வீட்டிலேயே நூல் நிலையம் அமைத்துக்கொள்ள முடியும். உணவறை, படுக்கையறை முதலியன எல்லார் மனையிலும் இருத்தல்போல, கற்ற செல்வர் மனைகளில் நூல்நிலையமும் தனியிடம் பெற்றிருக்கும். அஃது அவர் பின்னோர்க்களுக்கெல்லாம் பெருமையையும், கல்வியில் நாட்டத்தையும் ஊட்டாநிற்கும். எல்லோர் இல்லிலும் நூல்நிலையம் இருப்பது நல்லதாகும். சிறிய அளவிலாயினும் இருப்பின் அஃது இல்லிருப்போரது அவப்பொழுதைத் தவப் பொழுதாக்கும். 'அரிசிப் பொரியோடு திருவாரூரும்' என்றபடி பொழுதுபோவதோடு அறிவும் பெருகும். அறிவு நிறைந்த பெற்றோர்கள் தம் சிறுவரும் நுண்மதியுடையராய் இருக்கக் காண்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்கள் நான்கும் நேராக அமைந்தாற்றான் நாற்காலி நேராக நிற்கும். கல்விக்குத் துணையான நூல்நிலையங்களும் யாண்டும் செவ்விதின் அமைந்து உயர்ந்தாற்றான் மக்களினம் மாட்சி மிகுந்ததாகும். கல்லூரிகளிலும், நகரங்களிலும், ஊர்களிலும், ஒவ்வொரு இல்லத்திலும் நூல்நிலையம் விளங்க வேண்டும். இவ்வித விளக்கம் உள்ள நாடுதான் அறிவிலும் பண்பாட்டிலும் மேம்பட்ட நாடு என்று அழைக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25

# தந்தை தாய் பேண்

நமக்கு என்றும் இனியவர் தாய் தந்தையரே. அவர்களை விடச் சிறந்தவர் நமக்கு யாரும் இல்லை. ஆசிரியரும் தெய்வமும், அரசனும் அவர்களுக்குப் பின்னவரே. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றும் 'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை' என்றும், 'தந்தை சொன் மிக்க மந்திரமில்லை' யென்றும் முன்னோர் கூறிய முதுமொழிகள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். பெற்றோர்கள் நமக்குச் செய்யும் உதவியும், அவர்கள் காட்டும் அன்பும் நம்மால் இவ்வளவென்று கூறமுடியாதன.

நம்மைப் பெறவேண்டுமென்று நம் பெற்றோர் பல விரதங்களை மேற்கொண்டார்கள்; பல யாத்திரைகள் செய்தார்கள்; அல்லும் பகலும் இறைவனை நினைந்து தவங்கிடந்தார்கள். பெறுமுன் அவர்களுக்கிருந்த ஆசை எத்தனை! பெற்றபின் அருமையாகவும் பெருமையாகவும் போற்றினார்கள். நம்மீது ஈ, கொசு, எறும்பு மொய்க்காமல் காத்தார்கள். வேளையறிந்தும் விருப்பம் தெரிந்தும் நமக்கு வேண்டிய உணவுகளைத் தந்தார்கள். நமக்கு நோய் ஏற்பட்டால் அவர்கள் அடைந்த அல்லலும் கவலையும் அளவிடத் தக்கனவல்ல. நாம் பருவமானதும் நம்மைப் பள்ளிக்கனுப்பினார்கள். நாம் கற்று வல்லவர்களாவோம் என்றும், உயர்ந்த பதவிகளை அடைவோம் என்றும் நம் நல்வாழ்வையே எண்ணி எண்ணி இன்பங் கொண்டார்கள். தம்முடைய பசியையும் தேவைகளையும் பொருட்படுத்தாது நம்மிலேயே கண்ணாயிருந்து காத்தார்கள். அவர்கள் அன்பும் தியாக சிந்தையும் எத்துணை! எத்துணை!!

வாழ்நாள் முழுவதும் நமக்காகவே பாடுபட்ட நம் அருமைப் பெற்றோர்களை, கண்கண்ட தெய்வமாகவன்றோ போற்றவேண்டும். அவர் சொல்லுக்கிணங்க நடக்க வேண்டும். அவர்க்கு வேண்டுவனவற்றை குறிப்பாலறிந்து செய்ய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்றபடி அவர் ஏவாமலே நாம் எல்லாம் செய்தல் வேண்டும். நமது பணியையும் அன்பையும் கண்டு அவர்கள் மனமகிழும்படி நாம் நடக்கவேண்டும். பிற்காலத்தில் தமக்கென ஒன்று குறியாது நம்மையே தம் பெருஞ்செல்வமாகப் பாதுகாத்த நம் தாய் தந்தையரை நாம் எக்காலத்தும் பேணவேண்டும். முதுமை வந்து உடல் தளர்ந்த காலத்தில் அவர்கள் தேவையை அவரிருக்குமிடத்தே உதவி, அவர் உடலும் உள்ளமும் நோவாமல் காக்க வேண்டும்.

சிலர் தம் முதிய பெற்றோர்களை விட்டுவிட்டு, தாம் தம் மனைவி மக்களோடு தனியாக வாழ்கின்றனர். பிள்ளைகளை அருகில் வைத்திருக்கப் பெறாத பெற்றார் மற்றவர் கையை எதிர்பார்த்து மனம் வாடுவர். இன்னல்களையும் இன்னாதவற்றையும் பொறுத்துத் தம்மை வளர்த்த பெற்றோர் முதுமையடைந்ததும் அவரைப் பாதுகாத்தலும், கூட வைத்திருந்தலும் இளம் புதல்வர் சிலர்க்குப் பெரிதும் துன்பமாகத் தோற்றுகின்றன. மேலும் அவ்வறிவில் இளையார் மனம் கோணாதும் வாய் காவாதும் ஏசவும் கண்டிக்கவும் தலைப்படுகின்றனர். பாடுபட்டு வளர்த்த பெற்றோர்களது அன்பும் நன்றியும் அரும்பண்பும் மறந்து, அவரைப் பகைவரைப் போலக் கருதி நிந்தித்தல் எத்துணைக் கொடுமை! கொடுமை!! 'தாய் தெருவில் பிச்சைக் கலைகிறாள்; தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்' என்பதுபோல சிலர் தம் முதிய தாய்தந்தையரை அலைய விட்டுவிட்டுத் தாம் புண்ணிய தலங்களுக்குப் போய்த் தான தருமங்களைச் செய்ய விரும்புகின்றனர். தாய் தந்தையரினும் மிக்க தெய்வம் இல்லை என்பதும், தாய் தந்தையரைப் பேணுதலில் மிக்க தவம் இல்லை என்பதும் அவர் அறியார் போலும்!

முற்காலத்திலும் இக்காலத்திலும் தாய் தந்தையரை மதித்து நடந்த பெரியோர் பலரது சரித்திரங்களைக் கேட்கிறோம். இராமன் தன் தந்தையின் சொல்லைச் சிரமேற்கொண்டு நாட்டை வெறுத்துக் காட்டை விரும்பினான். பீஷ்மன் தன் தந்தையின் கருத்துக்கியையத், தன் இன்ப வாழ்வை உதவி அழியாப் புகழ் கொண்டான். காந்தியடிகள் தாயின் சொல்லைக் காத்து நடந்து வாழ்நாள் முழுவதும் ஒழுக்க சீலராய் 'மகாத்மா' ஆனார். தவத்தோர் பலர் உலக வாழ்வைத் துறந்தும் தாய் தந்தையரை மறந்திலராய் அவர்க்குச் செய்யும் கடமைகளைச் செவ்விதின் ஆற்றியுள்ளார்கள். நூல்கள் எல்லாம் தாய் தந்தையரைப் போற்றுதலையே பெருந்தவமாகவும், உயரிய கடமையாகவும் சிறப்பித்துக் கூறுகின்றன. பாவங்களில் மிக்கது நன்றி மறத்தல். தாய் தந்தையர் செய்த நன்றியை மறத்தல் மிகப் பெரும் பாவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

## ஒரு பிச்சைக்காரனின் பகற் கனவு

ஒருநாள் நடுப்பகல், கொழுத்தும் வெயிலில் ஒரு பிச்சைக்காரன் நொண்டி நொண்டி இரந்து திரிந்தான். ஒரு பெரிய மாடிவீட்டு முன்புபோய், "அம்மா, பசிக்குதே" என்று இரக்கந் தரும் குரலில் விளித்தான். அந்த வீட்டு முற்றத்திலே மங்கையொருத்தி இரண்டு சடை நாய்களுக்கு விஸ்கோத்து, அப்பம், பொரியல் என்பனபோட்டு விளையாடிக் கொண்டிருந்தாள். பிச்சைக்காரன் அந்தப் பெண்ணைப் பார்த்து, "அம்மா, பசி தாங்க முடியவில்லை. பழைய உணவு ஏதும் இருந்தாலும் தாருங்கள்; நீங்கள் மகராசியாய் இருப்பீர்கள்" என்று கூறினான். அப்போது அந்தப் பெண் "அடே! இங்கே நில்லாதே. நின்று சத்தமிட்டாள். உஸ்" என்று நாய்களை ஏவினாள். பிச்சைக்காரன், நடுநடுங்கி, "அம்மா, பிச்சை வேண்டாம்; நாயைப் பிடியுங்கள்" என்று அலறினான். பின் அவ்விடம் விட்டு நீங்கிச் சென்றவன் பசிக் களையினால் பக்கத்திலுள்ள ஒரு மடத்திற் படுத்துக் கண்ணயர்ந்தான்.

"கார்த்திகேயர் நரேந்திரன் நீதானா? உனக்குக் குதிரைப் பந்தயச் சங்கத்திலிருந்து வந்த கடிதம் இது" என்று கூறித் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். கடிதத்தைத் திறந்தான் பிச்சைக்காரன். ஓரிலக்கத்து எண்பத்தையாயிரம் ரூபா அதிட்டப் பணமாக வந்திருப்பதைக் கண்டான். இந்தச் செய்தி பத்திரிகைகளிலும் பிரசுரமானது. நரேந்திரன் அப்பணத்தைப் பெற்றான். முதலில் மின்சார சிகிச்சை மூலம் பாரிசவாத நோயைக் குணப்படுத்தினான். முன்னாக கடன்காரர் பறித்த தன்னுடைமைகள் அனைத்தையும் மீட்டான். அழகும் இளமையும் தவழும் நரேந்திரனுக்குப் பெண் கொடுக்கப் பலர் போட்டியிட்டு முன்வந்தனர். தன் விருப்பப்படி ஓரழகிய குணவதியை நரேந்திரன் மணந்தான். மங்கலமனைக்கு நன்கலமாகிய மக்கட் பேறும் வாய்த்து மதிப்புடன் வாழ்ந்த நரேந்திரன் புலவர் பாடும் திறமும் பெற்றான். பசித்து வந்தோர் முகமும் வாடாது அகங் குளிர விருந்தளித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பிச்சைக்காரர் பலரும் உணவருந்தி மகிழ்வாராயினர்.

நரேந்திரன் இல்லம் பிச்சைக்காரர்களின் சொந்த வீடுபோலானது. ஒருநாள் பலவிடங்களிலுமுள்ள பிச்சைக்காரர்களை அழைத்து சபை கூட்டி நரேந்திரன் பின்வருமாறு பேசினான்.

"அன்பார்ந்த சகோதரர்களே! சகோதரிகளே! நும் அனைவருக்கும் எனது தாழ்மையான வணக்கம். நாமும் மற்றவர்களைப்போல வாழப் பிறந்தவர்களே. மேலைத்தேசங்களில் நமது நிலையை எய்திய மக்களை அரசாங்கம் உணவு, உடையுதவி ஆதரிக்கின்றது. முதியோர் விடுதிகள், வேலைசெய்யச் சக்தியற்றோர் உறைவிடங்கள் பல அத்தேசங்களில் உள்ளன. உறுப்புக் குறைபாடுள்ளவர்களும் இயன்ற தொழில் செய்வதற்குப் பயிற்றப்படுகிறார்கள். இத்தகைய வாய்ப்புக்கள் நமது நாட்டில் நமக்கு ஏன் அளிக்கப்படமாட்டா"

இந்தக் கூட்டத்தைப் பார்ப்பதற்கு பெரிய பணக்காரரும் ஊரிலுள்ள பலதரப்பட்ட மக்களும் வந்து சூழ்ந்திருந்தார்கள். முன்னே நரேந்திரனைத் துரத்தியவர்கள் கூட அவனில்லஞ் சென்று பலபல உதவிகள் பெற்றனர். அவர்களனைவரையும் பார்த்து நரேந்திரன் கூறினான். "பெரியோர்களே! ஆதரவற்ற காரணத்தினாலே நாங்கள் பசிக்கொடுமை தாங்கமாட்டாது உங்கள் மாளிகைகளுக்கு அடிக்கடி வருவோம். வறிய மக்கள் பலரும் நமது நிலைமைக்கு இரங்கி அன்பு காட்டி இயன்ற உதவி புரிந்தனர். 'பாம்பின் காலைப் பாம்பொன்றே அறியும்' பணக்காரர் – எல்லோரையும் குறிப்பிடவில்லை–புதுப்பணம் படைத்தவர்கள் தலைக்கிறுக்கினால் நாய்களைப் போலவேனும் நம்மை மதிக்கவில்லை. இங்கிலீசுத் தூஷணங்களால் வசைமாரி பொழிவார்கள் பலர். எங்கள் பிச்சைப் பாத்திரத்தில் கல், உமி, வாழைப்பழத்தோல் இட்ட மகானுபாவர்களும் சிலர் இருக்கிறார்கள். பெரியோர்களே! 'வேண்டுமென்று நான் குறை கூறுகிறேன் அல்லேன். நீங்கள் அனுபவிக்கும் செல்வம் பிறக்கும்பொழுது கொண்டு வந்ததில்லை; இறக்கும்போது கொண்டுபோகப் போவதும் இல்லை. இஃது எம்பெருமான் தந்ததென்று கருதி இல்லோர்க்கும் எல்லோர்க்கும் மனங்குளிரக் கொடுங்கள். எல்லோரும் வாழவேண்டும். இன்பம் சூழவேண்டும் என்ற நல்லெண்ணம் உங்கள் உள்ளத்தில் நிலைப்பதாக. செல்வமும் வறுமையும் நிலை நில்லாது மாறி மாறி வரும். குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர். குன்றத்தனையிரு நிதியைப் படைத்தோர் அன்றைப் பகலே அழியலும் அழிவர். செல்வம் பெற்ற பயன் இல்லார்க்கு உதவுதலேயாகும். போனது போகட்டும். இனியாவது பகுந்துண்டு பல்லுயிர்களையும் ஓம்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக வாழ அம்மையப்பர் உமக்கு அருள் புரிவாராக" என்று கூறிய நரேந்திரன் பிச்சைக்காரரைப் பார்த்துத் தொடர்ந்து கூறுவானாயினான்.

"மக்களனைவருக்கும் உணவும் உடையும் பிறவுமெல்லாம் ஒரே அளவினவே. அவ்வாறிருக்கச் சிலர் செல்வக் கடலில் திளைத்துச் செருக்கி, உண்ணும் உணவு சமிக்கப் பெறாது புளியேப்பம் விடுகிறார்கள். பலர் வறுமையென்னும் அல்லற்கனலில் துடித்துத் தவித்துக் கொதிக்கிறார்கள். மக்களனைவருக்கும் எல்லா வசதிகளும் கிடைக்கச் செய்வது அரசாங்கத்தின் கடமை. அடிமையென்றும் ஆண்டியென்றும் இகழும் நிலையிலுள்ள சமூக அமைப்பை மாற்றுவோம். தனியொருவனுக் குணவில்லை யெனில் சகத்தினை அழிப்போம். மக்கள் சிலர் இரந்துண்டும் உயிர் வாழவேண்டும் என்ற கொள்கையோடு இறைவன் அவர்களைப் படைத்தானாயின் அவ்விறைவனே கெட்டொழிந்து போகக் கடவன் நண்பர்களே, நமது குறைகளை அரசாங்கத்துக்கு முறையிடுவோம். எங்கள் சமூகத்தின் சார்பாகப் பாராளுமன்றத்தில் ஒரு பிரதிநிதியை வற்புறுத்துவோம். நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று முழங்குங்கள்" என்று கூறிக் கைகளை ஒன்றோடொன்று புடைத்து "ஜே ஜே" என்று உரக்கக் கூவினான்.

அப்போது மடத்திற் சீட்டாடிக் கொண்டிருந்தவர்கள் சிரித்துச் சத்தமிட்டெழுப்பியபோதுதான் அந்தப் பிச்சைக்காரன் மடத்தின் தாழ்வாரத்தில் அந்த வெயில் கொளுத்தும் உச்சிவேளையிற் கிடப்பதையும் தான் கண்டது கனவென்பதையும் உணர்ந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்
## கட்டுரைகள்

சுழிபுரம் பொன்னாலையம்பதியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையை வசிப்பிட மாகவும் கொண்ட அமரர் வித்துவான் **பொன். முத்துக்குமாரன்** BOL அவர்களின் நூற்றாண்டு நினைவு வெளியீடு. தமிழ் அறிஞர் பொன். முத்துக்குமாரன் அவர்கள் சிதம்பரம் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டத்தையும் (1943), அப் பல்கலைக் கழகத்தில் BOL (1952) பட்டத்தையும் பெற்றவர். இவர் தமிழகத்தில் தமிழ்ப் புலமையிற் பேரும் புகழும் பெற்றிருந்த மகாமகோ பாத்தியாய, முது பெரும்புலவர், பண்டிதமணி, மு. கதிரேசன் செட்டியார், மற்றும் சொல்லதிகார விளக்கப் புலமை மிக்க பூவராகம்பிள்ளை போன்ற புலவர் பெருமக்களிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களை மரபு நெறி தவறாது பயின்றவர்.

இவ்வறிஞர், தமிழில் நல்ல கட்டுரைகள் எழுதுவதற் கென்று படைத்த "**மாணவர் கட்டுரைகள்**" என்ற இப்புத்தகம் 1957ம் ஆண்டு, யாழ்ப்பாணம் ஆனந்தா அச்சகத்தின் திரு. தி. ச.வரதராசன் அவர்களால் வெளியிடப்பட்டது.

இதன் மூன்றாம் பதிப்பை, அறிஞர் பொன். முத்துக் குமாரன் பிறந்த நூற்றாண்டு நினைவுக்காக வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றோம்.

**முத்துக்குமாரன் தயாநிதி**
மகேஸ்வரி வெளியீடு
சிட்னி, அவுஸ்திரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org